விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 05 வியாழக்கிழமை (18.04.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 120

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சிமெந்து (O.P.C.) ராம்கோ சிமெந்து
RAMCO

## பெங்களூரில் நேற்று தொடர் குண்டு வெடிப்பு



(பெங்களூர்)

பெங்களூரில் நேற்று அடுத்தடுத்து இரண்டு குண்டவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 13 பேர் காயமடைந்துள்ளனர். அடுத்தடுத்து குண்டு வெடித்ததால் பெங்களூர் முழுவதும் பொலிஸார் சோதனையில்ஈடுபட்டுள்ளனர். நேற்று காலை 10.30 மணியளவில்மல்லேஸ்வரத்தில்உள்ளபாஜகதலைமை அலுவலகத்தின் வெளியே மோட்டர் சைக்கிளில் (20ஆம் பக்கம் பார்க்க)

# மின்சாரக் கட்டணங்களை உயர்த்துவதற்கு அனுமதி

ELECTRICITY TARIFFS (Effective from April 12, 2013)

| Customer Category and Consumption | Energy Charge (LKR/kWh) | Fixed Charge (LKR/month) | Fuel Adjustment Charge (% of Total Energy Charge) |
|---|---|---|---|
| Domestic (D-1) | | | |
| 0-30 | 5.00 | 30 | 25 |
| 31-60 | 6.00 | 60 | 35 |
| 61-90 | 8.50 | 90 | 40 |
| 91-120 | 16.00 | 315 | 40 |
| 121-180 | 20.00 | 315 | 40 |
| 181-210 | 24.00 | 315 | 40 |
| 211-300 | 26.00 | 315 | 40 |
| 301-900 | 32.00 | 315 | 40 |
| More than 900 | 34.00 | 315 | 40 |
| Religious (R-1) | | | |
| 0-30 | 1.90 | 30 | 0 |
| 31-90 | 2.50 | 60 | 0 |
| 91-120 | 3.50 | 180 | 0 |
| 121-180 | 6.00 | 180 | 0 |
| >180 | 7.00 | 240 | 0 |

© DM GraphicsDesk

### 20ஆம் திகதி அமுலுக்கு வருகின்றது

(கொழும்பு)

மின்சாரக் கட்டணங்களை உயர்த்துவதற்கு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது. இதன்படி எதிர்வரும் 20ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்படவுள்ளன.

புதிய கட்டண நிர்ணயம் தொடர்பில் பொதுப்பண்பாட்டு ஆணைக்குழு மின்வலுமற்றும்எரிசக்திஅமைச்சிற்குபரிந்துரைகளைசெய்துள்ளது.

மின்சாரக்கட்டணம் தொடர்பில் மக்களிடம் எழுத்துமூலமாகவும், வாய்மொழி மூலமாகவும் கருத்துக்கள் கோரப்பட்டதாக கூறப்படுகிறது.

கருத்துக்களைகவனத்திற்கொண்டு கட்டண திருத்தம் தொடர்பான பரிந்துரைகள் செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை மின்சாரக்கட்டண அதிகரிப்பிற்கு எதிர்க்கட்சிகள் தமது கண்டனத்தை தெரிவித்துள்ளன. இக் கட்டணங்கள் எந்த அடிப்படையில் அதிகரிக்கப்பட்டது என்பது தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ஏ-1)

## அமைச்சர் சமரசிங்க அமெரிக்கா பயணம்



(கொழும்பு)

அமைச்சர் மகிந்த சமரசிங்க அமெரிக்காவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

வாஷிங்டனில் நடைபெறுகின்ற சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அவர் அங்கு சென்றுள்ளார்.

இந்த மாநாடு நேற்று தொடக்கம் எதிர் (20ஆம் பக்கம் பார்க்க)

### பொஸ்டன் குண்டு வெடிப்பு

## இலங்கையில் செயற்படும் ஹிஷ்புல்லா அமைப்புக்கு தொடர்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் இடம்பெற்ற இரட்டை குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் இலங்கை மற்றும் பங்களாதேஷிக்கு தொடர்பு இருப்பதாககுற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

ஈரானின் புலனாய்வு அமைப்பு ஒன்றைமேற்கோள் காட்டி அமெரிக்க ஊடகம் ஒன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது. பொஸ்ட்டனில் மரதன் ஓட்ட நிகழ்வு இடம்பெற்ற பகுதியில் இந்தகுண்டுகள்வெடித்தன. இதில் மூன்று பேர் கொல்லப்பட்டதுடன் 100க்கும் அதிக மானவர்கள் காயமடைந்தனர்.

இந்த சம்பவத்துக்கு ஹிஸ்புல்லா என்ற அமைப்பு தொடர்பு கொண்டிருப்பதாகவும் இந்த அமைப்பு பங்களாதேஷ் மற்றும் இலங்கையில் செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட் (20ஆம் பக்கம் பார்க்க)

### புதிய நிர்வாகத் தெரிவுடன்

## கைதடி சிறுவர் இல்ல விவகாரம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நீதிமன்ற உத்தரவின் பேரில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு கைதடி சிறுவர் இல்லத்தில் 21 சிறுமியர்கள் மீளவும் இணைக்கப் பட்டுள்ளனர் என வடக்கு மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் செல்வி உமா தங்கவேல் தெரிவித்தார். கைதடி பகுதியிலுள்ள தனியார் சிறுவர் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கைதடிப்பகுதியிலுள்ள தனியார் சிறுவர் இல்லத்தில் இருந்து கடந்த 15 ஆம் திகதி 10 இற்கும் மேற்பட்ட பதினாறு வயதுச் சிறுமிகள் வெளியே காணாமல் போயிருந்தனர். இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் 16 சிறுமிகள் இல்லத்தை விட்டு வெளியேறி காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவித்திருந்தனர்.

ஆனால் இல்லத்திற்கு அப்போது பொறுப்பாக இருந்த அதிகாரி 10 பேர் காணாமல் போயுள்ளதாக தெரிவித்திருந்தார். அத்தோடு இல்லத்தில் 35 பேர் தங்கியிருந்தனர் எனவும் கூறியிருந்தார். இவ்வாறு கைதடி சிறுவர் இல்ல விவகாரம் பெரும் சார்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில் நேற்று இந்த ஊடகவியலாளர் சந்திப்பு நடத்தப்பட்டது.

இதன் போது குறித்த இல்லத்தின் உயரதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். இந்தச் சந்திப்பின் போது ஆணையாளர் மேலும் தெரிவிக்கையில் கைதடி சிறுவர் இல்லத்தில் 24 (20ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாகரனை சந்தித்தாரா சிதம்பரம்?

### வழக்கறிஞர் கே. எஸ். இராதகிருஷ்ணன் விரிவாகப் பதிலளிப்பு



(சென்னை)

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் தங்களுக்கும் ஈடுபாடு உண்டு என்பதைக் காட்டிக் கொள்ள படாதபாடுபடுகிறது காங்கிரஸ். கோடம்பக்கத்தில் இருந்த பிரபாகரனை நானே கார் ஓட்டிச் சென்று சந்தித்தேன் என்று ப.சிதம்பரம் ஒரு கூட்டத்தில் பேசினார்.

அந்த நாளில் இருந்து இன்று வரை இலங்கைப் பிரச்சினைகளில் தீவிரமாகச் செயல்பட்டுவரும்வழக்கறிஞர்கே.எஸ்.ராதாகிருஷ்ணன் அது குறித்து விரிவாகப்பதில் அளிக்கிறார். அவரின்கேள்விபதில்வருமாறு,

கேள்வி : 1984ஆம் ஆண்டு கோடம்பாக்கத்தில் தங்கி இருந்த பிரபாகாரன் பால சிங்கத்தை சந் (19ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல் குவைதா இயக்கத்துக்கு இலங்கையில் ஆட்சேர்ப்பு!

## அமெரிக்க ஊடகம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையிலும் பங்களாதேஷிலும் அல்-குவைதா இயக்கத்திற்கு ஆட்கள் சேர்க்கப்படுவதாக அமெரிக்காவின் டப்ளியூ. என் டி.என்ற செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே இந்த இரண்டு நாடுகளிலும் அல்-குவைதா அமைப்பை சேர்ந்த உறுப்பினர்கள் தங்கியிருப்பதாகவும் அவர்கள் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்குள் பிரவேசிப்பதாகவும் அந்த செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் அல் குவைதா இயக்க செயற்பாட்டாளர்கள் இயங்கி வருவதாக அமெரிக்க ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இவ்வாறான குழுக்கள் பயங்கரவாத செயற்பாடுகளைமேற்கொள்ளும்நோக்கில்அமெரிக்காவிற்குள் பிரவேசிப்பதாகத் தெரிவித்துள்ளது.

அண்மையில் பொஸ்டனில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களுக்கும் அல் குவைதா இயக்கத்திற்கும் தொடர்பு இருக்கலாம்.

இந்தத் தாக்குதல்களை இலங்கை அல்லது பங்களாதேஷில் இயங்கி வரும் உறுப்பினர்கள் மேற்கொண்டிருக்கலாம்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் ஈரானுக்கு தொடர்புஇருக்கலாம்எனமற்றுமொருஅமெரிக்க ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை அல் குவைதா இயக்கம் இலங்கையில் இயங்கவில்லை எனவும் பயிற்சி அளிக்கப்படவில்லை எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது என அதில் கூறப்பட்டுள்ளது. (எ-11)

# நெதர்லாந்து பிரஜையின் கமராக்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

நெதர்லாந்து நாட்டுப் பிரஜை ஒருவரின் சுமார் 87 ஆயிரம் ரூபாய் பெறுமதியான இரண்டு கமராக்கள் நேற்று புதன்கிழமை திருடப்பட்டுள்ளதாக யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாப்பயணிகளாக யாழ்ப்பாணத்திற்கு வந்த அவர் யாழ். நகர பகுதியில் உள்ள விடுதியொன்றில் மதியம் உணவு உண்பதற்காக சென்றுள்ளார். இதன் போதே இரு கமராக்களையும் வாகனத்தில் வைத்து விட்டு சென்றுள்ளார்.

மீண்டும் திரும்பி வந்து வாகனத்தில் ஏறிய போது வாகனத்திலிருந்த இரண்டு கமராக்களும் திருடப்பட்டுள்ளன. இதனையடுத்து அவர் உடனடியாக இது தொடர்பாக யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இந்த இரண்டு கமராக்களின் பெறுமதி 110 ரியால் என்றும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-6)

# பொலிஸை தாக்கிய கைதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைத் தாக்கியுள்ளார். இதனையடுத்து அவர் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலில் கைதி காயடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

திருட்டுக் குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டு யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்படிருந்தவர் நேற்று மதியம் அவரை உணவு கொடுப்பதற்காக அழைத்துச் சென்றபோது அவரை அழைத்துச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கிவிட்டு பிரஸ்தாப கைதி தப்பிச் செல்ல முற்பட்டுள்ளார்.

இதனையடுத்து அவரை துரத்திப் பிடித்த பொலிஸார் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இதில் காயமடைந்த கைதி சிகிச்சையளிக்கப்பட்டு பின்னர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (எ-6)

# அமெரிக்காவுடன் இலங்கைக்கான உறவு லவ்வா? இழவா?

## கேள்வி எழுப்புகிறார்கள் மனோ

(கொழும்பு)

உள்நாட்டில்அமெரிக்காவை எதிர்த்து அவர்கள்கொண்டுவந்ததீர்மானங்களைகணக்கிலும் எடுக்கமாட்டோம்எனஅமைச்சர்கள்ஜிஎல்பீரிசும், கெஹெலியரம்புக்வலவும் வீரம் பேசுகிறார்கள்.

ஆனால் அமெரிக்க அரசை கவர ஒரு மாதத்திற்கு நூற்றுப் பதினாயிரம் டொலர்களை செலவழித்து நமது அமெரிக்க தூதுவர் விக்கிரமசூரியவும், மத்திய வங்கி ஆளுநர் கப்ராலும் அமெரிக்கதொடர்புநிறுவனங்களுடன்ஒப்பந்தம் செய்துள்ளார்கள்.

அதேவேளைஇலங்கையில்உள்ளஅமெரிக்க தூதுவர் மிச்செல் சிசன், இலங்கை தொடர்பாக மிகவும் கறாராக பேசியுள்ளார். உண்மையில் இலங்கை அமெரிக்க அரசாங்கங்களுக்கு இடையிலான உறவு என்ன? அது சண்டையா? சமாதானமா? லவ்வா, இழவா? இந்த கேள்விகளுக்கு அரசாங்கம் பதில் கூறவேண்டும்.

அதேபோல் இலங்கையில் உள்ள அமெரிக்க தூதுவரும் பதில் கூற வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுவோம் இயக்கத்தின் ஊடக மாநாட்டில் நேற்று உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

இலங்கையில் உள்ள அமெரிக்க தூதுவர் மிச்செல் சிசன் இலங்கை தொடர்பாக முக்கியமாக பேசியுள்ளார்.

கற்றுக்கொண்ட ஆணைக்குழு சிபாரிசுகளை அமுல் செய்ய இலங்கை அரசு உருவாக்கி அறிவித்த மனித உரிமை செயற்திட்டம் தொடர்பிலும் பேசியுள்ளார். இவை இலங்கை அரசாங்கத்துக்கு எதிரே இன்று இருக்கின்றது. சர்வதேசகடப்பாடுகளைஞாபகப்படுத்துகின்றன.

இவற்றை இலங்கை அரசு செய்யாவிட்டால் ஆபத்துகாத்திருக்கிறதுஎன்றுஅமெரிக்க தூதுவர் மறைமுகமாக சொல்லுகிறார். இதன் மூலம் அவர் இலங்கை அரசுக்கு பூச்சாண்டி காட்டுகிறாரா அல்லது தமிழ் மக்களை நம்ப வைத்து ஏமாற்றுகிறாரா என்பது விரைவில் தெரியவரும்.

ஆனால். ஐ.நா. தீர்மானங்களை தாம் ஒரு போதும் ஏற்றுகொள்ள போவதில்லை என நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கூரியுள்ளார். இதையே அமைச்சர் கெஹெலிய ரம்புக்வலவும் கூறியுள்ளார்.

அமெரிக்க அரசாங்கம் சொல்வதை கேட்கும் தேவை எமக்கு இல்லை என்று சொல்லி அமெரிக்காவை நிராகரித்துஇவர்கள்இலங்கை மக்கள் முன்னால் பேசுகிறார்கள்.

ஆனால் அமெரிக்காவில் என்ன நடக் கிறது? வெளிவிவகார அமைச்சர் பீரிசுக்கும் தெரியாமல் பெருந்தொகை செலவழித்து அமெரிக்க அரசாங்கத்தை கவரும் நடவடிக்கைகளை இலங்கையில் அமெரிக்காவை எதிர்த்து வீரம் பேசும் அரசாங்கம் செய்கிறது.

எனவே இலங்கை அரசு ஒன்றை தெளிவுபடுத்த வேண்டும். அமெரிக்காவுடன் உங்கள் உறவு என்ன? சண்டையா? சமாதானமா? லவ்வா, இழவா? இது தொடர்பாக அமெரிக்க தூதுவரும் தமிழ் மக்களுக்கு உண்மை கூறவேண்டும் என்றார். (எ-11)


யாழ்ப்பாணம் செல்லா சினிமா




சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த

சென்னையில் ஒரு நாள்

10.30, 2.30, 6.30, 9.30

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு



**சேல்ஸ்மன் தேவை**

யாழ். நகரில் இயக்கும் எமது நிறுவனத்துக்கு பிடவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள ஆண்கள் தேவை.

சிவகணேசன் ரெக்ஸ் ரைல்ஸ்
41,பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம். (2399)




**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலையின் முன்னைநாள் அதிபர்

திருமதி

**கனகசுந்தரம் பூபதி அம்மா**

அவர்களின் மறைவை யொட்டி ஆழ்ந்த துயரிலிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரினரிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
பாடசாலை சமூகம்


பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட.உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829


# மரண அறிவித்தல்கள்

## மாதவர் அரிச்சந்திரன்



பண்ணாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாதவர் அரிச்சந்தின் அமரத்துவமடைந்தார்.

அன்னார் அமரர்களான மாதவர்-ஆச்சிப்பிள்ளையின் மகனும், அமரர் விஸ்வலிங்கம் (ஆசிரியர்) , மதியாபரணம், கண்மணி ஆகியோரின் சகோதரனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், குகதாசன் (ஆசிரியர் திருவடிநிலை தமிழ்க் கலவன் பாடசாலை), முருகதாசன்(ஆசிரியர் மல்லாவி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சோபனா (ஆசிரியர் பயிற்சி கலாசாலை பலாலி), கலையரசி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சாதனா, தமிழ்நிலா, பிரியங்கா, பிருந்தாபன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

**பெறாமக்கள்:** குகலிங்கம், ரேவதி, பிறேமாவதி, நவரட்ணம், அமரர் ஜெயசந்திரன், ஜெபநேசன், ஜெயலிங்கம், ஜெயக்குமார், ஜெயமூர்த்தி, சயந்தன், ஜெகதா, தயாபரன்.

**மருமக்கள்:** கனகமணி, திலகவதி, அமரர் மயில்வாகனம், துரைசிங்கம், மகாதேவன், கேதீஸ்வரி, பூரணி, சாந்தினி, கோமதி, அருள்லிங்கம், தாரணி, அமரர் தயாலிங்கம், சுகந்தலிங்கம், ரவிக்குமார், சஞ்சீவா, பவானி, அபிதாயினி, குகலிங்கம், விஜிதா, இன்பராஜ்

அமரர் சரஸ்வதி, அமரர் விஸ்வலிங்கம் மற்றும் வாமதேவன், துரைலிங்கம், அமிர்தலிங்கம், முத்துலிங்கம், பண்ணாகம், மதியாணன், செல்வமலர் (சுழிபுரம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18/04/2013 இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பகல் 11 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக திருவடி நிலை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : அ. குகதாசன்(ஆசிரியர்)
அ.முருகதாஸ் (ஆசிரியர்)
0770857515

## மயிலு தர்மலிங்கம்

வாதரவத்தை புத்தூரரை பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட மயிலு தர்மலிங்கம் நேற்று (17.04.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயிலு -சின்னத்தங்கத்தின் மகனும், நல்லபிள்ளையின் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னையா (வாதரவத்தை), மாணிக்கவாசகர்(வாதரவத்தை), தெய்வானை (வாதரவத்தை), சின்னப்பிள்ளை (திருகோணமலை), இளையபிள்ளை (திரு கோணமலை) ஆகியோரின் சகோதரனும்,தவமலர்(கனடா), சத்தியசீலன் (சுவிஸ்), நந்தினி (கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,சோமசுந்தரலிங்கம்(கனடா), ராகினி(சுவிஸ்), ராஜ்மோகன்(சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், திருமுருகன், சுசிலா, சுதர்ஷன், ஜெயதர்சினி, செந்தூரன்,கார்த்திகா, கார்த்திகன், கிருஷன், கரிஷன் ஆகியோரின் பாட்டனாரும் ஜெவினிசனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் பெறாமகனான மாணிக்கவாசகர் தங்கத்துரையின் (வாதரவத்தை புத்தூர்) இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் இறுதி கிரியை பற்றி தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## இரக்கமும் ஏமாற்றமும்

"இரக்கப்படு! ஆனால், ஏமாந்து போய்விடாதே!" என்று புத்திமதி கூறுவதுண்டு.

நம்மில் பலர் அதிகம் இரக்கம் காட்டி, அதனால் ஏமாந்து போகிறோம். நாம் மட்டுமல்ல... அந்தக் காலத்திலேயும் கூட இரக்கப்பட்டு ஏமாந்து போனவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள்.

இது தொடர்பாக அதிகமான கதைகளை ஆன்மீகப் பேச்சாளர்கள் கூறி வருகிறார்கள்.

அதிலும் அதிலே ஒரு கதையை இப்போது உங்களுக்கு கூறலாம் என்றொரு ஆசை.

சரி, இப்போது கதைக்கு வருவோம்...

ஒரு காட்டிலே முனிவர் இருந்தார். முன்பெல்லாம் முனிவர்கள் காட்டிலேயே வசித்து வருவது வழமையாக இருந்தது. அதனால் இந்த முனிவர் காட்டிலே ஒரு ஆச்சிரமம் கட்டி அங்கே உட்கார்ந்திருந்தார். இவரிடம் இரக்கம் நிறைந்த சுபாவம் இருந்தது.

அந்தக் காட்டிலே அவருக்குத் துணையாக ஒரு நாய் இருந்தது. அந்த நாய் எப்போதுமே அவரை சுற்றி சுற்றி வந்து கொண்டேயிருக்கும்.

ஒருநாள் அந்த நாய் ஆச்சிரமத்தினுள் ஒரு மூலையிலே அமர்ந்து அழுது கொண்டிருந்தது.

இதைப் பார்த்த முனிவருக்கு மனம் இளகிப்போய் விட்டது.

அந்த நாயை அழைத்தார். அப்போது அது அருகில் வந்து நின்றது. "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார்.

"எனக்கு இக்காட்டிலே வாழ்வதற்கு பயமாக இருக்கிறது" என்றது.

"நான் இருக்கும் போது உனக்கென்ன பயம்?" என்றார்.

"நீங்கள் எப்போதும் என் அருகில் இருப்பதில்லை... சில சமயம் காட்டிலே இங்கேயும் அங்கேயுமாகத் தனியாக உலா வந்து கொண்டிருப்பேன். அந் நேரங்களில் நிறைய "நரி"கள் உலா வரும். அவைகள் என் மேலே பாய்ந்து கடித்து விடுமோ எனப் பயமாக இருக்கிறது" என்று கூறியது.

"கவலைப்படாதே! என்னிடம் மந்திர சக்தி இருக்கிறது. அதைப் பயன்படுத்தி உன்னையே நரியாக மாற்றி விடுகிறேன்" என்றார்.

அதே மாதிரி ஒரு மந்திரத்தைக் கூறி, அந்த நாயை நரியாக மாற்றினார்.

"இனிமேல் கவலைப்படாதே! எதிர்வரும் காலங்களில் மற்றைய நரிகள் கூட உன்னைப் பார்த்துப் பயப்படும்" என்றார்.

இப்படியாக நாட்கள் நகர்ந்தன.

மறுபடியும் நரி உருவத்திற்கு மாறிய உள்ள நாய் அழுதது.

மீண்டும் அதனை அழைத்து "ஏன் அழுகிறாய்?" என்று முனிவர் கேட்டார்.

"இக் காட்டிலே நிறைய சிறுத்தைகள் இருக்கிறது. அதைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குப் பயமாக இருக்கிறது. எந் நேரத்திலே என்ன நடக்குமோ என்ற ஏக்கம் என்னை ஆட் கொண்டுள்ளது" என்று கூறியது.

"அப்படியா! சரி கவலைப்படாதே... உன்னையும் ஒரு சிறுத்தை போல் மாற்றி விடுகிறேன்" என்று கூறி மந்திரத்தைச் சொல்ல, அது சிறுத்தையாக உருவம் பெற்றது.

சிறிது நாட்கள் நகர சிறுத்தை உருவத்திலே இருந்த நாய் மறுபடியும் அழ ஆரம்பித்தது.

"என்ன காரணம்?" என்று விசாரித்தார்.

"இந்த காட்டிலே அதிகபடியான உருப்பெருத்த சிங்கங்கள் வசித்து வருகின்றன. அவற்றினால் எனக்கு உயிராபத்து வந்து விடுமோ என்று பயமாக இருக்கிறது" எனக் கூறியது.

"சரி... உன்னையும் ஒரு பெரிய சிங்கமாக மாற்றி விடுகிறேன்" என்று மந்திரத்தைக்கூறி மாற்றினார்.

"நீ இப்போது இந்த காட்டுக்கே ராஜா..." என்றார்.

சிங்கமாக இருந்த நாய் யோசிக்க ஆரம்பித்தது. உடனே அந்த முனிவர் மேலே பாய்ந்து கடிக்க முயற்சித்தது.

"என்ன இது... என்னையே கடிக்க வருகிறாய்?" என்று கேட்டார் முனிவர்.

"நீ என்னை விட பெரிய சிங்கமாக வேறு யாரையாவது மாற்றி விடக்கூடாது. இருந்தாலும் உன்னுடைய மந்திரம் சக்தி மிக்கது. ஆதலால் உன்னை உயிரோடு விட்டு வைத்தால் ஆபத்து" என்று சொல்லிக் கொண்டே அருகில் வந்தது.

"ஆஹா! இரக்கம் காட்டி ஏமாந்து போய் விட்டோமே!" என்பது அப்போதுதான் முனிவருக்குப் புரிந்தது.

உடனே சாமர்த்தியமாக ஒரு காரியம் செய்தார். ஒரு பலம் பொருந்திய மந்திரம் ஒன்றைக் கூறினார். உடனே அந்தச் சிங்கம் மறுபடியும் பழைய படியே நாயாகத் தோற்றம் பெற்றது. வேறு வழி தெரியாது அவர் காலையே மறுபடியும் சுத்தி வர ஆரம்பித்தது.

இரக்கம் காட்டலாம்; ஆனால், ஏமாந்து போய்விடக்கூடாது என்பதை விளக்கவே இக்கதை கூறப்பட்டுள்ளது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# பெண்களுக்கான காப்பகங்களில் ஆண்களுக்கு தொழில் வழங்கோம்

## யாழ். அரச அதிபர் தகவல்

கைதடிப் பகுதியிலுள்ள தனியார் சிறுவர் இல்லத்தில் ஏற்பட்ட குழப்ப நிலையையடுத்து பெண்பிள்ளைகள் மற்றும் சிறுவர்கள் தங்கி வாழ்ந்து வரும் இல்லங்களில் ஆண்களை தொழிலுக்கு அமர்த்துவதை முற்றாக தடைசெய்வதென்ற முடிவுக்கு வந்துள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி பகுதியிலுள்ள தனியார் சிறுவர் இல்லத்திலிருந்த 16 சிறுமிகள் அங்கிருந்து வெளியேறி காணாமல் போயுள்ளனர் என பொலிஸ் நிலையத்தில் கடந்த 15 ஆம் திகதி முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந் தது.

இந்நிலையில் காணாமல் போனதாக கூறப்படும் சிறுமிகள் சார்பிலும் பொலிஸ் நிலையத்தில் பிறிதொரு வழக்குத் தாக்குதல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த இல்லத்தில் தங்கியிருந்த பெண் பிள்ளைகள் எத்தனை பேர் காணாமல் போனதாக கூறப்பட்ட சிறுமிகளின் எண்ணிக்கை மற்றும் இல்லத்தை விட்டு சிறுமிகள் வெளியேறியதற்கான காரணம் தொடர்பில் உத்தியோகபூர்வமாக எந்த விதத் தகவல்களும் வெளியிடப்படாத நிலையில் நேற்று அரசாங்க அதிபரை ஊடகவியலாளர்கள் சந்தித்து விடயத்தை கேட்டறிய முற்பட்டனர். இதன்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அத்தோடு குறித்த சிறுவர் இல்லத்தில் 24 சிறுமிகள் இருந்ததாகவும் இதில் 16 சிறுமிகள் அங்கிருந்து வெளியேறியிருந்தனர் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாத வகையில் தடுக்கும் நோக்குடன் சிறுவர் இல்லங்கள் மற்றும் பெண் பிள்ளை கள் பராமரிப்பு நிலையங் கள் உள்ளிட்டவற்றில் ஆண் கள் பணிபுரிவது கட்டுப் படுத்தப்படும் எனவும் தெரி வித்தார்.

மேலும் குறித்த சிறுவர் இல்லத்திலிருந்த சகல சிறுவர்களும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பாக வேறு இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அத்தோடு விசாரணை களும் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது. விசா ரணை முடிய முன்பு எத னையும் உறுதியாக கூற முடியாது.

சிறுவ்கள் மற்றும்பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்த அதிகாரிகளால் மட்டும் முடியாது .சமூகத்தினரும் ஒத்துழைப்பு வழங்க வேண் டும். இவ்வாறான சமூக பிறழ்வுகளை கட்டுப்படுத்தசமூகத்திற்கும் பொறுப்பு இருக்கி றது.

பெண் கள், சிறுவர் அமைப்புக்களும் இந்த விடயங்களில் கூடிய கவனம் எடுத்து செயற்பட வேண்டும் எனவும் தவறான தகவல்களைக் கொடுத்து உண் மைகளை மறைக்க முற்பட்டமை தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டி யவர் அவர்கள்தான் எனவும் அது தொடர்பிலும் விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட பயிற்சி நிலையங்களில் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 11.30 மணிவரை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சில்வேஸ்திரி அலென்ரின், முருகேசு சந்திரகுமார் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரி அதிபர் ந.யோகராஜன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளனர். வரவேற்புரையினை இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் போதனாசிரியர் செல்வி. சி.துஷாந்தினி ஆற்ற தலைமை உரையினை இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் இணைப்பாளர் இரா. அகிலன் நிகழ்த்துவார். (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 60 | 70-140 | 70 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 120 |
| தக்காளி | 120 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 50 |
| கோவா | 90 | 60 | 80 |
| கரட் | 160 | 120 | 150 |
| பூசணி | 50 | 40 | 60 |
| புடோல் | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 140 | 80-160 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 80 |
| பாகற்காய் | 160 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 |
| பயற்றங்காய் | 100 | 70 | 60 |
| லீக்ஸ் | 160 | 150 | 150 |
| பீற்றூட் | 40 | 30 | 60 |
| கறிமிளகாய் | 100 | 90 | 120 |
| முருங்கைக்காய் | 50 | 400 | 400 |
| போஞ்சி | 100 | 80 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20-30 | 25 |
| தேசிக்காய் | 140 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40-50 | 40-45 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 |

# இராசி பலன்

18.04.2013
(சித்திரை 05, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
அட்டமி பின்னிரவு 4.28 மணிவரை
புனர்பூசம் பிற்பகல் 01.19 மணிவரை
இராகுகாலம் 1.33-3.03 மணிவரை
சுபநேரம் 7.33-9.03 மணிவரை
மகாஸ்டமி

**மேடம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தொழில் முன்னேற்றம் உண்டு, உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், கல்விக்கு எடுத்த முயற்சி கைகூடும், பெற்றோரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** தொழிலை விரிவுபடுத்தும் சிந்தனை மேலோங்கும், குரு வழிபாடு குதூகலம் தரும், உடன் பிறப்புக்ள் மூலம் சுப செய்திகள் வந்து சேரலாம், அந்நிய சந்திப்புண்டு.

**மிதுனம்** கரைத்த சேமிப்பை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும், தொழிலில் உயரதிகாரிகளின் பாராட்டுப் பெறுவீர்கள்.

**கடகம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடர வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, எடுத்த காரியத்தில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**சிங்கம்** கொள்கைப்பிடிப்பை கொஞ்சம் தளர்த்த நேரிடலாம், சுப செய்திகள் அதிகரிக்கும், உறவினர்களைக் காண பயணமொன்று மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும், சயனசுகக் குறைவான நாள்.

**கன்னி** யோகமான நாள், இளைய சகோதரர் வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**துலாம்** குடும்பத்தினர் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரியமானசிலரின் சந்திப்பு இடம்பெறலாம், தேக நலனில் புத்துணர்வு தென்படும், சுப் தகவல்கள் வந்து சேரும் நாள்

**விருச்சிகம்** சுறுசுறுப்போடு செயற்படும் நாள், எதிர்பாராத பயணங்களால் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தேக நலனில் இருந்த பாதுப்புக்கள் குறையும்.

**தனுசு** எதையும் சிந்தித்து செயற்பட வேண்டி நாள், குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குற்றம் கண்டு பிடிக்கலாம், தொழில் போட்டிகள் அதிகரிக்கலாம்.

**மகரம்** நட்பு வட்டம் விரிவடையும், எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான அறிகுறி தோன்றும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தொலைபேசித்தகவல்கள் மகிழ்ச்சி தரும்.

**கும்பம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படும், மறைமுகப் போட்டிகள் மாறும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தெய்வீக சிந்தனை மேலோங்கும், பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மீனம்** பிள்ளைகளின் கல்வி நலன் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள் தொழில் வளர்ச்சி ஏற்படும், வருமாணம் திருப்தி தரும், பெரிய மனிதர்களின் தொடர்பு அதிகரிக்கும், தாழ்ந்த சுபாவம் உண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி.சபைகள் பக்கசார்பற்று செயற்படல் வேண்டும்!

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பிரதேசத்தின் ஒரு பகுதியை சார்ந்ததாகவே காணப்படுவதாக பிரதேச உறுப்பினர் பொ.குகதாஸ் குற்றஞ் சாட்டியுள்ளார்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் மாதாந்த கூட்டம் நேற்றுக்காலை 10 மணிக்கு தவிசாளர் பொ. வியாகேசு தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது அபிவிருத்தி தொடர்பான விவாதத்தில் சபையின் உறுப்பினர்களுக்கிடையே வாக்குவாதம் இடம்பெற்றது.


இதன் போது கருத்து தெரிவித்த பொ.குகதாஸ்இப்பிரதேச சபையை பொறுத்தவரை பிரதேசத்தின் ஒரு பகுதியை அபிவிருத்தி செய்வதிலேயே அதிகளவான நிதிகள் ஒதுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் ஏனைய பின் தங்கிய பிரதேசங்கள் தொடர்ந்தும் அபிவிருத்தி இன்றி தொடர்ந்தும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது.

அங்கு உள்ள மக்கள் தொடர்ந்து பல துன்பங்களை அனுபவித்து வருவதை தாம் கண் கூடாக காணுவதாக தெரிவித்தார்.

பிரதேச சபையானது பக்கசார்பற்ற முறையில் மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்படும் பிரதேசங்களை முன்னுரிமைப்படுத்தி அதனை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

தவிசாளரோ அல்லது உறுப்பினர்களோ தமது விருப்பத்திற்குரிய இடங்களை அபிவிருத்தி செய்வதற்கும் சிபார்சு செய்வதற்கும் அல்லது நிதி ஒதுக்குவதற்கும் எதிர்காலத்தில்முன்வரக்கூடாதுதென அவர் கடும் தொனியில் தெரிவித்தார்.இதனால் பிரதேச சபையில் அபிவிருத்தி தொடர்பான விவாதங்கள் கடும் காரசாரமாக இடம்பெற்றதை அவதானிக்க முடிந்தது. (அ-3-24-60)




## பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

உயர்தொழில்நுட்ப்வியல் நிறுவன பட்டமளிப்பு விழா எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெற தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடந்த 2012 ஆம் ஆண்டில் முழுமையாக கற்கை நெறிகளை பூர்த்தி செய்ய தகைமை உடைய மாணவர்கள் அதற்கான ஆவணங்களை நிர்வாகப் பகுதியில் பெற்று அவற்றை எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் ஆவணங்களை உரிய காலத் திற்குள் சமர்ப்பிக்கத்தவறும் மாணவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் அதன் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ)

## திருவிழா தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த உயர் திருவிழா எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எனவே திருவிழா தொடர்பான உபயகாரர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் சனிக்கிழமை 22 ஆம் திகதி காலை 10 மணிக்கு அம்பாள் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது என அதன் செயலாளர் அறிவித்துள்ளார். (அ)

## கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது

(பண்டத்தரிப்பு)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வலிகாமம் மேற்கு பிரதேச கலைஞர்களிடம் இருந்து இவ்வாண்டு கலாபூஷணம் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு,தவில், நாதஸ்வரம், நாடகம், நாட்டுக்கூத்து, நாட்டுப்புறவியல், ஊடகத்துறை, சினிமா ஆகிய கலைத்துறைகளில் மிகவும் சிறப்புடன் சேவையாற்றி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி அன்று 60 வயதைப்பூர்த்தி செய்யும் நிலையில் உள்ள கலைஞர்களே இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் உள்ள மேற்படி தகைமை உள்ள கலைஞர்கள் இதற்கான விண்ணப்பங்களை சங்கானை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் மேமாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ-30)

## மோ.சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம்

(கரவெட்டி)

உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு முன்பாக இரு மோட்டார் சைக்கிள் மோதுண்ட விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 8.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது .

உடுப்பிட்டியில் இருந்து நெல்லியடி கொமர்ஷல் வங்கிக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்து கொண்டிருந்த இரு இளைஞர்கள் மீது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் உடுப்பிட்டியைச் சேர்ந்த ரி.கோபிராஜ் (வயது19).அவருடன் பயணித்த மட்டக்களப்பை சேர்ந்த எம்.முஸ்திப் (வயது 18) ஆகிய இரு இளைஞர்களும் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களுடன் மோதுண்ட மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மோதியதுடன் தப்பிச் சென்றுள்ளனர். (அ-3-24)

## கணிதபாட வகுப்புக்கள்

(சாவகச்சேரி)

இவ்வருடம் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றும் பச்சிலைப்பள்ளி எல்லைக்குட்பட்ட மாணவர்களுக்கான விசேட கணிதபாட வகுப்புக்கள் பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி பேரவையினரால் விரைவில் ஆரம்பிக்கப்பட்டு வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

இவ்வகுப்பில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் பளை முல்லையடியில் இயங்கும் பேரவை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தலைவர் கு.ந.பாலச்சந்திரன் அறிவித்துள்ளார். (அ-3-29)

## நீர் இறைக்கும் இயந்திரம் இன்றி விவசாயிகள் சிரமம்

(தனங்கிளப்பு)

மறவன்புலோ கமக்கார அமைப்பிற்கு உட்பட்ட விவசாயிகள் சிறுபோக பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வரும் நிலையில் நீர் இறைக்கும் இயந்திரம் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித் துள்ளனர்.

கச்சான், பயறு, உழுந்து, கௌப்பி, எள்ளு, பூசணி ஆகிய பயிர் செய்கைகளை விவசாயிகள் மேற்கொண்டு வரும் நிலையில் நீர் இறைக்கும் இயந்திரம் இன்மையால் பெரும் சிரம நிலையை அடைகின்றனர்.

இத்துடன் இங்கு குழாய்க்கிணறுகளும் உள்ளது. மேற்குறித்த கமக்கார அமைப்பிற்கு உட்பட்ட விவசாயிகளுக்கு I.O.M நிறுவனத்தினால் முட்கம்பி வேலி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே இத்துறைசார் அதிகாரிகள் மேற்குறித்த பகுதி விவசாயிகளில் அக்கறைகொண்டு நீர் இறைக்கும் இயந்திரத்தை வழங்கி உதவ முன்வர வேண்டுமென்பதே வேண்டுகோளாக உள்ளது. (அ-3-37)




## அ.இலங்கை சமாதான நீதவானாக நியமனம்

(நல்லூர்)

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ் மாவட்டக் கிளையின் தலைவரும் யாழ். மாவட்ட சமாதான நீதவானுமாகிய பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம் அகில இலங்கை சமாதான நீதவானாக நீதி அமைச்சினால் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் யாழ்.ப்லகலைக்கழக ஓய்வுநிலை விஞ்ஞான பீடாதிபதியாகவும் இலங்கை செஞ்சிலுவைச்சங்க கொழும்பு தேசிய தலைமையகத்தின் முன்னாள் உபதலைவரும் ஆவார். (அ-134)

## வாகன விபத்தில் வயோதிபர் காயம்

(கரவெட்டி)

மோட்டார் சைக்கிள்- துவிச்சக்கர வண்டி விபத்தில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பருத்தித்துறை சிவன் கோவிலடி பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.45 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவது, குறித்த வயோதிபர் துவிச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் இவருடன் மோதுண்டு விபத்துக்குள்ளாக்கி விட்டு அவ்விடத்தைவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் பருத்தித்துறை சிவன் கோவிலடி பகுதியைச்சேர்ந்த செல்லத்தம்பி தேவராஜா (வயது 65) என்ற வயோதிபரே காயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார். (அ-3-24)

## பொ.நோ.மண்டபம் அமைக்கப்படுகிறது

(ஆனைக்கோட்டை)

யு.என்.டி.பி நிறுவனத்தின் 37 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் ஆனைக்கோட்டை முள்ளிப் பகுதியில் பொதுநோக்கு மண்டபம் ஒன்று புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

கடந்த 11ஆம் திகதி இம்மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு நிர்மாணவேலைகள் நடைபெற்று வருகின்றன.

மேற்குறித்த பகுதிக்குப் பொதுநோக்கு மண்டபம் இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொண்ட நிலையில் தற்போது இம்மண்டபம் அமைக்கப்படுவதால் கல்வி மற்றும் விளையாட்டுச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இம்மண்டபம் அமைப்பதற்கு அப்பகுதி மக்களும் கலைஒளி சனசமூக நிலையத்தினரும் பங்களிப்புச் செய்து வருவதாக அறிய வருகின்றது. (அ-3-18)

## குளத்து நீரை சுத்தப்படுத்த முன்வருமாறு கோரிக்கை

(நல்லூர்)

நாயன்மார்கட்டு செம்மணி வீதியில் அமைக்கப்பட்டுள்ள கேணியடிக்குளத்து நீர் பல வருடங்களாக இறைத்து அகற்றப்பட்டததால் இக்குளத்தில் உள்ள நீர் துர்நாற்றம் வீசுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு இக்குளத்து நீர் இறைக்கப்படாமையால் மக்கள் பாவனைக்கு உபயோகிக்க முடியாமல் இருப்பதோடு சுற்றுச் சூழலும் பாதிப்படைந்துள்ளது.

இக்குளமானது பல வருடங்களாக துப்புரவு செய்யப்படாத நிலையில் இருந்த போது நாயன்மார்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலைய நிர்வாகம் யாழ். மாநகரசபை முதல்வருடன் தொடர்பு கொண்டதன் பயனாக அக்குளம் மாநகரசபையினரால் துப்புரவு செய்யப்பட்டு கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே குளத்து நீரை இறைப்பதற்கும் உரியவர்கள் முன்வரவேண்டுமென்பதே வேண்டுகோளாகவுள்ளது. (அ-3-134)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சர் அமுனுகம அமெரிக்கா விஜயம்

சர்வதேச நிதி திட்டமிடல் சிரேஷ்ட அமைச்சரும் பிரதிநிதி அமைச்சருமான கலாநிதி சரத் அமுனுகம சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ளார்.

குறித்த மாநாடு நேற்று தொடக்கம் எதிர்வரும் 21 ஆம் திகதிவரை அமெரிக்காவில் வோஷிங்டன் நகரில் இடம்பெறவுள்ளது. இந்த மாநாட்டில் இலங்கையின் பொருளாதாரம் தொடர்பில் சரத் அமுனுகம விசேட உரை ஒன்றினை நிகழ்த்தவுள்ளதாக நிதி திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

மாநாட்டின் போது சரத் அமுனுகம சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் உயர் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடவுள்ளார். (அ)

## கணனி கற்கை நெறிகள் ஆரம்பம்

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் அமைந்துள்ள கணனி வள நிலையத்தில் கணனி கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. பாடசாலையை விட்டு விலகியோர், தொழில் புரிவோர் மற்றும் கணனி கற்க ஆர்முடைய அனைவருக்கும் ஏற்ற வகையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட Office Automation, Web Designing, DBMS, Computer Hardware, Programming Languages போன்ற Diploma கற்கை நெறிகள் Windows மற்றும் Linux Operating System களில் இடம்பெறவுள்ளன. விண்ணப்பப் படிவங்களை வலய கணனி வள நிலையத்தில் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கணனி வள நிலைய முகாமையாளர் கேட்டுள்ளார். (அ)

# இலங்கையின் அபிவிருத்தியால் அமெரிக்கா நிதியை குறைத்தது

### அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான நிதியுதவித் தொகையை 20 சதவீதத்தினால் குறைப்பதற்கு அமெரிக்கா எடுத்துள்ள முடிவினால் எமது நாட்டுக்கு பாரிய பாதிப்புக்கள் எதுவும் ஏற்படாது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் போருக்குப் பின்னரான இலங்கையின் நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால் அமெரிக்காவின் உதவித் தொகை இயற்கையாகவே குறைவடைந்துள்ளது.

இலங்கைக்கான நிதியுதவியில் 20 சத வீதத்தை குறைப்பதற்கு அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி அந்நாட்டு காங்கிரஸுக்கு பரிந்துரை செய்துள்ள நிலையில் அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளதாவது, அமெரிக்கா உலக நாடுகளுக்கு உதவித் தொகை வழங்கும் நிலைமை மாறி உலக நாடுகள் இணைந்து அமெரிக்காவுக்கு உதவி வழங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இலங்கைக்கு இந்தியா, சீனா, கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளே அதிகளவில் உதவிகளை வழங்கி வருகின்றன.

இலங்கைக்கான உதவித் தொகையை 20 சத வீதத்தினால் குறைப்பதாக குறிப்பிட்டுள்ள அமெரிக்கா முதலில் அதன் பெறுமதி என்னவென்று கூறவேண்டியது அவசியமாகும்.

அதேவேளை வெளிநாடுகளிடம் இருந்து உதவிகளைப் பெறும்போது தேசிய பாதுகாப்பு, இறைமை மற்றும் நாட்டுக்கு கிடைக்கும் பயன் என்பன குறித்து கவனத்திற் கொண்டே கடனைப் பெறுவோம். அவற்றுக்கு பங்கம் ஏற்படும் நிலைமை இருந்தால் பெற மாட்டோம். நாம் நிபந்தனைகளையும் ஏற்கமாட்டோம் என பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## பொதுக்கூட்டம்

(பூநகரி)

பளை பேராலை சிக்கன கடனுதவி கூட்டுவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஓய்வு நிலை அதிபர் ந.தாமோதரம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.சிவபாலன், சமாச வெளிக்கள உத்தியோகத்தர் எஸ். பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கடந்த 25 வருட காலமாக இயங்கி வரும் இச்சங்கத்தின் உறுப்பினர்கள் இடம்பெயர்ந்து வேறுபகுதிகளில் வசிப்பவர்களும் புதிதாக இணைபவர்களையும் அன்றைய தினம் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பட்டாளர்கள் கேட்டுள்ளனர். (அ-2-84)

# சந்தேக நபர்களுக்கு விளக்க மறியல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடியில் இடம்பெற்ற இரட்டைப் படுகொலைச் சம்பவம் தொடர்பான 4 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்ற நீதிபதி ரீ.கருணாகரன் உத்தரவிட்டுள்ளார்.

ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றத்தில் இந்த 4 சந்தேக நபர்களையும் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தியபோதே நீதிபதி இதற்கான உத்தரவைப் பிறப்பித்ததாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

செங்கலடியில் இடம்பெற்ற இந்த இரட்டைப் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கொலை செய்யப்பட்டவர்களின் மகள், அவரது காதலன் மற்றும் காதலனின் 2 நண்பர்களும் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

அத்துடன் மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட செங்கலடிப் பகுதியில் வர்த்தகர் ஒருவரும் அவரது மனைவியும் தங்களது வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தபோது கடந்த 8 ஆம் திகதி அதிகாலை வேளையில் கொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# முத்தையன்கட்டு குளத்தின் கீழ் 2500 ஏக்கர் சிறுபோக செய்கை

முத்தையன்கட்டு குளத்தின் கீழ் இம்முறை 2 ஆயிரத்து 500 ஏக்கர் சிறுபோக நெற் செய்கையும் ஆயிரம் ஏக்கர் உப உணவு பயிர்ச் செய்கையும் மேற்கொள்வதற்கு நடப்பாண்டுக்குரிய பெரிய குளங்களுக்கான சிறுபோக கூட்டத்தின் போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சிறுபோக நெற் செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முத்தையன்கட்டு குளத்தின் நீரின் கொள்ளளவு 22 அடிகளாகும்.

இந்த அளவிற்கு தற்போது நீர் மட்டம் உள்ளமையால் இம்முறை அதிக காணிகளில் பயிர்ச் செய்கை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முத்தையன் கட்டு குளத்தின் கீழ் நிரந்தரமாக வசிக்கின்ற விவசாயிகளது இரண்டு ஏக்கர் நெற் செய்கை காணியும் ஒரு ஏக்கர் மேட்டு நிலக்காணியும்இம்முறை பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படவுள்ளது. இதேவேளை, முத்தையன்கட்டு குளத்தின் கீழ் பிரதான நீர்பாசன கால்வாய்கள் திருத்தம் செய்யப்படாத பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு வெளிமாவட்டங்களில் நிரந்தரமாக வசிக்கும் முத்தையன்கட்டு குளத்தின் கீழ் காணி உள்ள விவசாயிகளிடம் பெற்று ஒரு ஏக்கர் வீதம் பெற்று மேற்படி விவசாயிகளுக்கு வழங்கப் படவுள்ளது.

மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கால் ஏக்கர் காணியில் உப உணவு பயிச் செய்கையின் போது கெக்கரிக்காய் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இக் கெக்கரிக்காய்க்கான சந்தை வசதி தென்பகுதியிலும் மற்றும் ஜப்பான் நாட்டிலும் அதிகமாக இருப்பதால் இங்கு உற்பத்தியாகும் கெக்கரிக்காய் அனைத்தும் சந்தைப்படுத்தும் வாய்ப்பும் உள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (அ-3-15)

# இருவருக்கிடையில் வாய்த்தர்க்கம்

### ஒருவர் கொலை; மற்றையவர் தற்கொலை

(பூந்தோட்டம்)

மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பெரிய பண்டி விருச்சான் கிராமத்தில் உறவினர்கள் இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கொலையாக மாறிய நிலையில் ஒருவர் பலத்த காயத்துடன் உயிரிழந்ததுடன் மற்றையவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக மடு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

பெரிய பண்டிவிருச்சான் கிராமத்தைச் சேர்ந்த ஜோசப் பிரான்சிஸ் (வயது 52), அவருடைய மைத்துனர் முறையான யூட் சகாயதாசன் (வயது 35) ஆகிய இருவருக்கும் இடையில் நேற்று முன்தினம் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இருவருக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பினால் மண்வெட்டியை எடுத்து ஜோசப் பிரான்சிஸ் மீது யூட் சகாயதாசன் தாக்கியுள்ளதுடன் கழுத்திலும் வெட்டியுள்ளார். இதன் காரணமாக ஜோசப் பிரான்சிஸ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில் யூட் சகாயதாசன் அருகில் உள்ள காட்டுப்பகுதிக்குச் சென்று தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இது தொடர்பாக மடு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். (அ-2-266)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>உயரம்: 5'2"<br>கி.பா: 21.75, 12 இல் செவ்<br>தகைமை/தொழில்: B.Sc, M.Sc Company Team Leader<br>தொ.இ: B -1642 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>உயரம்: 5'<br>கி.பா: 16.5, 12 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: G -1653 |
| பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>உயரம்: 5'7"<br>கி.பா: 39.5, 12 இல் சூரி, செவ்<br>தகைமை/தொழில்: A/L சொந்தக்கடை<br>தொ.இ: B -1644 | பிறப்பு: 1980 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>உயரம்: 5'1"<br>கி.பா: 7<br>தகைமை/ தொழில்: A/L, முன்பள்ளி ஆசிரியை<br>தொ.இ: G-1656 |
| பிறப்பு: 1969 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>உயரம்: 6'<br>தகைமை/ தொழில்: Computer Diploma (Tesco Work) (UKPR)<br>தொ.இ: B -1649 | பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கேட்டை 4, 12 இல் செவ்<br>உயரம்: 153 cm<br>தகைமை/ தொழில்: A/L, BA வெளிவாரி இறுதியாண்டு, முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: G -1657 |
| பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>உயரம்: 5'11"<br>கி.பா: 28.5, 12 இல் செவ்.<br>தகைமை/தொழில்: B.Sc (Hons) Bank (Canada UK PR)<br>தொ.இ: B -1650 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>உயரம்: 5'5"<br>கி.பா: 43, 2 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: Bio Chemistry Degree, Bio Chemistry தனியார் (Canada UKPR)<br>தொ.இ: G -1658 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண தேர்தலை நடத்தினால் நடவடிக்கை

## ஹெல உறுமய ஆவேசம்

(கொழும்பு)

அரசாங்கம் கூறுவதுபோல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வட மாகாண சபைத் தேர்தலை நடத்த நடவடிக்கை மேற்கொண்டால் அதனை எதிர்க்கப்போவதாக தேசிய சுதந்திரமுன்னணி மற்றும் ஜாதிகஹெல உறுமய ஆகிய கட்சிகள் தெரிவித்துள்ளன.

வடக்கு மாகாண சபைத்தேர்தலை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் அதன் மூலம் நாட்டில் பாரதூரமான சிக்கல் நிலைமை ஏற்படும் என தேசிய சுதந்திர முன்னணியின் அரசியல் சபை உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க கூறியுள்ளார்.

இந்நிலைமை தொடர்பாக நாட்டு மக்களுக்கு தெளிவான புரிந்துணர்வு இல்லை என்பதால் எதிர்வரும் மேமாதம் தொடக்கம் மக்களுக்கு தெளிவுபடுத்தும் பிரசாரங்களை தமது கட்சி ஆரம்பிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண சபைத்தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் மாகாணங்களுக்கு அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை இரத்துச் செய்யவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை குறைந்தது அரசாங்கம் வடமாகாணத்தில் சிங்கள மக்களைக் குடியேற்ற வேண்டும் என ஜாதிகஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்துள்ளார். (அ-2)

# நாட்டின் உஷ்ண நிலை இருவாரங்களில் நீங்கும்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவி வரும் உஷ்ண காலநிலை அடுத்து வரும் இரு வாரங்களுக்குள் நீங்கி விடும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் கடமை நேர வானிலையாளர் ஜீவன் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்போது இடைப்பருவப் பெயர்ச்சி மழை காலநிலை நிலவுவதால் இடி, மின்னல் தாக்கங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள ஒவ்வொருவரும் விசேட கவனம் செலுத்துவது அவசியம் என அவர் குறிப்பிட்டார்.

இடி, மின்னல் காலநிலை காணப்படும் போது திறந்த வெளிகளில் நடமாடுவதையும் விளையாடுவதையும் வேலை செய்வதையும் குளங்கள், நீர் நிலைகளில் நீராடுவதையும் உயரமான பச்சை மரங்களுக்குக் கீழ் இருப்பதையும் வீடுகளில் மின்சார பொருட்களை பாவிப்பதையும் தவிர்த்து கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இவ்வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் நேற்று முன்தினம் வரையும் இடி மின்னல் காரணமாக 6 பேர் உயிரிழந்துள்ளனர். ஆனால் கடந்த வருடம் இதேகாலப் பகுதியில் 14 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் மின்னலுடன் மழை பெய்யும் போது கடும் காற்று திடீரென வீசக் கூடும் என்றும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# ஹஜ் யாத்திரை செல்வதற்கு இதுவரை 6,600 பேர் பதிவு

(கொழும்பு)

ஹஜ் யாத்திரை செல்வதற்காக இதுவரை 6ஆயிரத்து600பேர் விண்ணப்பித்துள்ளதாகவும் இதில் தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கை அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் எனவும் சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச். எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

ஹஜ் முகவர்களுக்கு இதுவரை அனுமதி வழங்கப்படாததால் முகவர்களுக்கு பணம் கொடுத்து எவரும் ஏமாற வேண்டாம் எனவும் ஹஜ் யாத்திரிகளிடம் கூடுதல் பணம் அறவிட்டு உரிய சேவை வழங்காத முகவர் குறித்து எழுத்து மூலம் அறிவித்தால் அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஹஜ் யாத்திரை தொடர்பில் முஸ்லிம்களின் ஆர்வம் அதிகமாக உள்ளது. முதன் முறையாக ஹஜ் யாத்திரை செல்ப வர்களுக்கே இம்முறையும் முன்னுரிமை வழங்கப்படும்.

ஹஜ் யாத்திரை செல்ல விரும்பும் அனைவரும் 25 ஆயிரம் ரூபா செலுத்தி தம்மை பதிவது கட்டாயமாகும். இம்முறையும் 2 ஆயிரத்து800 பேருக்கே ஹஜ் கடமையை நிறைவேற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எமக்குரிய கோட்டாவை அதிகரிப்பு குறித்து சவுதி ஹஜ் விவகார அமைச்சருடன் பேச்சு நடத்தவுள்ளேன் என்றார். (அ-2)

# ரிசானாவின் குடும்பத்திற்கு 2 இலட்சம் ரூபா நிதியுதவி

## அமைச்சர் பௌசி வழங்கினார்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் வைத்து சிரச்சேதம் செய்யப்பட்டு மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட ரிசானா நபீக்கின் குடும்பத்திற்கு சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி நேற்று முன்தினம் இரண்டு இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கியுள்ளார்.

இந்நிகழ்வு கொழும்பு 3 இல் உள்ள சிரேஷ்ட அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றது. ரிசானாவின் குடும்பத்திற்கான நிதி உதவியை சிரேஷ்ட அமைச்சர் ரிசானாவின் தந்தை எம்.எஸ். நபீக்கிடம் வழங்கி வைத்தார்.

இதன் போது அங்கு கருத்துத் தெரிவித்த சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச். எம்.பௌசி, எனது மகன் மாகாண சபை உறுப்பினர் நௌசர் பௌசியும் அவரது நண்பர்களும் இணைந்து ரிஸானாவின் குடும்பத்திற்காக இந்த நிதியை திரட்டியுள்ளனர்.

சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ரிஸானா நபீக்கின் பாவங்களை இறைவன் மன்னித்து அவருக்கு சுவர்க்கத்தை வழங்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

அவரது குடும்ப நலனுக்காக பல்வேறு தரப்பினர் உதவி வருவது வரவேற்கத்தக்கது எனவும் சுட்டிக்காட்டினார்.

தமது குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கப்பட்டது குறித்து அமைச்சர் பௌசிக்கு நன்றி தெரிவித்த ரிஸானாவின் தந்தை நபீக் ஜனாதிபதி அடங்கலான வேறு தரப்பினர் உதவி வருவதாகவும் இராணுவத்தின் உதவியுடன் வீடு கட்டப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தான் பணிபுரியும் வீட்டுக் குழந்தையைக் கொன்றதாகக் கூறி கடந்த ஜனவரி 9 ஆம் திகதி ரிஸானா நபீக் சிரச்சேதம் செய்யப்பட்டு சவுதி அரேபியாவில் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சித்திரை உற்சவம்

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் சித்திரை மாத உற்சவங்கள் பற்றிய விபரங்கள் நிர்வாக சபையினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், 24 ஆம் திகதி புதன்கிழமை உமாபதி சிவாச்சாரியாரின் குருபூசையும் மறுநாள் வியாழக்கிழமை, சித்திர புத்திரனார் கதையும், சித்திரக்கஞ்சியும், பூரணை திருவிழாவும் நடைபெறவுள்ளது. (அ)

# பத்திரிகை முறைப்பாட்டு ஆ.குழுவில் 30 முறைப்பாடுகள்

(கொழும்பு)

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு 30 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வாண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் இவ்வாறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

16 சிங்கள பத்திரிகைகளுக்கும் 8 தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் 2 ஆங்கிலப் பத்திரிகைகளுக்கும் எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன. 4 முறைப்பாடுகள் பத்திரிகைகளுக்கு எதிராக செய்யப்படவில்லை.

இவ்வாண்டின் பெப்ரவரி மாதத்தில் அதிகளவான முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.கிடைக்கப்பெற்ற எட்டு முறைப்பாடுகள் குறித்து விசாரணை செய்து தீர்வு காணப்பட்டுள்ளதாக இலங்கை பத்திரிகை முறைபாட்டு ஆணைக்குழு அறிவித்துள்ளது.(அ-2)

# வான் பாய்கிறது வவுனிக்குளம்

(மல்லாவி)

வவுனிக்குளம் மீண்டும் வான் பாய்ந்து கொ ண்டிருப்பதால் சிறு போக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மத்தியில் மன நிறைவு காணப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை பரவலாக வன்னி மாவட்டங்கள் எங்கும் மழைபெய்ததன் காரணமாக பெரிய குளங்கள் முதல் சிறிய குளங்கள் வரை வான் பாய தொடங்கியுள்ளன.

இந்நிலையிலேயே கடந்த சனிக்கிழமை ஒரு அடி 7 அங்குலமாக வான் பாய தொடங்கிய வவுனிக்குளம் நேற்று வரை 8 அங்குலம் வரை வான் பாய்ந்து கொண்டிருக்கின்றது.

தற்போது குளத்தின் நீர்மட்டம் 25 அடியாக காணப்படுகின்றது. (அ-3-15)

# பொதுபலசேனா அமைப்பை எதிர்த்தால் பயங்கரவாதிகளா?


## கொழும்பு ஆங்கில ஊடகம்

பொதுபல சேனா அமைப்பிற்கு எதிராக குரல் கொடுத்தவர்கள் மீது பயங்கரவாத குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கொழும்புதும்முல்லபிரதேசத்தில் அண்மையில் பொதுபல சேனா அமைப்பிற்கு எதிராக அமைதிப் போராட்டமொன்று நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தை பொதுபல சேனா அமைப்பும் பொலிஸாரும் கூட்டாக இணைந்து கலைத்தனர்.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக பல்வேறு வழிகளில் இணையம் ஊடாக சேறு பூசப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேஸ்புக் இணையத்தில் போராட்டக்காரர்களை இழிவுபடுத்தும் வகையிலான கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருவதுடன் அவர்கள் பயங்கரவாதிகளாக சித்தரிக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.(அ-2)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் வவுனியா செட்டிக்குளம் முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி ஞா.ஜெகநாதன் எழுதிய **நாகர் எழுவன்னி** நூல்வெளியீட்டு நிகழ்வு அண்மையில் சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தில் இடம் பெற்றது. இந் நிகழ்வில்விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதனையும் சிறப்பு பிரதியினை கிழக்கு பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியரிடமிருந்து பிரமுகர் ஒருவர் பெற்றுக் கொள்வதனையும் அருகில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட செட்டிகுளம் பிரதேச செயலர் நா.கமலதாசன் ஆகியோர் நிற்பதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பூந்தோட்டச் செய்தியாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் நிதிக்குறைப்பு அபி. திட்டங்களை பாதிக்காது

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்கா இலங்கை அரசாங்கத்திற்கு நேரடியாக உதவிகளை வழங்கவில்லை என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, இலங்கைக்கான உதவிகளை 20 வீதத்தினால் குறைத்துள்ளது என்ற தகவல் பிழையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்க அரசாங்கம் இலங்கைக்கு நேரடியாக உதவிகளை வழங்குவதில்லை எனவும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஊடாகவே அமெரிக்கா இலங்கையில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சில உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்கள் இந்த விடயத்தை பூதாகரமாக்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் தீர்மானத்தினால் சில தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் சிவில் அமைப்புக்களும் பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிடுமே தவிர அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பாதிப்பு ஏற்படாது என அவர் கூறியுள்ளார். (அ-2)

# பயிற்றப்பட்ட ஊழியர்களை இறக்குமதி செய்ய வேண்டிவரும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் இடம்பெறும் அபிவிருத்தி பணிகளுக்கு பயிற்றப்பட்ட ஊழியர்கள் உருவாகாவிடின் எதிர்காலத்தில் வெளிநாட்டில் இருந்து ஊழியர்களை அழைத்து வர வேண்டிய நிலை ஏற்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தால் தங்காலை- கொடிகடுவ- யாயவத்த பகுதியில் அமைக்கப்பட்டுள்ள முதலாவது முன்னுதாரண பயிற்சி மத்திய நிலையமொன்றை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அந்த நிலையை தவிர்ப்பதற்கு காலத்தின் தேவைக்கேற்ப பயிற்சி ஊழியர்கள் உருவாக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார். (அ-2)

# ராஜீவ் காந்தி கொலையில் புலிகளுக்கு தொடர்பில்லை

(சென்னை)

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எள்ளளவுகூட தொடர்பு காணப்படவில்லை என ரஷ்யாவின் முன்னணி ஏடு தெரிவித்துள்ளது.

ராஜீவ் காந்தி கொலையின் பின்னணியில் சில உத்தரவுகளை ரஷ்யா நாட்டு உளவுத்துறை (SVR) பிறப்பித்தது எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

ரஷ்யா நாட்டின் பிரபல ஏடு (Moskovskij Komsomolets) கடந்த 14 ஆம் திகதி வெளியிட்ட கட்டுரையிலேயே இந்த விபரம் தெரிவிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

அக்கட்டுரையின் மொழியாக்கத்தின் பிரகாரம் இந்தியாவில் உள்ள அரசியல் செல்வாக்கு மிக்க நபர் ஒருவர் ராஜீவ்காந்தி கொலையின் பின்னணியில் செயற்பட்டார் என்றும் அவருக்கான உத்தரவுகள் சில ரஷ்ய உளவுத்துறையிடம் இருந்து அனுப்பப்பட்டது.

இந்தியாவில் கிடைத்த வெளியக தொடர்புகள் மூலம் கொலை செய்யப்பட்டார் என்று ரஷ்ய ஏட்டில் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

## பிரிட்டனின் அறிக்கைக்கு பொதுபல சேனா எதிர்ப்பு

தமது அமைப்பை பௌத்த இராணுவம் எனக் குறிப்பிட்டு இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பாக பிரித்தானியா வெளியிட்டுள்ள அறிக்கையை தாம் எதிர்ப்பதாக பொதுபல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் பொதுபல சேனா அமைப்பை இனவாத அமைப்பு எனக் குறிப்பிட்டுள்ளதை வன்மையாக கண்டிப்பதாக அவ்வமைப்பின் ஊடகப் பேச்சாளர் டிலாந்த விதானகே தெரிவித்துள்ளார்.

லண்டனில் கூட ஹலால் எதிர்ப்பு அமைப்புக்கள் இருப்பதாக கூறும் அவர் அறிக்கையில் தமது அமைப்புக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து தெளிவுபடுத்தவோ விளக்கம் கோரவோ இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மூன்று இணையத்தளங்கள் மீது மீண்டும் சைபர் தாக்குதல்

இலங்கை அரசாங்கத்தின் மூன்று இணையத்தளங்கள் மீது மீண்டும் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பங்களாதேஷ் கிறே ஹட் ஹக்கேர்ஸ் என்று தம்மை அறிமுகம் செய்துள்ளவர்களே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.


இந்த சைபர் தாக்குதலால் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு இணையத்தளம், நாடாளுமன்ற சபை முதல்வரின் இணையத்தளம், தயட்ட குருள்ள கண்காட்சி இணையத்தளம் என்பன முடக்கப்பட்டுள்ளன.

இஸ்லாம் மதத்தை அவமதிக்கப்படுவதற்கு எதிராகவே இந்த தாக்குதல் நடத்தப்படுவதாக சைபர் தாக்குதலை நடத்தியவர்கள் அறிவித்துள்ளனர்.

இஸ்லாம் அவமதிக்கப்படுவதை எதிர்க்கின்றோம். உங்கள் மதத்தை அவமதிக்காத போது இஸ்லாமை ஏன் இகழ்கிறீர்கள்?

இலங்கை அரசாங்கத்துக்கு இது கடைசி எச்சரிக்கை. இவ்வாறான செயல்களை நிறுத்துங்கள் என சைபர் தாக்குதல் நடத்தியவர்கள் எச்சரித்துள்ளனர். எனினும் சைபர் தாக்குதலுக்கு இலக்கான மூன்று இணையத்தளங்களும் மீள இயங்கத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)





காவேரி கலாமன்றத்தினரால் நிகழ்த்தப்பட்ட மக்களுக்கான விழிப்புணர்வு வலுவூட்டல் நிகழ்வு அண்மையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் சுவிஸ் தொழிலாளர் முகவரகம் நிறுவனத்தின் வேலைத்திட்டங்கள் நிறைவு பெற்ற கிராமங்களில் நடைபெற்றது. இதன் ஓர் அங்கமாக காதலியார் சம்மளங்குளம் கிராமத்தில் மன்றத்தினால் நிகழ்த்தி ஆற்றப்படுவதையும் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சிவநகர் செய்தியாளர்)

# எதிர்பார்ப்புக்களுடன் உருவாக்கப்பட்ட கிழக்கு மாகாண சபையில் நம்பிக்கையில்லை

## அரசியல் மாற்றம் விரைவில் என்றார் அமீர்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையின் செயற்பாட்டில் நம்பிக்கை இழந்து விட்டுள்ளோம் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எம். எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்துள்ளார்.

அரசியலில் திடீர் மாற்றம் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் கிழக்கு மாகாண அரசியலில் நிலவுகின்றது என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் நாலாபாகங்களிலும் உள்ள மாகாண சபைகள் மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன. எனினும் கிழக்கு மாகாணம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்ட மக்களைக் கொண்ட பகுதியில் பல்வேறு எதிர்ப்புக்களுடன் உருவாக்கப்பட்ட கிழக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் அனைத்தும் நம்பிக்கை இழந்து விட்டது.

இந்த சபையினூடாக எந்தவித வேலைத்திட்டங்களும் நடைபெறுவதில்லை. நடக்கும் என்ற நம்பிக்கையும் இழந்து வருகின்றது. இதனால் கிழக்கு மாகாண அரசியலில் திடீர் மாற்றங்கள் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் நிலவுகின்றன. கிழக்கு மாகாண சபையில் ஏற்படும் மாற்றம் தேசிய அரசியலிலும் பாதிக்கலாம். இதற்கான திட்டங்கள் அவசரமாக நடந்து வருவதை உணர முடிகின்றது.

எதிர்காலத்தில் எமது சமூகம் அபிவிருத்திப் பணிகள் மற்றும் உரிமைகளைப் பற்றியும் பேச முடியாத நிலை ஏற்படும்.

அரசாங்கத்திடம் இருந்து அபிவிருத்திப் பணிகளைப் பெற்றுக் கொண்டு இந்த சமூகத்திற்காக எமது நெஞ்சை நிமிர்த்தி உரிமைகளைக் கேட்க முடியாத சந்தர்ப்பம் எதிர்காலத்தில் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

நாங்கள் இந்த அரசின் மீது நம்பிக்கை வைத்து அரசியலில் களமிறங்கியவர்கள். அரசின் மீது நம்பிக்கை கொண்ட எம்மில் அரசு கவனம் செலுத்தியிருந்தால் கிழக்கு மாகாண சபையின் செயற்பாட்டில் எமக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கும். முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்ட கிழக்கு மாகாண சபை ஊடாக தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள இனத்தைச் சேர்ந்த மூவின மக்களுக்கும் எந்தவிதமான பயனும் இல்லாத சூழ்நிலை காணப்படுகின்றது.

கிழக்கு மாகாண சபையினூடாக எதுவுமே சாத்தியப்படாது என்ற நிலைமையே இன்று மேலோங்கி இருக்கின்றது. கிழக்கு மாகாண சபை தேர்தலின் போது பல்வேறு நெருக்கடியான சூழ்நிலைகள் நிலவியபோதும் நாங்கள் அரசாங்கத்திற்கு அறுதிப் பெரும்பான்மை வாக்கினை அளித்து அரசாங்கத்தின் கௌரவத்தினைப் பாதுகாத்திருக்கின்றோம்.

ஆனால் அரசாங்கத்தையும் எங்களையும் நம்பி வாக்களித்த மக்கள் கிழக்கு மாகாண சபை ஊடாக ஏதேனும் காரியங்கள் நடக்கின்றனவா என்று கேட்கின்ற நிலமை எம்மை கடுமையாக பாதித்திருக்கின்றது. கிழக்கு மாகாணத்தின் செயற்பாடுகள் இவ்வாறே தொடருமாக இருந்தால் மிக விரைவில் திடீர் அரசியல் மாற்றம் நிகழ்வது நிச்சயம் என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவுதியில் நிர்க்கதியாகியுள்ள இலங்கையர்களுக்கு மன்னிப்பு

(கொழும்பு)

சவுதி அரேபியாவின் ஜித்தா சருபிய்யா பாலத்திற்கருகில் சுமார் ஆயிரத்து 200 இலங்கையர்கள் நிர்க்கதியான நிலையில் தஞ்சமடைந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சட்டவிரோதமாகசவுதியில்தொழில் புரிந்த இவர்கள் தம்மை இலங்கைக்கு திருப்பி அனுப்புமாறு கோரி பாலத்திற்கருகில் காத்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

தொழில்களை இழந்த நிலையில் சவுதியிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கருகில் தஞ்சமடைந்துள்ள மேற்படி இலங்கை பிர ஜைகளுக்கு பல நாட்களாக போதுமான உணவு, நீர் மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்களை மீள திருப்பி அழைப்பது குறித்து வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் கவனம் செலுத்தியுள்ளது.

மேற்படி இலங்கையர் சட்ட விரோதமாக தங்கி இருப்பதால் அவர்களை திருப்பி அழைப்பதனால் சவுதி அரசுக்கு ஒரு தொகைப் பணம் செலுத்த வேண்டி ஏற்படும் என அறியவருகிறது.

சவுதி அரேபிய அரசு பொது மன்னிப்பு ஒன்றை அறிவிக்க உள்ளதாகவும் அதன்போது சகல இலங்கையர்களையும் திருப்பி அழைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பணியக வட்டாரங்கள் கூறுகின்றன.

இலங்கையர்களை சவுதி தூதரகம் இதுவரை பொறுப்பேற்கவில்லை எனவும் இவர்களை எங்கும் செல்லவிடாது சவுதி பொலிஸார் சுற்றி இருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் நிமிர்த்தம் சென்றிருந்த 88 இலங் கையர்கள் நேற்று முன்தினம் அதிகாலை திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் தொழில் புரிவதற்காக மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ள அதேவேளை பல்வேறு காரணங்களால் இவர்கள் இலங்கைக்கு திரும்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இதற்கமைய குவைத்திலிருந்து 72 பெண்களும் சவுதியிலிருந்து 16 ஆண்களுமே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டவர்களாவர். (அ)

# இலங்கை பணிப்பெண் மீது தாக்குதல்-சவுதியில் சம்பவம்

சவுதி அரேபியாவில் இலங்கைப் பணிப்பெண் ஒருவர் நிர்வாணமாக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காலியை சேர்ந்த 45 வயது பெண்ணே இவ்வாறு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டு எஜமானியும் அவரது பிள்ளைகளும் இணைந்து குறித்த இலங்கைப் பெண்ணை நிர்வாணமாக்கி கையடக்கத் தொலைபேசி மூலம் படமெடுத்ததாகவும் அத்துடன்வீட்டுஎஜமான்குறித்தபெண்ணை பிரம்பால் கடுமையாகத் தாக்கியதாகவும் குறி ப்பிடப்படுகிறது.

சித்திரவதைகளை தாங்க முடியாத குறித்த பெண் அந்நாட்டு பொலிஸில் முறைப்பாடு செய்து நாடு திரும்பியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் தற்போது காலி கராபிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த விசேட நடவடிக்கை

இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் புத்திக சிறிவர்தன தெரிவித்துள்ளார். இதற்காக புதிய வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்த நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

சுற்றுலா விடுதிகளும் பொலிஸாரும் இணைந்து இந்த வேலைத் திட்டங்களை முன்னெடுக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்படி தமது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஹோட்டல்களில் தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் தொடர்பான தகவல்களை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு ஹோட்டல் உரிமையாளர் வழங்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் இந்த தகவல்களின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படும் எனவும் இந்நடவடிக்கைகளின் மூலம் வெளிநாட்டவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-2)

# நண்டு வளர்ப்பு பயிற்சி நெறி

(பூநகரி)

வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் நாச்சிக்குடா கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 10 இளைஞர்களுக்கு நண்டு வளர்ப்பு தொடர்பான பயிற்சியொன்று வழங்கப்பட்டு நண்டு வளர்ப்பை மேற்கொண்டுள்ளார்கள்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அனுசரணையுடன் பொஸ்போ நிறுவனம் இத்திட்டத்தை செயற்படுத்துவதற்கான நிதி உதவியை வழங்கி வருகிறது என தேசிய இளைஞர் சேவை மன்ற பூநகரி பிரதேச அலுவலர் தெரிவித்தார். (அ-2-84)

# பிரிட்டன் தீம் பார்க்கில் பறந்தது புலிக்கொடி


பிரித்தானிய தீம் பார்க்கில் பறக்க விடப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிக்கொடி அகற்றப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரஜை ஒருவர் இது தொடர்பில் பிரித்தானியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திற்கு அறிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இது குறித்து அந்நாட்டு அதிகாரிகளுக்கு உயர்ஸ்தானிகராலயம் முறைப்பாடு செய்துள்ளது.

லண்டனின் புறநகர்ப் பகுதி யான மிட்சாமில் இந்த புலிக் கொடி பறக்க விடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய உலக நாடுகளின் கொடிகளுடன் இந்தக் கொடியும் பறக்க விடப்பட்டிருந்ததாக குறிப்பிடப்படுகிறது. தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பு ஒன்றின் கொடியே இவ்வாறு பறக்கவிடப்பட்டுள்ளதாக இலங்கை உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் குறித்த தீம் பார்க் நிர்வாகத்தினருக்கும் தெளிவுபடுத்தியதாகவும் இதன் பின்னர் இந்தக் கொடி அகற்றப்பட்டதாகவும் தெரிவிக்கபடுகிறது. (அ)



சார்க் நாடுகளைச் சேர்ந்த ஆங்கில எழுத்தாளர்கள் கலந்து கொண்ட இலக்கிய திருவிழா அண்மையில் இந்தியாவின் ஆக்ரா நகரில் நடைபெற்றது. இவ்விழாவில் இலங்கையிலிருந்து கலந்து கொண்ட கவிஞர் சோ.பத்மநாதன், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி கந்தையா கணேசன் ஆகியோர் தமது படைப்புக்களை சமர்ப்பித்து உரையாற்றுவதைப் படங்களில் காணலாம்.

# நாட்டில் பரவும் எலிக்காய்ச்சல்; விவசாயிகளுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் எலிக்காய்ச்சல் அச்சுறுத்தல் காணப்படுவதால் வயல் வேலைகளில் ஈடுபட முன்னர் விவசாயிகள் டொக்ஸிசைக்கிளின் (Doxycycillin) மாத்திரையைப் பாவித்துக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதேநேரம் கடும் காய்ச்சல், கண்கள் சிவப்பாதல், உடல்வலி போன்ற அறிகுறிகள் காணப்படுபவர்கள் தாமதியாது அரசாங்க வைத்திய சாலைகளை அணுகி சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும் என சுகாதார அமைச்சு கேட்டுள்ளது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் நோய் பரவுதல் தடுப்பு பிரிவுப் பணிப்பாளர் டாக்டர் பபா பலிகவர்தன கூறுகையில், இவ்வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இன்று வரையும் எலிக் காய்ச்சலுக்கு ஆயிரத்து 281 பேர் உள்ளாகியுள்ளனர். இவர்களில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நோய்க்கு இவ்வருடம் ஜனவரி மாதம் 230 பேரும் பெப்ரவரி மாதம் 268 பேரும் மார்ச் மாதம் 680 பேரும் ஏப்ரல் மாதத்தின் முதல் 15 நாட்களில் 98 பேரும் ஆளாகியுள்ளனர்.

இந்நாட்டில் வயல் வேலைகளில் ஈடுபடுவர்களே எலிக்காய்ச்சலுக்கு உள்ளாவது வழமையாகவுள்ளது. அதனால் வயல் வேலைகளில் ஈடுபட முன்னர் பிரதேசத்திலுள்ள மருத்துவ அதிகாரி அலுவலகத்தை அணுகி டொக்ஸிசைக்கிலின் மாத்திரைகளைப் பெற்று பாவித்துக் கொள்ள வேண்டும்.

எலிக்காய்ச்சலுக்குரிய நோய்க் காரணியின் தாக்கத்தைத் தவிர்த்துக் கொள்வதற்கு இம்மாத்திரை பெரிதும் உதவக்கூடியதாகும். அதனால் வயல் வேலைகளில் ஈடுபடுபவர்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்துவது அவசியம் என அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# முன்னாள் போராளிகள் தென்பகுதிக்கு சுற்றுலா

(கொழும்பு)

புனர்வாழ்வு பெற்றுவரும் சுமார் 400 முன்னாள் போராளிகள் தென் பகுதிக்கு சுற்றுலாப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சிவலிங்கம் சதீஸ்குமார் தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதிவரை மூன்று நாட்கள் கொழும்பின் முக்கிய பிரதேசங்கள், காலி, மாத்தறை, தெனியாய, கதிர்காமம் பகுதிகளுக்கும், மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கும் இவர்கள் விஜயம் செய்யவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேற்படிபிரதேசங்களில்நடைபெறவுள்ள கலை, கலாசார, விளையாட்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் இவர்கள் கலந்து கொள்ளவுள்ளதுடன் இந்தப் பிரதேசங்களில் வாழும் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் கலாசார ,பாரம்பரிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் 25ஆம் திகதி புகையிரதம் மூலம் வவுனியாவிலிருந்து புறப்படவுள்ள 400 முன்னாள் போராளிகளும் மறுநாள் காலை கொழும்பு கோட்டைபுகையிரத நிலையத்தை வந்தடைந்தவுடன் அங்கு வரவேற்கப்படவுள்ளனர்.

அன்றையதினம் கொழும்பின் பல்வேறு முக்கிய இடங்களையும் சென்று பார்வையிடவுள்ளதோடு 27ஆம் திகதி காலி, மாத்தறை, தெனியாய பகுதிகளுக்கும் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

எதிர்வரும் 28ஆம் திகதி அன்று புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்ட மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கும் கதிர்காமம் பிரதேசத்திற்கும் அழைத்துச் செல்லப் படவுள்ளனர்.

அத்துடன் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ள சமய, கலை, கலாசார நிகழ்வுகளிலும் தெனியாய தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ள சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் போட்டிகளிலும் இவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, அமைச்சின் செயலாளர், புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் தர்சன ஹெட்டியாராச்சி உட்பட அந்தந்த பிரதேச அரசியல் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

புனர்வாழ்வு பெற்று வருபவர்களை ஏனைய மதத்தார்கள் கலை, கலாசார, பாரம்பரியம் தொடர்பிலான அனுபவங்களை பரிமாறிக் கொள்ளல் போன்ற நடவடிக்கையின் ஓர் அங்கமாகவே இந்த சுற்றுப்பயணமும் ஏற்பாடு செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# யானைத்தந்தங்கள் வைத்திருந்தவர் கைது

(கொழும்பு)

யானைத்தந்தங்கள் இரண்டினை வைத்திருந்தவர் கருவலகஸ்வெவ பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கருவலகஸ்வெள முறியக்குளம் பகுதியினை சேர்ந்தவரென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேகநபரிடமிருந்து நேற்றுமுன்தினம் 6 அங்குலம் நீளமுடைய யானைத்தந்தங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்

18

"இன்று இந்த வன்னியர்கள் மந்தரிமனையில் மகா மந்திரியைச் சந்திக்கிறார்களாம் தேவி."

"அரசனைச் சந்திக்கலாமா?"

"மகா மந்திரியை எவரும் சந்திக்கலாம்."

மந்திரிமனை, களை கட்டியிருந்தது. கனகராஜன் கருதியதுபோல அனைவரும் வந்திருந்தார்கள். பதவியா வன்னியன் உலோகநாத தண்ட நாயக்கன் கம்பீரமாக இருக்



செங்கை ஆழியான்

கையில் இருந்தான். அவன் முன் அப்பாமுதலி, காக்கை வன்னியன், திருமலை வன்னிமை கோகர்ண வன்னியன் ஆகியோர் அமர்ந்திருந்தனர்.

"மகாமந்திரியாரே, உங்கள் மீது எனக்குக் கடுங் கோபம்..." என்றான் லோக நாத தண்ட நாயக்கன் கரகரத்த குரலில்.


"எனது விருந்தினராக வந்திருக்கிறீர்கள். அப்படிக் கூறக்கூடாது. என்னவாயினும் கூறுங்கள்... கோபத்துக்கு என்ன காரணம்?" என்றார் பரநிருபசிங்கர்.

"என்னை நம்பவைத்து ஏமாற்றிவிட்டீர்கள்."

"எதைக் கூறுகிறீர்கள் வன்னியரே?"

"தெரியாததுபோலக் கேட்க வேண்டாம். உங்கள் தங்கை பரவையை,"

அவசரமாகப் பரநிருப சிங்கர் குறுக்கிட்டார். "என் தங்கையல்லள் சங்கிலியின் தங்கை."



நல்லூர் இராசதானியில் படைவீரர்களின் நினைவாக அமைக்கப்பட்ட கூட்டத்தார் கோவில்

## வன்னியர் வருகை

பரநிருப சிங்கரின் குறுக்கீடுகளும் விழுந்த வார்த்தைகளின் கடுமையும் சகோதரர்களின் ஒற்றுமையைப் பறைசாற்றின. அங்கிருந்தவர்களுக்கு நிலைமை மகிழ்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும்.

"ஏமாற்றியது நானல்லன் மன்னன். தனது நண்பனுக்கு பரவையை கன்னிகாதானம் செய்துவிட்டான். தன் விருப்பப்படி நானொன்றும் செய்ய முடியவில்லை தண்டநாயக்கரே. என் தங்கையாயின் என் விருப்பப்படி நடந்திருக்கும். தமக்கையார்க்கும் கோகர்ண வன்னிமைக்கும் திருமணம் நடக்கவில்லையா?"

"அந்த விடயத்தில் உனக்கும் ஒரு மனஸ்தாபம் உண்டு. மணிமுடிக்கு பரநிருபரே உரித்துடையவர்... அவர் மறுத்தால் அவர் மகனைச் சாரும். இல்லாவிடில் பரநிருப சிங்கரின் தமக்கையார் மகனைச் சாரும். யாழ்ப்பாண முடிக்கு உன் மகனும் உரித்துடையவன்" என்றான் கோகர்ண வன்னியன். அதுவரை பேசாதிருந்த அப்பாமுதலி பேசினார்.

"முடிக்கு உரிமை கோரு வதாக நானுமறிந்தேன் அது தவறு. ஆண்வழிதான் எங்கள் வழக்கம்..."

"வழக்கப்படியா இங்கெல்லாம் நடந்தது?" உரிமையுடையவனிருக்க பலரைத் தாண்டி முடியைக் கொடுக்கவில்லையா? நீங்கள் என்ன சொன்னாலும் சொல்லுங்கள் கவலையில்லை. திருமலை வன்னிமை அடங்காப்பற்றில்



ஆதிக்கம் உடையவர், என் மகனை அடங்காப்பற்றின் மன்னனாக விரைவில் முடி சூட்டுவேன்."

"பிரச்சினைகளை வலிய இழுக்காதீர்கள் வன்னியரே... போகட்டும். ஏமாற்றம் பற்றி தண்டநாயக்கர் பேசினார். "இது என்ன பெரிய எமாற்றம்? பரவைக்குக் கொடுத்து வைக்கவில்லை. தன் விருப்பப்படி தன் முடியை சங்கிலிக்கு வழங்கினாலும் அதன் பின்னர் அவர் அடைந்த ஏமாற்றம் கொஞ்சமா? ஈமைக் கிரியைகள் செய்து கொள்ளியிட வேண்டிய மகன் அன்றிலிருந்து அவருடன் பேசுவதில்லை. இன்பத்திலும் துன்பத்திலும் சமபங்கெடுப்பதாகச் சத்தியம் செய்து தாலியேற்ற மனைவி இன்று அவருடன் பேசுவதில்லை. இந்த ஏமாற்றத்தைவிடவா உங்கள் ஏமாற்றம் பெரிது?" என்றார் அப்பாமுதலி.

(தொடரும்)

---

# விக்கிலீக்ஸின் அதிரவைக்கும் அம்பலங்கள்!

**விக்கீலீக்ஸ்** இணையத்தளம் வெளியிட்டுவரும் இரகசிய ஆவணங்கள் இதுவரை அமெரிக்க அரசாங்கத்தின் கண்களில் விரலை விட்டு ஆட்டி வந்தது. என்றால், இப்போது இந்திய அரசியலிலும் அது பல அதிர்வுகளை எற்படுத்திக் கொண்டிருக்கிறது. கடந்த வாரம் விக்கிலீக்ஸ் வெளியிட்ட பல ஆவணங்கள் இந்திய அரசியல் மற்றும் தமிழக அரசியல் சம்பந்தப்பட்டவை.

அவை குறிப்பிடும் பல செய்திகள், இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்ளிலும் அரசியலிலும் அமெரிக்கா மிகத் தீவரமான தொடர்பு வைத்திருந்ததை அம்பலமாக்குகிறது.

உலகெங்குமுள்ள அமெரிக்க தூதரகங்கள் உண்மையில் அமெரிக்காவின் உளவு அமைப்புகளாகத்தான் செயற்பட்டு வருகின்றன. அந்த நாட்டின் ஒவ்வொரு அரசியல் பிரச்சினைகளைப் பற்றி மிகச் சிறிய தகவல்களைக்கூட தூதரக அதிகாரிகள் தங்கள் நாட்டு அரசாங்கத்திற்கு அனுப்பி வந்திருக்கிறார்கள். அந்த வகையில் ஒவ்வொரு நாட்டையும் பற்றி இலட்சக்கணக்கான ஆவணங்கள் அமெரிக்கா வசம் உள்ளன. அந்த ஆவணங்களைத்தான் விக்கிலீக்ஸ் கைப்பற்றி இப்போது வெளியிட்டு வருகிறது.

ஈழப்பிரச்சினையில் பலருடைய நிலைப்பாடுகள் கடந்த காலத்தில் எப்படியிருந்தன என்பதற்கு விக்கிலீக்ஸ் பல சுவாரசியமான உண்மைகளை வெளிப்படுத்துகிறது.

இப்போது ஈழத்தை மலரச் செய்யப் போகிறவராகவும் ஈழத் தாயாகவும் வர்ணிக்கப்படும் தமிழக முதல்வர் ஜெயலிதா 1991 இல் ராஜீவ் காந்தி கொலைக்குப் பிறகு புலிகளை தமிழகத்திலிருந்து எந்த அளவிற்கு துடைத்தெறிய வேண்டும் என்பதில் ஆவேசம் காட்டினார் என்பதை அது வெளிப்படுத்துகிறது.

அப்போது சென்னையிலிருந்த அமெரிக்க தூதரக அதிகாரி ஆன்ட்ரு டி சின்கின் அமெரிக்காவுக்கு அனுப்பிய செய்தியில், ஜெயல லிதா புலிகளைத் தமிழகத்திலிருந்து வேரறுப்பதில் ஒரு இரும்புப் பெண்மணியாகச் செயற்பட்டு வருகிறார் என்றும், தமிழகத்தின் முக்கிய பொறுப்பு வகித்த அதிகாரி ஒருவரிடம் புலிகளை அழிக்க எந்த நட்வடிக்கைக்கும் தயங்க வேண்டாம்; தேவைப்பட்டால் புலிகளோடு தொடர்புடையவர்களை போலி என்கவுண்டரில் கொல்லவும் செய்யலாம் என்றும் உத்தரவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய முன்னாள் தூதுவரும் ராஜீவ் காந்தியின் ஆலோசகருமான, ஜி.பார்த்தசாரதி சொன்ன ஒரு கருத்தையும் விக்கிலீக்ஸ் சுட்டிக் காட்டுகிறது. கருணாநிதி கடந்த காலத்தில விடுதலைப்புலிகளோடு கருத்து வேறுபாடு கொண்டிருந்த போதும் 1989-ல் ஆட்சிக்கு வந்ததும் புலிகளின் ஆதரவாளராக மாறினார் என்றும், தமிழகத்தில் புலிகளை வளரவிட்டதே அவர் செய்த தவறு என்றும், ஆனால், ஜெயலலிதா புலிகளை முற்றாக ஒழித்துக் கட்டுவதன் மூலம் தனது சட்டபூர்வ கடமையை சிறப்பாக நிறைவேற்றி வருவதாகவும் பார்த்த சாரதி கூறுயதை விக்கிலீக்ஸ் தெரிவித்திருக்கிறது.

ஆனால் விக்கிலீக்ஸ், 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி தமிழக மீனவர்கள் 5பேர் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு கர்ரணம் விடுதலைப்புலிகள்தான் என அப்போதைய தமிழக முதல்வர் கருணாநிதி சட்ட சபையில் தெரிவித்ததை இங்குள்ள அமெரிக்க தூதரகம் பதிவு செய்து வாஷிங்டனுக்கு செய்தி அனப்பியதை யும் அது சுட்டிக்காட்டு கிறது. அத்தோடு அந்த ஆவண்ம் நிற்கவில்லை. கருணாநிதி, இலங்கை அரசுக்கு இந்திய அரசு இராணுவ உதவி அளிப்பதை ஒருபோதும் தி.மு.க. ஆதரிக்காது என அப்போதே எச்சரித்ததையும் சுட்டிக்காட்டுகிறது. இந்தத் தகவல் அனுப்பப்பட்ட காலத்தில் தான் விடுதலைப் புலிகளின் கப்பல்களை இலங்கை இராணுவம் நடுக்கடலில்வைத்து அழிப்பதற்கு இலங்கை இராணுவத்திற்கு அமெரிக்க இராணுவம் உதவி செய்ததை நாம் நினைவு படுத்திக்கொள்வது நல்லது.

மேலும் விக்கிலீக்ஸ் 2011 இல் வெளியிட்ட சில ஆவணங்களில் 2007-ல் போரில் இலங்கை அரசாங்கம் இந்தியா தனக்குக் கொடுத்த ரேடர்கள், தனக்குப் போதவில்லையென்றும் அமெரிக்காவிடம் ரேடர்களை அளித்து உதவுமாறு கேட்டதையும் வெளிப்படுத்துகிறது. 2007 மார்ச்மாதத்தில் கட்டுநாயக்கா விமான நிலையத்தின் மீது புலிகளால் நடத்தப்பட்ட வான் வெளி விமானத்தாக்குதல்களால் இந்தியாவிடம் இருந்து பெறப்பட்ட எம்.ஐ.ரக. ஹெலிகொப்பர்களும் சேதமடைந்தன. இந்தியா அளித்திருந்த இருபரிமாண ரேடர்களால் புலிகள் வந்ததை கண்டறிய முடியவில்லை எனவே, சீனாவிடமிருந்து முப்பரிமாண ரேடர்கள் பெறுவதாக முடிவு செய்யப்பட்டுள்ளதாக கோத்தபாய ராஜபக்ச அமெரிக்க தூதரகத்திடம் தெரிவித்ததையும் அதேசமயம், இந்தியாவிற்கு தெரியாமல் இதுபோன்ற நடவடிக்கைகளில் இறங்கக் கூடாது என கோத்தபாய ஒப்புக்கொண்டதையும் அந்தத் தகவல் தெரிவிக்கிறது.




மேலும், இலங்கையின் கடற்பரப்பைக் கண்காணிப்பதற்காக அமெரிக்கா கொடுத்த ரேடர்களை வடபகுதியில் நிறுவக்கூடாது என்று இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு முறை இந்தியா ஆட்சேபம் தெரிவித்ததையும், இலங்கை அதற்கு உடன்படாததால் இந்தியா, தனது எதிர்ப்பை கைவிட்டு விட்டதையும் விக்கிலீக்ஸ் சுட்டிக்காட்டுகிறது. (தொடரும்)

-மனுஷபுத்திரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 14.04.2013-14.05.2013



## மேஷம்

அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

**சுபகாரியப் பேச்சுக்கள் முடிவடையும்!**

**தன்னம்பிக்கையோடு பணியாற்றி வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக்கொள்ளும் மேஷ இராசி நேயர்களே!**

செவ்வாயின் ஆதிக்கத்தில் பிறந்த நீங்கள் செல்வாக்குப் பெற்றவர்களாக இருப்பீர்கள். உங்களுக்கு இந்த சித்திரைமாத கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது செவி குளிரும் செய்திகள் வந்து சேரப் போகின்றது என்றே சொல்ல வேண்டும்.

மாதத் தொடக்கத்தில் நான்கு கிரகங்கள் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார்கள். ஆனால் அஸ்தமனத்தில் செவ்வாயும் சுக்கிரனும் புதனும் இருக்கிறார்கள். சனியும் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். இருப்பினும் தனஸ்தானத்தில் குருவும் சந்திரனும் கூடியிருப்பது யோகம்தான்.

4க்கு அதிபதி சந்திரனும் 9 க்கு அதிபதி குருவும் இணைந்து தனஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்த மாதம் சிறப்பானதாக இருக்கும். செல்வாக்கு மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து உதவுவர். செல்வச் செழிப்பில் மிதக்கும் வாய்ப்புகளும் உருவாகும்.

6 க்கு அதிபதி வலிமை இழப்பதால் எதிரிகளின் பலம் குறையும். உங்கள் கரம் மேலோங்கியிருக்கும். பஞ்சாயத்துக்கள் மற்றும் வழக்குகளில் வெற்றி கிட்டும். பொதுவாக 3 க்கு அதிபதியாகவும் புதன் விளங்குவதால் சகோதர வழியில் சில சகாயங்கள் கிடைக்கும். அவர்கள் உங்கள் சொல்லிற்கு மதிப்புக் கொடுப்பர்.

சனி, செவ்வாய் இரண்டும் ஒன்றையொன்று பார்த்துக் கொள்ளும் இந்த நேரத்தில் ஆரோக்கியத்தில் மட்டும் அக்கறை செலுத்த வேண்டியிருக்கும். தெசாபுத்தி பலம் பெற்றிருப்பவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. இருப்பினும் உங்களோடு இணைந்திருக்கும் குடும்பத்தினர்களுக்கு வைத்தியச் செலவுகள் உருவாகும். குடும்பச் சுமை கூடும். கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் செயற்பட்டால்தான் வரவைத் தக்கவைத்துக்கொள்ள இயலும்.

வடக்கு நோக்கிய கொற்றவை வழிபாடும் செவ்வாய் தோறும் மேற்கொள்வதோடு சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டையும் சனி கவசம் பாடி சனீஸ்வரர் வழிபாட்டையும் மேற்கொண்டால் சிறுசிறு பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும். வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை. பழைய வாகனங்களை மாற்றிக் கொள்வதும் புதிய வாகனங்களை நிறுத்தி பூஜை போட்டு எடுப்பதும் இதுபோன்ற காலங்களில் நிகழும்.

## செல்வச் செழிப்பில் மிதக்கும் வாய்ப்பு உருவாகலாம்!

**புதனின் மேட- இடப சஞ்சாரங்கள்!**


புதன் மேட இராசியில் ஏப்ரல் 21 ஆம் திகதி சஞ்சரிக்கிறார். 6 க்கு அதிபதி ராசியில் இணையும் பொழுது சேமிப்பில் சிறிது கரையலாம். சிலரிடம் உதவிகளைப் பெறுவதற்கான கடன் வாங்கிக் கொடுக்கும் சூழ்நிலை உருவாகும். சகோதரர் வழியில் நடைபெறும் சுபகாரியத்தை முன்நின்று நடத்தி வைப்பீர்கள். பணப் புழக்கம் நன்றாக இருந்தாலும் வந்த மறுநிமிடமே செலவாகலாம்.

மே 7 ஆம் திகதி இடப இராசியில் புதன் சஞ்சரிப்பது யோகம்தான். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புக் கிட்டும். மின்சாதனப் பொருட்கள் டி.வி. பிரிட்ஜ் போன்றவற்றில் பழையவற்றைக் கொடுத்துவிட்டுப் புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**இடப சுக்ரனின் சஞ்சாரம்!**

இது ஓர் உன்னதமான காலமாகும். தனாதிபதி தன ஸ்தானத்தில் பலம்பெறும் மே 5 ஆம் திகதி முதல் நீங்கள் தொட்ட காரியம் வெற்றி பெறும். தொல்லை தந்தவர்கள் தோள் கொடுத்து உதவுவர். பணப் புழக்கம் அதிகரிக்கும். தங்கம், வெள்ளி போன்றவைகளை வாங்கிச் சேர்க்க முற்படுவீர்கள். புதிய வாகனங்கள் வாங்க போட்ட திட்டம் நிறைவேறும். இம்மாதம் துர்க்கை வழிபாடு துயரங்களைப் போக்கும்.

# சிவல்புரி சிங்காரம்



## இடபம்

கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோஹினி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்

**வாய்ப்புகள் வாசல் கதவைத் தட்டும்!**

**உழைப்பால் உயர்ந்த உத்தமர் என்ற பட்டத்தை பெற விரும்பும் இடப இராசி நேயர்களே!**

உங்களுக்கு இந்த சித்திரை மாதம் சிறப்பான பலன்களையே வழங்கும் என்றே சொல்லலாம். மாதத் தொடக்கத்தில் விரய ஸ்தானத்தில் நான்கு கிரகங்கள் சஞ்சரித்தாலும் ஆறாம் இடத்தில் ராகுவும் லக்னத்தில் குருவும் சஞ்சரித்து அஷ்டலட்சுமி யோகத்தை உண்டாக்குகின்றன. எட்டு லட்சுமிகளும் நம்மை ஏறிட்டு பார்த்தால் கொட்டும் பணமழையில் நாம் நனைந்துதான் ஆகவேண்டும்.

எனவே, எந்த காரியத்தை எந்த நேரத்தில் செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்களோ, அந்த காரியத்தை அந்த நேரத்தில் செய்ய ஆற்றல் மிக்கவர்களின் உதவி உங்களுக்கு கிடைக்கும். அதுமட்டுமல்ல அதற்கு தேவையான பணமும் அதற்கு முன்னதாகவே வந்து சேரும். எனவே, இம்மாதத்தில் பல முக்கிய காரியங்களை செய்ய முடிவெடுக்கப் போகிறீர்கள்.

புதன் மாதத் தொடக்கத்தில் நீச்சம் பெற்று பிறகு மேஷத்தில் சஞ்சரிக்கின்றார். செவ்வாயும் சுக்ரனும் விரய ஸ்தானத்தில் வலிமை இழக்கிறார்கள். 6 ஆம் இடத்திற்கு அதிபதி பலமிழக்க நேரிடுவதால் எதிரிகளின் பலம் குறையும். ஏமாற்றங்களை சரி செய்து கொள்வீர்கள். உதிரி வருமானங்கள் ஒப்பற்ற விதத்தில் வந்து சேரும். உள்ளத்தில் நினைத்ததெல்லாம் ஓரிரு நாட்களில் நடைபெற்று விட்டதே என்று சொல்லி சந்தோஷப்படுவீர்கள்.

சனியின் வக்ரம் இருப்பதால் வழக்குகள் தொடரலாம். வாய்த்தாக்கல்கள் நீண்டு கொண்டே செல்லும். அதற்காக கவலைப்பட வேண்டாம். சனி உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகம்தான். 9,10 க்கு அதிபதி உச்சம் பெற்ற வக்ரம் பெறும் நோக்தில் உற்றார், உறவினர்கள் உடனிருக்கும் தாய், தந்தை தொழில் நிலையத்தில் பணிபுரிபவர்கள் அனைவரிடமும் கோபத்தை காட்டாமல் குணத்தோடு நடந்துகொள்வது நல்லது. சனிக்கிழமைதோறும் எள் கலந்த சாதத்தை காகத்திற்கு வையுங்கள்! சொல்லில் சுவை கலந்த பாடல்களை சனியின் சன்னிதியில் பாடுங்கள். நல்ல வாய்ப்புகள் எல்லாம் உங்கள் வாயில் கதவைத் தட்டும்!

## ஆசைகள் அனைத்தும் நிறைவேறும்!

**புதனின் மேட இடப சஞ்சாரங்கள்!**

ஏப்ரல் 21 ஆம் திகதி மேட இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். தனாதிபதி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் குடும்பத்திற்கு தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வது நல்லது. மின்சாதனங்கள் ஆபரணங்கள், பீரோ போன்றவற்றை வாங்குவது நல்லது. பழைய மின்சாதனங்களை கொடுத்து புதிய பொருட்களை வாங்குவதில் சிலர் ஆர்வம் காட்டுவீர்கள்.

மே 7 ஆம் திகதி இடபத்தில் புதன் சஞ்சரிக்கும் பொழுது மிக சிறந்த பலன்கள் உங்களுக்கு வந்து சேரும். தன பஞ்சமாதிபதி இராசியில் இணையும் பொழுது கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகும். பிள்ளைகளின் வேலைக்காக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஏற்கனவே வந்த வருமானத்தோடு இல்லத்தில் உள்ளவர்களின் மூலமாகவும் வந்த வருமானத்தோடு வாழ்க்கைப் பாதையை சீராக்கிக் கொள்வீர்கள். ஜோராக்கிக் கொள்வீர்கள்.

**இடப சுக்ரனின் சஞ்சாரம்!**

மே 5 ஆம் திகதி இடப இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இராசிநாதன் இராசியிலேயே சஞ்சரிக்கும் இந்த நேரம் ஆசைகள் அனைத்தும் நிறைவேறும். ஆரோக்கியமும் சீராகும். ஓசைப்படாமலேயே ஒருசில நல்ல காரியங்களை உறவினர்களுக்கு செய்து கொடுப்பீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். வங்கி சேமிப்பு அதிகரிக்கும். உத்தயோக உயர்வு ஊதிய உயர்வு பதவி மாற்றம் போன்ற வைகள் ஒருசிலருக்கு ஏற்படலாம். அடுத்தவர்களுக்காக எடுத்த முயற்சிகளிலும் ஆதாயம் கிடைக்கும். இம்மாதம் காமாட்சியம்மன் வழிபாடு கவலைகளைப் போக்கும்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா கதைகள்

# அனந்தவர்மனின் புரட்சி



திரிபர்ண இராச்சியத்தை ஆண்டுவந்த சக்கரவர்த்தி விஷ்ணுவர்த்தனரின் கீழ் பல குறுநில மன்னர்கள் அடி பணிந்து கப்பம் செலுத்தி வந்தனர். ஒருநாள் அவருடைய தளபதி சூரசேனன் பரபரப்புடன் அவரே அனுப்பி பிரபு நம் ஆதிக்கத்தில் இருக்கும் இராமநாதபுரி நாட்டு மன்னன் அனந்தவர்மனை பற்றிய ஒரு தகவலைக்கொண்டு வந்திருக்கிறேன். அவன் தங்களுக்கெதிராக புரட்சி செய்து வருகிறான். நமக்குப் கப்பம் செலுத்துவதையே நிறுத்திய தோடன்றி அவன் உங்களுடைய ஆட்சியை பற்றிப் புகார்கள் செய்து வருகிறான். இது மிகவும் அபாயகரமானது. தாங்கள் உடனே சம்மதித்தால் படையுடன் சென்று அவனை முறியடித்து தங்களுக்கெதிராக புரட்சி செய்யத் துணிந்த அவன் தலையைச் சீவி தங்கள் பாதங்களில் அர்ப்பணிக்கிறேன் என்று பொரிந்து தள்ளினான்.

அவன் கூறியது அனைத்தையும் பொறுமையாகக்கேட்ட சக்கரவர்த்தி சற்றும் பதற்றமோ கோபமோ அடையாமல் அப்படியா விடயம். சரி நான் கவனித்துக்கொள்கிறேன் என்று சூரசேனனை அனுப்பிவிட்டார். சில நாட்கள் கழித்து சக்கரவர்த்தி சூரசேனனை தனிமையில் அழைத்து தளபதி! நான் நமது நாட்டு மக்களுடைய குடும்ப வாழ்க்கை முறையைப் பற்றி ஒரு கருத்துகணிப்பு நடத்துகிறேன். அதற்கு உன் குடும்பத்தையும் சேர்த்துக்கொள்ள விரும்புகிறேன். நான் சொல்லும் விடயங்களை வைத்து நீ உன் குடும்பத்தினரிடம் ஆய்வு நடத்தி நீ கண்டு பிடிக்கும் விடயங்களை என்னிடம் சொல்லவேண்டும் சரியா என்று கேட்க சூரசேனன் சம்மதித்தான்.

இதுபோல் சக்கரவர்த்தி சொன்னது அவனுக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை. ஏனெனில் அவர் எப்போதும் ஏதாவது ஒரு கணிப்பு நடத்தி தன் குடிமக்களின் கருத்துக்களைத் தெரிந்து கொள்வது வழக்கம். இதற்கு சில சந்தர்ப்பங்களில் சூரசேனனே உதவிசெய்தும் இருக்கிறான். ஆகவே அவன் பணிவுடன் கட்டளையிடுங்கள் சக்கரவர்த்தி என்றான். நீ செய்யவேண்டியது இதுதான்! கடந்த 3 மாதங்களில் குடும்ப விடயங்களைப் பற்றி எடுத்த முடிவுகளில் எத்தனை முடிவுகளை உன் குடும்பத்தினர் முழு மனதுடன் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர் எனக்கணக்கிடு. எத்தனை முடிவுகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கணக்கிடு. அவற்றைத் தொகுத்து நாளைக்கு என்னிடம் கொடு என்றார்.



மறுநாளே சூரசேனன் தன் ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புக்களின் தொகுப்புடன் சக்கரவர்த்தியிடம் வந்தான். அவன் முகத்தில் பழைய கம்பீரம் இல்லை. நடையில் மிடுக்கு இல்லை. மிகவும் கூனிக்குறுகிப்போய் பிரபு! கடந்த மூன்றுமாதங்களில் நான் எடுத்த எந்த முடிவையுமே என் குடும்பத்தினர் ஏற்கவில்லை என்று தெரிகிறது என்றான்.

என்ன சொல்கிறாய் தளபதி? என்று திடுக்கிட்டவர் போல் நடித்த சக்கரவர்த்தி வீரத்துக்குப் பெயர் போன திரிபுரண இராச்சியத்தளபதி, அஞ்சாத சிங்கம், சீறும் புலியான உன் முடிவுகளை உன் குடும்பத்தினர் ஏற்கவில்லையா? ஒவ்வொரு முறை உன் முடிவை அவர்கள் எதிர்க்கும் போது நீ என்ன செய்தாய்? திட்டினாயா, அடித்தாயா, வீட்டை விட்டு வெளியேற்றினாயா? அல்லது வேறு ஏதாவது கடும் தண்டனை விதித்தாயா? என்றான். தர்ம சங்கடத்துடன் நெளிந்த சூரசேனன் பிரபு என்னுடைய குடும்பத்தினரிடம் அப்படியெல்லாம் என்னால் நடக்கமுடியுமா? என் பிள்ளைகள் என் இரத்தம். என் மனைவியோ என்னுடைய வாழ்க்கைத் துணைவி! நான் உயிருக்கு உயிராக நேசிப்பவள்! அவர்களை நான் எப்படித் தண்டிக்க முடியும்.



அவர்களுடைய அபிப்பிராயத்தை மாற்றமுயன்றதுண்டு. அவ்வாறு பெரும்பாலும் முடிவதில்லை. அதனால் அவர்கள் இஷ்டப்படி தான் நடப்பேன் என்றான். அதைக்கேட்டு மனம் விட்டுச் சிரித்த சக்கரவர்த்தி சூரசேனா! நீ உயிருக்கு உயிராக நேசிக்கும் குடும்பத்தினரே கண்மூடித்தனமாக ஏற்பதில்லையே! அப்படியிருக்க அனந்தவர்மன் நம்முடைய எல்லாத் தீர்மானங்களையும் ஏற்றுக்கொள்வான் என்று எப்படி எதிர்பார்க்கமுடியும். அவன் நம்முடைய ஆதிக்கத்தின் கீழ் இருக்கிறான் என்பதற்காக அவனை நாம் நம் அடிமையாக நினைக்கக்கூடாது. அவனுக்கு தன் கருத்துக்களை வெளியிடச் சுதந்திரம் உண்டு என்றான்.

சக்கரவர்த்தியே தொடர்ந்து சூரசேனா ஒரு சிறு குடும்பத்தினுள்ளேயே கருத்து வேறுபாடுகள் தோன்றுகையில் பெரிய சாம்ராஜ்ஜியத்தில் அவை ஏற்படுவது சகஜம்தான். அதற்குத் தீர்வு நம்மை எதிர்த்துப் பேசுபவர்களின் தலையைச் சீவுவது அல்ல. அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை நாம் செவிமடுத்து பொறுமையாகக் கேட்க வேண்டும். அவர்கள் சொல்வது தவறாக இருந்தால் அவர்களைப் பேச்சுவார்த்தையினால் திருத்த வேண்டும். ஆனால் அவர்கள் சொல்வதில் நியாயம் இருந்தால் அதை ஏற்றுக்கொண்டு நம்மை நாமே திருத்திக்கொள்ளவேண்டும் என்றார். சக்கரவர்த்தியின் பெருந்தன்மையை கண்டு வாயடைத்துப் போனான் சூரசேனன். நிதானமாகச் சிந்திக்கையில் அவர் கூறுவது தான் சரியெனத் தோன்றியது. உடனே நிதானமாக சக்கரவர்த்தியை ஏறிட்டுப் பார்த்தவாறு பிரபு! கத்தியினால் தீர்வு காண நினைத்த என்னை மன்னியுங்கள். நான் அனந்தவர்மனை நேரில் சந்தித்து அவன் குறை என்ன என்பதை தீர விசாரித்து அதன்பின்னர் உங்கள் ஆலோசனைப்படி ஆவன செய்கிறேன் என்று அவரை வணங்கி விட்டு வெளியேறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தல சர்வதேச விமான நிலையம் திறப்புவிழா- சுவாரசியமான கதை

உலகெங்கும் கடன்களை வாங்கி தனது சொந்தப்பெயரில் விமான நிலையங்களையும், துறைமுகங்களையும் அமைத்துவருகின்றார் இலங்கை ஜனாதிபதி மகந்த ராஜபக்ச.

ஏற்கனவே, சிறிலங்கன் எயார் விமான சேவை இருக்கும் நிலையில் தனது சொந்த பெயரில் மிகின் லங்கா எனும் விமான சேவையை ஆரம்பித்து அதற்கு தனது மூத்த சகோதரரை இயக்குநராகவும் நியமித்திருந்தார். ஆனால், பல மில்லியன்கள் நட்டத்தில் மிகின் விமான சேவை இயங்கிவருகின்றபோதும், அதனை ஜனாதிபதி தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்தி வருகின்றார்.

இந்நிலையில், எற்கனவே கட்டுநாயக்காவில் சர்வதேச விமான நிலையம் ஒன்று அமைந்துள்ள நிலையில், இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமாக மத்தல ராஜபக்ச விமான நிலையத்தை கடந்த மாதம் 18 ஆம் திகதி திறந்து வைத்தார். முதலில் அமெரிக்க விமானம் ஒன்றும் இப்புதிய விமான நிலையத்தில் தரையிறங்கும் என இலங்கை ஊடகங்கள் தம்பட்டம் அடித்தன. பின்னர் அது சரிவராது எனத் தெரிந்தபோது சவுதியில் இருந்து வரும் விமானம் தரையிறங்கும் என்று பரபரத்தார்கள்.

இறுதியில் திறப்பு விழா அன்று எந்த நாட்டு விமானமும் தரையிறங்காது எனத் தெரிந்ததன் பின்னர், சிறிலங்கன் எயார் விமானம் கைகொடுக்க முன்வந்தது. திறப்புவிழா அன்று ஈாஜபக்சவின் குடும்பத்தினரையும் அவரது ஆதரவு அமைச்சர்களையும் ஏற்றிக்கொண்டு ஒரு விமானம், அந்த விமான நிலையத்தில் தரையிறங்கியதுதான் சாதனைத் திறப்புவிழா ஆனது.

வெளி நாட்டுக்கடன்கள் பெறுவது அபிவிருத்தித் திட்டங்களுக்காகவே தவிர சுயநலத்திற்காகவல்ல எனத் திறப்புவிழாவில் உரையாற்றிய மகிந்த ராஜபக்ச சுதந்திரத்தின் பின்னர், எமது சக்தியின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது சர்வதேச விமான நிலையமான மத்தல, ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தை இலங்கைக்கு அன்பளிப்பு செய்வதாகத் தெரிவித்ததுதான் நகைச்சுவையின் உச்சம்.

இந்த விமான நிலையத் திறப்புவிழாவில் சர்வதேச சட்டவிதிகள் சில மீறப்பட்டதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டபோது, அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தை மீறி பணியாற்றியதாக கப்டன் விதானகே என்பவர் கூறியிருந்ததும் இங்கு கவனிக்கத்தக்கது.

இதேபோல் ஹம்பாந்தோட்டவில் சீன உதவியுடன் அமைக்கப்பட்டு வரும் பாரிய துறைமுகத்தை கடந்த ஆண்டு மகிந்த நேரில் சென்று திறந்துவைத்தார். கொழும்பில் துறைமுகம் ஒன்று வசதிகளுடன் இருக்கையில், ஹம்பாந்தோட்டவில் திறந்து வைக்கப்பட்ட துறைமுகத்தில் கப்பல்களின் வருகையின்றியும் இருப்பதாக தெரிய வருகிறது.

கடந்த ஓர் ஆண்டுக்குள் ஹம்பாந்தோட்டவில் துறைமுகத்துக்கு வந்து சென்ற கப்பல்களை விரல்விட்டு எண்ணி விடலாம். பொரளாதாரச் சுமைக்குள் தாங்கள் சிக்கித் தவிக்க, பலகோடி மில்லியன்களைக் கொட்டி விமான நிலையத்தையும் து்றைமுகத்தையும் திறந்துவைத்து, அ்வை வெறிச்சோடிக்கிடப்பது சிங்கள மக்கள் மத்தியில் கோபத்தைக் கிளப்பியுள்ளது. உலகநாடுகள் எங்கும் கடனை வாங்கி தங்களையும் கடன்காரர்களாக்கி, தங்களுக்குப் பிறக்கப்போகும் பிள்ளைகளையும் கடன்காரர்களாகப் பிறக்க வைப்பதுதான் மகிந்த சிந்தனைத் திட்டமோ என்று பொம்பி பொரிகிறார்கள். தேவைக்கு அதிகமாக உருவாகியுள்ள தால்தான் இந்த நிலைமை என்று கூறும் எதிர்த்தரப்புகள், மத்தல ராஜபக்ச விமான நிலையத்தில் பறவைகள் தரையிறங்குவதாகவும், ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் மீன்கள் வந்து செல்வதாகவும் கேலி செய்யவும் தொடங்கியுள்ளனர். அத்தோடு புதிதாகத் திறக்கப்பட்டுள்ள மத்தல சர்வதேச விமான நிலயத்தில் இருந்து கிளம்பும் விமானங்கள் பாதுகாப்புடன் தரையிறங்குமா என்ற சந்தேகமும் தற்போது வெளியிடப்பட்டு வருகின்றது.

அண்மையில் மத்தல சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட சிறிலங்கன் எயர்லைன்ஸ் விமானம் ஒன்று பாரிய விபத்தில் இருந்தும் மயிரிழையில் தப்பியுள்ளது. கடந்த மாதம் 25 ஆம் திகதி மாலைதீவில் இருந்து சென்ற யு.எல் -114 என்ற விமானம், மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கி அங்கிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு புறப்பட்டுச் சென்ற போதே, இந்த விபத்து நேரிட்டுள்ளது.

மத்தல விமான நிலையத்திலிருந்து விமானம் புறப்பட்டபோது பறவைக் கூட்டம் ஒன்று விமானத்தின் முன்புறத்தில் மோதியுள்ளது. இதனால், விமானத்தின் முன்புறக் கண்ணாடிகள் சேதமைடைந்துள்ளன. ஆகையால், விமானம் அவசர அவசரமாகக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது. சிறிலங்கன் எயர்லைன்ஸ் மூத்த அதிகாரிகளும், விமானிகளும் சேதங்களை ஆய்வு செய்தனர். முன்புறக் கண்ணாடியில் விரிசல் ஏற்பட்டுள்ளதுடன் துப்பாக்கிச் குண்டுத்துளை போன்ற பல துளைகளும் காணப்பட்டதாக மூத்த விமானி ஒருவர் தெரிவித்திருந்தார்.

அமுக்கத்தினால், கண்ணாடி உடைந்திருந்தால், விமானி வெளியே தூக்கி வீசப்பட்டிருப்பார் என்றும் அவர் கூறியிருந்தார். விபத்து நடந்தபோது அந்த விமானத்தில் சுமார் 40 பயணிகள் இருந்துள்ளனர். அவர்களில் மத்தலவில் இருந்து கட்டுநாயக்க செல்வதற்காக ஏறிய மகிந்த ராஜபக்சவின் நான்கு உறவினர்களும் அடங்கியிருந்தனர்.

இதேவேளை, மத்தல விமான நிலையம் திறக்கப்படுவதற்கு ஓரிரு நாட்கள் முன்னதாகவும் இதுபோன்றதொரு பாரிய விபத்து ஏற்படுவது தவிர்க்கப்பட்டது. திறப்பு விழாவிற்கு முன்னதாக பரீட்சார்த்தமாக தரையிறக்கட்டப்பட்ட விமானம் ஒன்றின் மீது பறவைக் கூட்டம் மோதியதால், அந்த விமானத்தை செலுத்திய இளைய விமானி நிலைகுலைந்து போயுள்ளார்.

எனினும், அருகில் இருந்த மூத்த விமானி ஒருவர் விமானத்தை தனது கடடுப்பாட்டுக்குள் கொண்டவந்து அதனைப் பாதுகாப்பாக தரையிறக்கியதால் அந்த விமானம் விபத்தில் இருந்து தப்பியது குறிப்பிடத்தக்கது. பறவைகள், மற்றும் வனவிலங்குகள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியி லேயே மத்தல விமான நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு விமானங்களின் இரைச்சல் பறவைகள் மற்றும் விலங்குகளுக்கு பெரும் தொந்தரவாக மாறியுள்ளதாக குற்றம்சாட்டப்பட்டும் வருகிறது. இந்நிலையில், உலக நாடுகளிடம் கடன் பெற்று தென்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தில் குருவிகளும் மகிந்த ராஜபக்ச சர்வதேச துறைமுகத்தில் மீன்களுமே பிடிக்கப்படுவதாக தேசிய ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் அசாத் ஷாலியும் கிண்டலடித்துள்ளார். கொழும்பு பான்ஸ் பிளேஸில் அமைந்துள்ள அசாத் சாலி மன்றத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற உடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அவர், நாட்டை உலக நாடுகளிடம் கடன் எடுத்து அபிவிருத்தி செய்வதாக அரசாங்கம் கூறித்திரிகின்றது. ஆனால், நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சர்வதேச துறைமுகத்தில் மீன்களும் சர்வதேச விமான நிலையத்தில் குருவிகளுமே பிடிக்கப்படுகின்றன. இது மிகவும் வேடிக்கையாக உள்ளது.

இந்நிலையில் உலக நாடுகளிடமிருந்து பெற்ற கடனுக்கு நாட்டு மக்களுக்கு எவ்வித பிரயோசனமும் இல்லை. நல்லவிதமான அபிவிருத்திகளும் இல்லை. நாட்டுப் பிரசை ஒவ்வொருவரும் கடனாளியாக்கப்பட்டதோடு பிறக்கின்ற குழந்தைகளும் கடனாளியாக்கப்படுவதுதான் மிச்சம் என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இது இவ்வாறிருக்க, பயிற்சி விமானிகள் இதுவரை விமான சேவையில் கூடுதலாக சேர்ப்பதற்காக தெரிவுப் பரீட்சையில் வெட்டுப்புள்ளியை



குறைத்தமையால் சிறிலங்கா எயார் லைன்ஸ் நிறுவனத்தில் உருவாகிய நெருக்கடி, இந்த நிறுவனத்துக்கு பல மில்லியன் டொலர் நட்டத்தை விளைவித்துள்ளதுடன், விமான சேவைகளை குழப்பியும் வருகின்றது எனக் கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

விமானிகளும் போதனாசிரியர்களும் சட்டப்படி வேலை செய்து வருவதனால் கடந்த 3 வாரங்களாக விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த தாமதங்கள் காரணமாக ஏற்படும் பிரச்சினைகள் கூடுதல் எரிபொருள் செலவு, சேவைகள் இரத்தாதல், பயணிகளுக்கு தங்குவிடுதி வசதி எனப் பல மேலதிக செலவுகளுக்கு காரணமாகியுள்ளன. இதனால் இலங்கையின் தேசிய விமான சேவை நிறுவனத்துக்கு பல மில்லியன் டொலர் நட்டம் ஏற்பட்டு வருகின்றது. குறைந்த புள்ளியுடன் பயிற்சி விமானிகள் நியமிக்கப்பட்டதை எதிர்த்து விமானிகள் சங்கம் சட்டப்படி வேலை இயக்கத்தை தொடங்கியது. இந்தப்பிரச்சினை தொடர்பில் விமானிகள் பயிற்சி திட்டத்தின் உயர் அதிகாரிகள் இருவர் தமது பதவியைவிட்டு விலகியுள்ளனர். இந்நிலையில், விமானிகளுடன் பேசி வருவதாக சிறிலங்கன் எயார் லைன்ஸ் பிரதான நிறைவேற்று அதிகாரி சந்திரசேன கூறுயுள்ளார். இந்தப்பிரச்சினையை விரைவில் தீர்க்கமுடியும். ஆனால், இரண்டொரு நாளில் சாத்தியமாகாது எனவும் அவர் கூறினார். எனினும், விமான நிறுவனத்துக்கு எற்பட்டுள்ள நட்டங்கள் பற்றி கருத்துக் கூற அவர் மறுத்துவிட்டதாக அந்த ஆங்கில ஊடகம் கூறியுள்ளது.

-செந்தூரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது!

## தென்கொரியா அறிவிப்பு

தென்கொரியாவில்வாழ்ந்துவரும் இலங்கையர்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் கவலைப்படத் தேவையில்லை என இலங்கைக்கான அந்நாட்டுத் தூதுவர் ஜொன்க்மூன் சோய் தெரிவித்துள்ளார்.

அவசர நிலைமைகளின் போது பின்பற்ற வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தென்கொரியாவில் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தென்கொரியாவிற்கு விசா வழங்கும் நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# அரசின் நடைமுறை சிக்கலால் அமெரிக்க உதவிகள் குறைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் பிழைகள் காரணமாகவே அமெரிக்க உதவிகள் குறைக்கப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் நாடு பாரிய பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும்.

இவர்களின் தவறான வெளியுறவுக் கொள்கைகளினால் உலக நாடுகள் இலங்கையை விட்டு விலகிச் செல்கின்றன. எதிர்காலத்தில் இலங்கைக்கானஉதவி கள் மேலும் குறைவடையக்கூடும். அரசாங்கத்தின் கடுமையான நிலை ப்பாடுகளின் காரணமாகவே அமெ ரிக்கா உதவிகளை குறைத்துள்ளது எனவும் அவர் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

இவ்வாறு சர்வதேச ரீதியில் நாடு எதிர்நோக்கி வரும் நெருக்கடி நிலைமைகளினால் ஏற்படும் பாதிப்புக்களை அரசாங்கம் மக்களிடம் ஈடு செய்து வருவதாக ரவி கருணாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# சர்வதேச அழுத்தங்களை சமாளிக்கும் திட்டங்கள் அரசாங்கத்திடம் இல்லை

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

சர்வதேச ரீதியாக இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படுகின்ற அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க அரசாங்கத்திடம் தகுந்த திட்டங்கள் எவையும் இல்லை என ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அமெரிக்காவினால் இலங்கைக்கு வழங்கப்படும் உதவித் தொகை 20 சதவீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது. ஜெனீவா மாநாட்டு தீர்மானத்திற்கும் இதற்கும் கண்டிப்பாக தொடர்பு இருக்க வேண்டும்.

இவ்வாறான நிலையில் இலங்கைக்கு எதிரான வெளிநாட்டுகளின் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் என்ன பதில் வழங்கப்போகிறது என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டு மக்களின் நன்மை கருதியாவது அரசாங்கம் சர்வதேசத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# வெளிநாட்டின் உதவி கிடைத்தால் போராட்டக் குழு எழுச்சி பெறும்

## இராணுவ பேச்சாளர் எதிர்வுகூறல்

(கொழும்பு)

முழுமையான இராணுவப் பலத்துடன் விடுதலைப் புலிகள் மீண்டெழுவதற்குச் சாத்தியமே இல்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் சாம்பலில் இருந்து புதிய போராளிக்குழு ஒன்று உருவாகக் கூடும் என்று எக்கொனமிஸ்ட் இன்ரெலிஜென்ஸ் யுனிட் இதழ் வெளியிட்டுள்ள கருத்து தொடர்பாகவே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இப்போது விடுதலைப் புலிகளின் மீண்டெழுகை சாத்தியமற்றது. உள்நாட்டில் கிளர்ச்சி செய்ய முனைவோருக்கு வெளிநாட்டு சக்திகளின் உதவிகள் கிடைத்தால் போராட்டக் குழுவொன்று எழுச்சி பெறக் கூடும். இத்தகைய வெளிநாட்டு முயற்சிகளை தடுக்க பொருத்தமான வலையமைப்புகளை நாம் கொண்டிருக்கிறோம்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் இத்தகைய கிளர்ச்சிகளில் ஈடுபடுவார்கள் என்று இலங்கை இராணுவம் நம்பவில்லை. அவர்களில் அநேகமானோர் எல்லோரும் அமைதியான இலங்கையினையே விரும்புகின்றனர்.

எனினும் வெளிநாட்டில் விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதம் இன்னமும் உயிர்ப்புடன் தான் உள்ளது என அவர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2013.04 18

★1025-போலெஸ்லாவ் குரோப்றி போலந்தின் முதல் மன்னனாக முடி சூடினான்.

★1797-நியுவியெட் எனும் இடத்தில் பிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியர்களை வென்றன.

★1835-அவுஸ்திரேலியாவில் மெல்பேர்ன் நகரம் அமைக்கப்பட்டது.

★1880-மிசூரியில் வீசிய புயல் காற்றினால் 99 பேர் உயிரிழந்தனர்.

★1906-அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் நகரில் 3 ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர்.

★1909- ஜோன் ஆப் ஆர்க் பத்தாம் பயஸ் பாப்பரசரால் புனிதப்படுத்தப்பட்டால்.

★1912-கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலில் உயிர் பிழைத்த 705 பேர் நியூயோர்க் வந்து சேர்ந்தனர்.

★1930-பிபிசி வானொலி தனது வழமையான செய்தி அறிக்கையில் இந்நாளில் எந்த செய்திகளும் இல்லை என அறிவித்தது.

★1941-ஜேர்மனியப் படைகள் ஏதேன்சை நெருங்கும் போது கிறீஸ் பிரதமர் அலெக்சாண்ட்ரொஸ் கொரிசிஸ் தற்கொலை செய்து கொண்டார்.

★1942- இரண்டாம் உலகப் போர்: டோக்கியோ நகர் மீது அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன.

★1945-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் ஹெலிகோலாந்து என்ற சிறுத்தீவில் மீது ஆயிரத்துக்கும் மேற்பட்ட போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

★1949-அயர்லாந்து குடியரசு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

★1954-கமால் அப்துல் நாசர் எகிப்தின் ஆட்சியைக் கைப்பற்றினார்.

★1958-இலங்கையில் பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தம் முறிவடைந்தது.

★1980-சிம்பாப்வே குடியரசு (முன்னாள் ரொடீசியா) அமைக்கப்பட்டது. கனான் பனானா அதன் முதல் ஜனாதிபதியானார்.

★1983-லெபனானில் பெய்ரூட் நகரில் அமெரிக்க தூதரகத்தில் இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 63 பேர் உயிரிழந்தனர்.

★1993-பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இசாக் கான் நாடாளுமன்றம் மற்றும் அமைச்சரவையைக் கலைத்தார்.

★1996-லெபனானில் ஐ.நா. கட்டடம் ஒன்றின் மீது இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதில் 106 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★1858-ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை, ஈழத்து எழுத்தாளர், பதிப்பாளர்(இ.1917)

★1905-ஜார்ஜ் எச். ஹிட்சிங்க்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்(இ.1998)

★1940-ஜோசப் கோல்ட்ஸ்டெயின், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

### இறப்புக்கள்

★1976-ஹென்ட்றிக் டாம், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1895)

★1955-ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர் (பி.1879)

★2007-லெப்டினண்ட் கேணல் கலையழகன், தமிழீழத்தின் அனைத்துலகத் தொடர்பகத் துணைப் பொறுப்பாளர் (பி.1976)

### சிறப்பு நாள்

★உலக மரபுடைமை தினம் (உலக பாரம்பரிய தினம்)

### ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை



ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை ஓர் ஈழத்து எழுத்தாளர், பதிப்பாளர். தமிழின் முதற் கலைக் களஞ்சியமான அபிதான கோசத்தை எழுதியவர். இவர் 1858 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 அம் திகதி யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் எனும் இடத்தில் பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வி பி.எஸ்.பேஜ் என்ற ஆசிரியரிடம் அவரின் விட்டிலேயே கற்றார். அந்த வீடு பின்னாளில் மானிப்பாய் மெமோறியல் கல்லூரியாக மாறியது. ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் உவெஸ்லியன் மத்திய வித்தியாசாலையில் படித்தார். தமது பதினெட்டாவது வயதில் நாவலப்பிட்டி சென்று இலங்கை கம்பனித் தோட்டத்து (Ceyion Company Estates) அதிகாரிக்கு ஆசிரியராக தொழில் புரிந்தார். தமிழகம் நாகபட்டினத்திலுள்ள Anderson & Co என்ற கப்பற்றொழில் நிறுவனத்தில் இரண்டரை ஆண்டுகள் தலைமை எழுதுவினைஞராகத் தொழிலாற்றினார்.

#### இலக்கியப்பணி

1885 இல் சென்னை சென்ற முத்துத்தம்பி அந்தர்சன் தெரு என்ற இடத்தில் யுபிலி அச்சுக் கூடம் என்ற பெயரில் ஓர் அச்சியந்திரசாலையை நிறுவினார். சி.வை.தாமோதரம்பிள்ளையின் தொல்காப்பியம், சொல்லதிகாரப் பதிப்பும், உ.வே.சாமிநாதையரின் சிலப்பதிகாரப் பதிப்பும் இதன் மூலமே வெளிவந்தன. 1893 இல் யாழ்ப்பாணம் திரும்பிய முத்துத்தம்பிப்பிள்ளை வண்ணார் பண்ணையில் ஆறுமுக நாவலர் குடியிருந்த வீட்டை வாங்கி அதற்கு நாவலர் கோட்டம் எனப் பெயரிட்டு அங்கிருந்து பல பணிகள் புரிந்தார். நாவலர் வழியில் பணியாற்றிய பிள்ளையவர்கள் நாவலர் அச்சுக்கூடம் என்ற ஒரு அச்சியந்திர சாலையையும் நிறுவினார்.

ஒரு புத்தகசாலையும் War& davy என்ற பெயரில் பலசரக்கு மருந்துகள் விற்கும் ஒரு கடையும் அவரால் நிறுவப்பட்டது. 1898 இல் தமிழ் வைத்திய விசாரணி என்னும் சஞ்சிகை இவரால் பிரசுரிக்கப்பட்டது. முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய பல நூல்களில் இலங்கைச் சரித்திரச் சாசனம், அபிதான கோசம், ஆங்கில- ஆங்கில -தமிழ் அகராதி, யாழ்ப்பாணச் சரித்திரம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. அபிதான கோசம் 1902 இல் யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. 1917 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 59 ஆவது வயதில் யாழ்ப்பாணத்தில் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல பெற்றோராக நடந்து கொள்வது எப்படி?

## புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி


பேராசிரியர் மா.சின்னத்தம்பி

10

### அறிமுகம்

இன்று பிள்ளைகளை வளர்ப்பது மிகப் பெரிய சவாலாக மாறி விட்டது. முன்பெல்லாம் பாடசாலை முடிந்தால் வீடு. வெளியே செல்வதானால் பெற்றோருடன் உறவினர் வீடுகளுக்கும் வைபவங்களுக்கும் கோவில் திருவிழாக்களுக்கும் மாத்திரம் பிள்ளைகள் செல்வார்கள்.

பெற்றோரது முழுமையான கவனமும் வழிகாட்டலும் உதவியும் இருந்தன. பிள்ளைகளுக்கென தனியான கவலைகள் (பெரும்பாலும்) ஏற்படுவதில்லை.

கிராமங்களில்வீடுகளிலும் தோட்டங்களிலும் சிறுகைத் தொழில்களிலும் பெற்றோருடன் சேர்ந்து வேலைகளைப் பகிர்ந்து கொண்டவர்களாக பிள்ளைகள் இருந்தனர். பாடசாலை நேரங்களில் மாத்திரம் படிக்கச் சென்றனர்.

இப்போது நிலைமை மாறிவிட்டது. பாடசாலை, ரியூசன், ஈகஃபே, கைத்தொலைபேசி, திரைப்படம் என்ற பல நிலைகளில் பிள்ளைகள் அதிக நெருக்குதல்களுக்கு உள்ளாகின்றனர்.

இந்த பின்னணியில் பிள்ளைகளின் படிப்பு் தொடர்பாக பெற்றோர் எவ்வாறு திறமையாக நடந்து கொள்ள முடியும் என்பது பற்றி இங்கு கலந்துரையாடப்படுகின்றது.

### செய்ய வேண்டியன யாவை?

பெற்றோர்களின் வழிப்புணர்வு, ஆர்வம், உறக்கம் என்பவற்றுக்கேற்ப அவர்கள் தமது பிள்ளைகளுக்கு வழங்கும் உதவிகளும் ஊக்குவிப்புக்களும் அமைகின்றன.

பிள்ளைகளின் சுய கெட்டித்தனம், ஒழுங்கு, உண்மை ஈடுபாடு என்பன அடிப்படையான விடயம் தான். ஆனாலும் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றங்களின் இரண்டு பக்கங்களில் ஒரு பக்கம் பெற்றோரும் மறுபக்கம் பாடசாலைகளும் உள்ளன.

பெற்றோரும் தமது பிள்ளைகளுக்கு தேவையான வசதிகளை பின்வரும் வழிகளில் வழங்குவதில் கவனம் செலுத்த வேண்டும்.

➢ பிள்ளைகள் படிக்கும் பாடசாலை அதிபர்கள் பிள்ளைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு அழைத்தால் தந்தையர் சென்று உரையாட வேண்டும்.

பெரும்பாலும் தாய்மார்தான் சென்று ஒப்பமிடுகின்றனர். அவர்கள் ஆசிரியர்கள் அல்லது அதிபர் சொல்வதை மௌனமாக கேட்டு விட்டு வருகின்றனர். அவர்கள் சொன்ன விடயங்கள் பற்றியும் பிள்ளைகளுடன் உரையாடுவதில்லை. இதில் பயன் ஏதும் ஏற்படுவதில்லை.

உண்மையில் பின்வரும் விடயங்களில் விபரம் பெறுவதற்கு மனம் திறந்து பெற்றோர் உரையாட வேண்டும்.

➢ பிள்ளைகளுக்கு எந்தப் பாடம் கடினமாகிறது?

➢ ஏன் அதில் ஆர்வமில்லை?

➢ ஏன் சில பாடங்களைக் கற்பிக்க பல ஆசிரியர்களை அடிக்கடி மாற்றி மாற்றி நியமிக்கிறீர்கள்?

➢ ஒரே வகுப்பில் சில பிரிவுகளுக்கு (A அல்லது B) மாத்திரம் ஒழுங்காக ஆசிரியர் செல்வதாக சொல்லப்படுகிறது. வேறு சில பிரிவுகளுக்கு (C அல்லது D) திறமையில்லாத ஆசிரியர்களை தொடர்ந்து வழங்கி வருவது ஏன்?

இத்தகைய பாரபட்சமான ஏற்பாடுகள் தற்செயலாக நிகழ்கின்றனவா? அல்லது சில முற்சாய்வுகள் உள்ளனவா?

➢ சில பாடங்களுக்கு ஆசிரியர்கள் வழங்கப்படாத நிலைமை உள்ளது. அதுபற்றி உரியகாலத்தில் பெற்றோருடன் கலந்துரையாடி மாற்று வழிகளை ஏன் பரிசீலிக்கக்கூடாது?

பெற்றோரிடமிருந்து இதற்கு எத்தகைய உதவிகள் எதிர்பார்க்கப்படுகின்றன?

➢ பிள்ளை எந்தப் பாடத்தில் அதிக ஊக்கத்துடன் காணப்படுகிறது?

➢ படிப்பது தவிர வேறு எத்துறையில் பிள்ளைகளிடம் திறமை காணப்படுகின்றது?

➢ பிள்ளையிடம் அவதானிக்கப்பட்ட கற்றல் தொடர்பான பிரதான பிரச்சினைகள் யாவை?

➢ பிள்ளை சகபாடிகளுடன் பழகும் முறை எத்தகையது?

➢ பிள்ளளக்கு கற்றல் தொடர்பாக நாம் (பெற்றோர்) எத்தகைய வசதிகளை வழங்க வேண்டும்?

இத்தகைய கேள்விகளில் ஒரு சிலவற்றையாவது முதலில் இத்தகைய சந்திப்புக்களின் போது இதமாக கேளுங்கள்; கோபமாக கேட்காதீர்கள்; முரண்படும் மாதிரியில் கேட்காதீர்கள். உங்களுக்கு உங்கள்


கல்வித் தரிசனம்

பிள்ளைகள் தொடர்பாக உள்ள உரிமையை உறுதிப்படுத்துவதாக இவை அமையும். பாடசாலை நிர்வாகம் ஆசிரியர்களுக்கு சில அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் இவை துணை செய்யும்.

➢ பிள்ளைகளின் ரியூசன் தொடர்பாக பிள்ளைகளுடன் ஒவ்வொரு வாரமும் உரையாடுங்கள். அவர்களது திருப்தி, திருப்தியின்மை, மேலதிக தேவைகள், வசதிகள் தொடர்பாக விபரங்களைக் கேளுங்கள். இவ்வாறு ஒரு பழக்கத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். அல்லது ஒருபோதும் இத்தகைய விடயங்கள் பற்றி கலந்துரையாடும் உரிமை உங்களுக்கு இல்லாமலே போய்விடும்.

இன்றைய நிலையில் ரியூசன் வசதிகள் தவிர்க்க முடியாதவை. ஆனால், நீங்கள் நிறையப் பணம் செலவு செய்கிறீர்கள். உங்கள் பிள்ளை பல நாட்கள் அலைந்து உடல் ரீதியாக களைத்துப் போய் விடுகிறார்கள். வீட்டில் சுயமாக படிக்க முடியாதவர்களாகி விடுகின்றனர்.

இதனால் பொறுப்புள்ள பெற்றோராக நடந்து கொள்ளுங்கள்.

➢ எந்தப் பாட ஆசிரியர் ஒழுங்காக எல்லா வகுப்புக்களுக்கும் வருகின்றார்?

➢ எந்தப் பாடம் அடிக்கடி நடைபெறாமல் தடைப்படுகிறது?

➢ எந்தப் பாடத்திட்டம் உரிய திகதியில் நிறைவடையாதென்று கருதுகிறீர்கள்?

➢ எந்தப் பாடம் ரியூசனிலும் சிரமமாகவுள்ளது?

➢ பாடசாலையில் சிரமப்படும் பாடம் ரியூசனில் திருப்தியாக உள் ளதா?

இத்தகைய விடயங்களைப் பற்றி பேசுங்கள். விசாரணை சூப்வது போல் எரிச்சலூட்டாமல் கவனமாக கேட்க வேண்டும். 11 ஆம் தரம் 12, 13 ஆம் தரங்களில் உங்கள் பிள்ளைகள் படித்தால் இந்த அக்கறை மிகவும் அவசியம். ஆனால், அவர்கள் கட்டிளமைப் பருவத்தினர் தமக்கு நிறையத் தெரியும், தமக்கு பூரண சுதந்திரம் உண்டு, தம்மை சந்தேகிக்கக்கூடாது என்று பல மாதிரி சுதந்திர உணர்வுகள் அவர்களிடம் அதிகம் காணப்படும்.

அவர்களை விளங்கிக் கொள்ளுங்கள். ஆனால், கட்டாக்காலியாக விட்டு விடாதீர்கள். பின்பு எல்லாப் பாடங்களிலும் சித்தி பெறாமல் வந்து நிற்கும் போது கோபித்து ஒரு பயனும் ஏற்படப் போவதில்லை.

மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை நீங்களே நேரடியாக ரியூசன் நிலையத்தில் பணம் செலுத்துங்கள். ஏனைய மாதங்களில் பிள்ளைகளே கட்டணங்களைச் செலுத்த விடுங்கள். இதனை ஒரு பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.

இப்படிச் செய்து பாருங்கள். எத்தனை விடயங்கள் உங்களுக்குத் தெரிய வரும். ரியூசன் நிலைய உரிமையாளரும் உங்கள் பிள்ளைகளின் விடயத்தில் விசேட கவனம் செலுத்துவார். பிள்ளையின் பிரச்சினைகள் பற்றியும் உங்களுக்கு தேவையான தகவல்களைத் தருவார்.

ஆனால், இது உண்மை ஈடுபாட்டுடன் செய்யப்பட வேண்டும். உங்கள் பிள்ளையைக் கண்காணிக்கும் உரிமை உங்களிடம் தான் இருக்க வேண்டும்.

புதிய சுதந்திரம், புதிய சூழல், புதிய நண்பர்கள், புதிய ஊடாட்டங்கள் கிடைக்கின்றன. இதில் உங்கள் பிள்ளை திக்குமுக்காடி திசைமாறி போய்விடவும் வாய்ப்புக்கள் உள்ளன என்பதை மறந்து போகாதீர்கள்.

உங்கள் பிள்ளைகள் நல்லவர்கள்தான். ஆனால், அறிவு என்பதைவிட உணர்வு, மனவெழுச்சி என்பன மிகவும் பலமானவை இந்த வயதில்.

நீங்கள்தான் பாதுகாவலராகவும் வழிகாட்டியாகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் அவர்கள் உங்கள் பிள்ளைகள்.

தோற்றபின், பிரச்சினையில் சிக்கியபின் கவலைப்படுவதில் அர்த்தமேயில்லை. வருமுன் காப்பது நல்லதுதானே!

➢ நண்பர்கள் பிள்ளைகளுக்கு தேவையானவர்களாக சகோதரர் இல்லாத பிள்ளைகளுக்கும் கட்டிளமைப்பருவ வயதினருக்கும் நண்பர்கள் அவசியம். எல்லாவற்றையும் பெற்றோருடன் பகிர மாட்டார்கள்.

ஆனால், அவர்களது நட்பின் தன்மை, நண்பர்களின் பழக்கம், கற்கும் விருப்பம், உங்கள் பிள்ளைகளின் நண்பர்களின் பிற தொடர்புகள் என்பன பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? எப்படித் தெரியவரும்?

இதனால் உங்கள் பிள்ளைகளின் பாடசாலை நண்பர்கள், ரியூசன் நண்பர்கள், அயலில் உள்ள நண்பர்கள் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் பிள்ளை எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்று நினைப்பீர்களானால் இவை பற்றியெல்லாம் கவனம் செலுத்த வேண்டியதில்லை.

அப்படியெல்லாம் விட்டுவிட முடியாது. ஏனெனில் உங்கள் பிள்ளையை நல்லவனாகவும் வல்லவனாகவும் ஒழுங்கானவனாகவும் வளர்ப்பதுதான் உங்கள் வெற்றி.

### பின்வருவன பற்றி அறிந்து கொள்ளுங்கள்

➢ உங்கள் பிள்ளையின் மிக நெருங்கிய நண்பர் யார்?

➢ அவரது பெயர் என்ன?

➢ அவரது கைத்தொலைபேசி இலக்கம் யாது?

➢ அவரது விலாசம் என்ன?

➢ அவரது குடும்பப் பின்னணி எத்தகையது?

➢ புதிதாக யாரேனும் நண்பர்கள் கிடைத்துள்ளனரா? எவ்வாறு அவரது தொடர்பு ஏற்பட்டது?

➢ நண்பர்களினால் பிள்ளையின் நடை, உடை, செயல் என்பவற்றில் சடுதியான மாறுதல்கள் தென்படுகின்றனவா?

இப்படி தொடர்ந்து கவனமாக இருங்கள். இப்படி கவனமாக தெரிந்து கொள்வதால் தீமைகள் ஏதுமில்லை. ஆனால், நிறைய நன்மைகள் உள்ளன. இயன்றளவு வெளிப்படையான முறைகளைப் பன்படுத்தி விபரங்களை அறியுங்கள். பிள்ளையின் நெருங்கிய நண்பர்களுடன் நீங்களும் இடைக்கிடையே உரையாடுங்கள். வீட்டிற்கு வந்தால் தேநீர் கொடுங்கள். தகவல் பெறுங்கள்.

இவற்றில் தேர்ச்சி பெறுங்கள். நீங்கள் உண்மையில் நல்ல பெற்றோராகவும் இருக்க வேண்டும். உங்கள் பிள்ளையும் படிப்பிலும் ஒழுக்கத்திலும் மேன்மை பெற வேண்டும். அவர்களது சிறப்பு உங்களது வெற்றியல்லவா?

➢ வீட்டில் உள்ளபோது பிள்ளைகளுடன் கலந்து பேசும் பழக்கத்தை மெல்ல மெல்ல வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் பிள்ளை கைத்தொலைபேசி அல்லது பேஸ்புக்கின் கைதியாகி விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

பிள்ளைகளின் தலைதடவி, முகம் தடவி, அன்புடன் தலைவாரி விட்டு அன்பைப் பரிமாறும் அம்மாக்களாக, தாய்மார்கள் மாறவேண்டும்.

கோவில் ஐயர் மாத்திரமா உங்கள் பிள்ளைகளின் தலையில் கை வைத்து ஆசீர்வதிக்கும் உரிமை கொண்டவர்?

பெற்றோராகிய நீங்களும் பிள்ளைகளுக்கு தெய்வங்கள்தான். அடிக்கடி தலைதடவி, உச்சி மோந்து தன்னம்பிக்கையுடனும் மகிழ்வுடனும் ஆசீர்வதிக்க கற்றுக்கொள்ளுங்கள். இந்தப் பழக்கம் மிகப் பெரிய அந்நியோன்னியத்தை உருவாக்கும். பாசப் பிணைப்பை உருவாக்கும். இவையெல்லாம் சொல்லியா தரவேண்டும் என்று சிலர் கேட்டால் அவர்கள் இந்தப் பகுதி விடயத்தைப் புறக்கணிக்கலாம்.

பிள்ளைமீதுள்ள உரிமை, பொறுப்புணர்வு அன்பின் வழியாக வெளிப்பட வேண்டும். உடல் மற்றும் உணர்வின் வழியாக வெளிவர வேண்டும்.

➢ வீட்டில் சிறிய சிறிய வேலைகளைச் செய்யும்படி வற்புறுத்துங்கள். வீட்டில் வேலையாட்களை வைத்திருக்கும் வசதிகள்கூட இருக்கலாம். அதுவேறு விடயம்.

உங்கள் வீடு, உங்கள் கடமை, உங்கள் பொறுப்புணர்வு, உங்களது வேலைகள் என்பதை அடிக்கடி பிள்ளைகள் உணர்ந்து கொள்வதற்கு சிறுசிறு வாய்ப்புக்களை வேண்டுமென்றே உருவாக்குங்கள். உங்கள் இயலாமையை பிள்ளைகளிடம் மறைக்காதீர்கள். உங்கள் நிதிப் பிரச்சினைகளை, பொறுப்புக்களை, வீட்டு வேலைச் சுமைகளைப் பற்றியெல்லாம் அவ்வப்போது உங்கள் பிள்ளைகளிடம் பேச வேண்டும். இது ஒரு குடும்பப் பண்பாடாக மாற வேண்டும்.

இதனால் பொறுப்புணர்வு மிக்கவர்களாகவும் வளர்வார்கள். இதுவும் அறிவுதான். அனுபவங்கள் தானே பட்டறிவு. புரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் பிள்ளை படிப்பறிவுடனும் பட்டறிவுடனும் வளரவும் வாழவும் உதவி செய்யுங்கள்.

### முடிவுரை

பிள்ளைகளை வளர்ப்பது கடினம். திறமையும் ஒழுக்கமும் மிக்கவர்களாக வளர்ப்பது மிகவும் கடினம். இதனால்தான் பல பெற்றோர் மிகவும் துயரங்களோடு வாழ்கிறார்கள். சமூக பெறுமதி மிக்க பெற்றோராகவும் நல்ல தலைமுறையை உருவாக்குபவர்களா கவும் வாழுங்கள். பெருமை கொள்ளுங்கள். வரலாறு உங்களை பெருமைப் படுத்தும் வாழ்த்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய 2ஆவது மொழிகளுக்கான இலவசக் கல்வி நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவம் – ஒரு பார்வை

தேசிய இரண்டாவது மொழிகளுக்கான இலவசக் கல்வி நிலையத்தின் ஐந்தாவது தொகுதி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் 08.04.2013 இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இந்த வருடம் 248 மாணவர்களுக்கு இங்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. விழாவின் ஆரம்பத்தில் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியை வசந்தி அரசரட்ணம் பிரதம அதிதியாக வரவேற்கப்பட்டார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.ரூபினி வரதலிங்கம், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் திரு. இ.இளங்கோவன், முன்னைநாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா ஆகியோரும் தென்னிலங்கையிலிருந்து கௌரவ விருந்தினர்களாக வருகைதந்த புத்தசாசன சதகாம் செவன ஆராய்ச்சி நிலையத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவரான வணக்கத்திற்குரிய விஜிததேரர், அந்த அமைப்பின் தலைவர் வணக்கத்திற்குரிய அத்துறலிய ரத்தனதேரரின் நிர்வாகச் செயலாளர் கித்ஸ்ரீ ஆனந்தா, அவரது பாரியார் திருமதி தமயந்தி வெல்ஹம ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இங்கு மாணவர்கள் முற்றுமுழுதாக விழாவைத்தொகுத்து வழங்கினர். ஆங்கிலத்தில் செல்வி ந.அமிழ்தினியும், தமிழில் செல்வி கி.பிறைநிலாவும் நிகழ்வை சுவைபடத் தொகுத்து வழங்கினர்.

இந்த இலவச சிங்கள, ஆங்கில மொழி வகுப்பை தனது சொந்தச் செலவில் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல இடங்களிலும் நடாத்தி வருகிறார் சர்வதேச சட்ட ஆலோசகரும் இந்து பௌத்த கலாசாரப்பேரவையின் தலைவருமான தேசமானிய M.T.S.இராமச்சந்திரன் என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

இந்த விழாவில் மாணவ மாணவிகள் தமிழிலும், சிங்களத்திலும் வரவேற்புரை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள், பிரதம விருந்தினர் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

குறிப்பாக பிரதம விருந்தினர் தமதுரையில் இரண்டாவது மொழியான சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமல்லாது தமிழிலும் நல்ல தேர்ச்சிவேண்டும். ஒருவருக்கு தனது தாய்மொழியில் அல்லது தமிழில் எவ்வளவு தேர்ச்சியுண்டோ அதற்குத் தகுந்ததாக வேறு மொழிகளைக் கற்பது இலகுவாக இருக்கும். இன்று ஊடகங்கள் முழுமையான இலக்கணத்துடன் தமிழ்மொழியைப் பேசுவதில்லை. அதனால் இன்றைய இளஞ் சந்ததியினரிடையே முழுமையான இலக்கண வடிவத்துடன் தமிழ்மொழியைப். பேசுவது அருகி வருகிறது எனக்குறிப்பிட்டார்.

சிறப்பு விருந்தினராக உரையாற்றிய பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தேசமானிய இராமச்சந்திரனின் நிர்வாகத்தையும் செயல்திறனையும் பாராட்டிப் பேசினார். தொடர்ச்சியாக இரண்டரை வருடகாலம் தனது சொந்தப் பணத்தில் 2000க்கும் அதிகமான மாணவர்களுக்கு இரண்டாம் மொழியைக் கற்பித்தமை ஒரு வரப்பிரசாதம் எனக்கூறினார்.

தேசமானிய. திரு.M.T.S.இராமச்சந்திரன் தனதுரையில் வடமாகாணத்தில் பல இடங்களில் இரண்டாவது மொழிக்கற்கைநெறியை ஆரம்பிக்கப்போவதாகவும் தனது சேவை அரசியல் கலப்பில்லாது தொடரும் எனவும் குறிப்பிட்டார்.

கௌரவ விருந்தினர் வணக்கத்திற்குரிய விஜிததேரர் தனது உரையில் மாணவர் தொகையில் அதிகமானவர்கள் பெண்களாக இருப்பதாகவும், யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைமைப்பீடத்தில பெண் அதிகாரிகள் அதிகமாக இருப்பதாலும் ஆடவர்கள் அதில் அதிக அக்கறை செலுத்தி முக்கிய பங்கு வகிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இறுதியாக இரண்டாம் மொழிக்கற்கை நெறியின் மாணவரொருவர் நன்றியுரை கூறும் போது தங்களைப் பொறுத்தவரையில் இது ஒரு அரியவாய்ப்பு என்றும், அந்த வகையில் திரு.M.T.S.இராமச்சந்திரன் இரண்டாம் மொழிக்கற்கை நெறியை ஆரம்பித்து அதில் 2000க்கும் அதிகமான மாணவர்கள் கற்றுத்தேறியுள்ளனர். எங்களைப்பொறுத்த வரையில் தேசமானிய M.T.S இராமச்சந்திரன் அவர்கள் தேசிய இரண்டாவது மொழிகளின் தந்தை எனக் குறிப்பிட்டால் அது மிகையாகாது எனக் கூறினார்.

## நிகழ்வின் பதிவுகள்


விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருத்தல்


தேசமானிய M.T.S.இராமச்சந்திரன் உரையாற்றுதல்


நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினர்


நிகழ்வைத் தொகுத்து வழங்கிய மாணவிகள்

(சி-3024)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரதன் ஓட்டம் மீதான தாக்குதலுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கண்டனம்

அமெரிக்காவின் பொஸ்டன் மரதன் ஓட்டப் போட்டி மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கண்டனம் வெளியிட்டுள்ளார்.

குண்டுத்தாக்குதலில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தோருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இது ஓர் கோழைத்தனமான தாக்குதல் ஆகும்.

2008 ஆம் ஆண்டு இதே போன்றதொரு பயங்காரவாதத் தாக்குதலில் இலங்கை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே உயிரிழந்தார்.

பயங்கரவாதத்தின் கொடூரங்களை இலங்கை தெளிவாக புரிந்து கொண்டுள்ளது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிற்கு அனுப்பி வைத்துள்ள இரங்கல் செய்தியில் ஜனாதிபதி ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பொஸ்டனில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களில் இலங்கையர் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் பொஸ்டன் மரதன் ஓட்டப்போட்டியின் போது இடம்பெற்ற இந்தக் குண்டு வெடிப்பு சம்பவத்தில் 3 பேர் கொல்லப்பட்டனர். எவ்வாறாயினும் இலங்கையர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தொடர்ச்சியாக அங்குள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகம் மற்றும் அமெரிக்க வெளிவிவகார அமைச்சுடன் தொடர்பில் இருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். (அ-2)

# 13+ தீர்வு குறித்து கூட்டமைப்பு அக்கறை கொள்ளவில்லை

## இந்திய குழுவிடம் கோத்தா

(கொழும்பு)

**வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குத் தனியான ஆட்சிமுறை என்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இலங்கைக்கு அண்மையில் பயணம் மேற்கொண்ட இந்திய நாடாளுமன்றக் குழுவிடமே அவர் இவ்வாறு கூறியுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இச்சந்திப்பின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டிய 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படாமை வடக்கு, கிழக்கு சிங்களக் குடியேற்றங்கள் என்பன குறித்து இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாதுகாப்புச் செயலரிடம் கேள்வி எழுப்பியிருந்தனர்.

அதற்கு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ 13 ஆவது திருத்தம் குறித்தோ 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாற்பட்ட தீர்வு குறித்தோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அக்கறை கொள்ளவில்லை என்று தெரிவித்திருந்தார். புதிய பாதுகாப்புப் படை அமைக்கப்படுவது குறித்து கருத்து வெளியிட்ட அவர் வடக்கில் அமைக்கப்படும் இத்தகைய கன்டோன்மென்ட்கள் இந்தியாவில் உள்ளவை போன்றதல்ல.

வடக்கில் உள்ள எந்தவொரு படைத்தளத்திலும் படையினரின் குடும்பத்தினர் தங்கவைக்கப்படவில்லை.

வடக்கிலுள்ள படைத்தளங்களுக்கு சென்று இதனை இந்தியக் குழுவினர் நேரில் சென்று உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்றும் அவர் கூறினார். (அ-2)

# உடற் பயிற்சி தொடர்பான வதிவிட பயிற்சி முகாம்

(பூந்தோட்டம்)

பாடசாலைகளில் நாளாந்தம் காலையில் மேற்கொள்ளும் உடற் பயிற்சி தொடர்பான வதிவிடப் பயிற்சி முகாம் ஒன்று கல்வி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சி முகாம் எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சி முகாமிற்கு கொழும்பில் இருந்து வருகை தரும் கல்வி அமைச்சின் நிபுணத்துவம் வாய்ந்த வளவாளர்கள் பங்கு பற்றி பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

இப்பயிற்சி முகாமில் வட மாகாணத்தில் உள்ள சகல கல்வி வலயங்களிலும் கடமையாற்றும் உடற் கல்வி பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களையும் உடற்கல்வி பாட ஆசிரியர் ஒருவரையும் கலந்து கொள்ளுமாறு வடமாகாண நிர்வாக மேலதிக கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் அறிவித்துள்ளார். (அ-3-266)

# மின்சார கட்டண உயர்வுக்கான காரணம் சரியாக இருக்க வேண்டும்

## தேசிய நுகர்வோர் இயக்கம்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை முன்வைக்கும் மின் கட்டண உயர்வுக்கான சூத்திரம் நியாயமானதாக அமையாது விடின் மின்சார சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தேசிய நுகர்வோர் இயக்கம் அறிவித்துள்ளது.

இந்த இயக்கத்தில் கிராம மட்ட நலன்புரி சங்கங்கள், நுண்பாக நிதிப்படுத்தல் மற்றும் கூட்டுறவு சங்கங்கள், சுற்றாடல் பாதுகாப்பு குழுக்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் என பல அமைப்புக்கள் அங்கம் வகிக்கின்றன.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நேற்று புதன்கிழமை புதிய மின் கட்டண சூத்திரத்தை அறிவிக்கும் என நம்பப்படுகின்றது. இதன் அடிப்படையில் இலங்கை மின்சார சபை இறுதி தீர்மானத்தை மேற்கொள்ளும்.

இந்த தீர்மானத்தை பொறுத்தே தேசிய மின் நுகர்வோர் இயக்கத்தின் சட்ட நடவடிக்கை அமையும் என இயக்கத்தின் ஆலோசகர் பந்துல சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

குறைந்த கட்டணத்தில் அல்லது மானிய அடிப்படையில் யாருக்கு மின்சாரம் வழங்குவது என்ற கொள்கைத் தீர்மானத்தை பற்றியும் நாம் அறிய வேண்டியுள்ளது.

ரூபாவின் குறைந்து செல்லும் பெறுமதி பெரும் திட்டங்களுக்காக பெற்ற கடன்களை அடைக்க வேண்டியிருத்தல் என பல பிரச்சினைகளை அரசாங்கம் எதிர்கொண்டுள்ளது.

இத்தோடு இலங்கை மின்சார சபை அடைந்துள்ள நட்டங்கள் என்பதையும் கருத்திற்கொண்டு மின் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படின் அது மக்களுக்கு பெரும் சுமையாகும் என அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)


## உங்கள் நேரத்தில் ஒரு துளியை, ஆதரவு தேவையானோருக்காகத் தர நீங்கள் தயாரா?

**ஆம் எனில், தொடர்ந்து படியுங்கள்.**

38 வருட அனுபவத்தைக் கொண்ட சிறிலங்கா சுமித்ரயோவின் யாழ்ப்பாணக் கிளையே **கை கொடுக்கும் நண்பர்கள்** தற்கொலைகளைத் தடுப்பதும் குறைப்பதும் எமது நோக்கமாகும். சேவை மனப்பான்மையுள்ள நன்கு பயிற்றப்பட்ட தொண்டர்களால் இப்பணி முன்னெடுக்கப்படுகிறது. இத்தொண்டர்களுடன் நீங்களும் இணைந்து கொள்ளலாம். வாரத்தில் ஒருநாள். நான்கு மணிநேரம் சம்பளம் எதுவுமின்றிப் பணியாற்ற நீங்கள் தயாராக இருக்கவேண்டும்.

ஒழுங்கு. கண்ணியம். அர்ப்பணிப்பு. ஆகியவற்றுடன் இரகசியம் பேணுதலும் உங்கள் முக்கிய கடப்பாடாக இருக்கும். குறிப்பான எந் தக் கல்வித் தகைமையோ தொழில் தகைமையோ அவசியமில்லை. வயதுக் கட்டுப்பாடின்றி எவரும் இணைந்து தொண்டாற்றலாம்.

அண்மையில் வரும் வார இறுதியொன்றில் கொழும்பில் இருநாட் பயிற்சி வழங்கப்படும். இதற்கான சகல போக்குவரத்து வசதிகளும் தங்குமிட வசதிகளும் ஏற்ற முறையில் செய்துகொடுக்கப்படும்.

104, நான்காம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் எமது நிலையம் இயங்குகிறது.

**ஆர்வமுள்ளவர்கள் 0778923480 என்ற தொலைபேசி எண்ணில் தாமதமின்றித் தொடர்புகொள்ளுங்கள்.**







## நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்

## அறிவித்தல்

## தற்காலிக கடைகள், திருவிழாக்கால உடை தேங்காய் ஏலம்

மேற்படி ஆலய வருடாந்த உயர் திருவிழா 09.06.2013 ஆம் திகதியன்று ஆரம்பமாகி 24.06.2013 ஆம் திகதி நிறைவு பெறும். இக்காலத்தில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்கு நிர்வாகத்தினால் சுட்டிக் காட்டப்படும் இடங்கள் 27.04.2013 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

உயர் திருவிழாக் காலத்தில் சேரும் உடை தேங்காய்களுக்கான பகிரங்க ஏலமும் அன்றைய தினத்திலேயே கூறப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன். பங்குபற்ற விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது வருகை தந்து நடைபெறும் பகிரங்க ஏலத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு:

01. குளிர்பான நிலையம் நடத்துபவர்கள் முறையான அனுமதிப்பத்திரம் பெறப்படவேண்டும்.
02. சுகாதாரம் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.
03. ஏலத்தில் வெற்றி பெறுபவர்கள் அன்றைய தினம் ஏலத் தொகையில் 1/3 பங்குத் தொகையைச் செலுத்தி பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளவேண்டும்.
04. மிகுதித் தொகையினை பத்தாம் (10) ஆம் திருவிழாவுக்கு இடையில் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

**அன்னையின் சேவையில்,**
**செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.**

(சி-3021)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருடைய மனம் ஏழைகளுக்காக இரக்கம் கொள்கிறதோ அவனையே மகாத்மா என்பேன்.
-சுவாமி விவேகானந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பொதுமக்கள் தண்டனை வழங்கும் சூழ்நிலை தோன்றுகின்றது

சட்டம் ஒழுங்கு சீர்குலைவதென்பது சடுதியாக ஏற்படுவதல்ல. அது மெல்லமெல்ல ஏற்பட்டு முழுமை பெறும். சட்டம் ஒழுங்கு சீர்குலைதல் எங்ஙனம் ஏற்படும் எனில் சட்டத்தை, ஒழுங்கை பாதுக்க வேண்டியவர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யாதபோது குலைவு ஏற்படுகின்றது.

எனவே ஒரு நாட்டில், ஒரு பிரதேசத்தில் சுமுகமான–அமைதியான சூழமைவு நிலைத்திருக்க வேண்டுமாயின், அங்கு சட்டத்தைப் பாதுகாக்கும் பிரிவு நேர்மையாகவும் உண்மையாகவும் விசுவாசத்துடனும் பணியாற்ற வேண்டும்.

சட்டத்தைப் பாதுகாக்கின்றவர்களே ஊழல், லஞ்சம் என்று களம் இறங்கி சதுராடினால் எல்லாமும் பரிநாசமாகிவிடும். இத்தகையதொரு நிலைமை வடக்கு மாகாணத்தில் ஏற்படுவதைக் காண முடிகின்றது.

அதன் வெளிப்பாடாகத்தான் வட பகுதியில் நாளாந்தம் கலாசாரப் பிறழ்வுகளும், சிறுவர்கள் மீதான வன்மங்களும் அடிபாடுகளும் பெருகிக் கொள்கின்றன.

இதனைத் தடுப்பது யார் என்ற கேள்வி ஏற்படுகின்றபோது, அரசு தமக்கு விசுவாசமான அதிகாரிகளை நிர்வாகத் துறைகளில் நியமிக்கும்போது அந்த அதிகாரிகள் தமது ஒவ்வொரு செயற்பாட்டின்போதும் தாம் எடுக்கின்ற நடவடிக்கை அரசின் கோபத்திற்கு தங்களை ஆளாக்கி விடுமோ என்ற ஏக்கத்தை தூண்டிவிடும்.

இதன் காரணமாக எந்தப் பணியையும் குறித்த உயர் அதிகாரிகள் துணிச்சலுடன் செய்ய முடியாமல் போய்விடுகின்றது.

இந்த அவல நிலைமை தனித்து நிர்வாகத் துறையில் மட்டும் அல்ல.நீதி பரிபாலனத்திலும் இருக்கவே செய்கிறது என்பதை அண்மைக் காலத்தில் இலங்கையின் நீதித் துறையில் நடந்த விவகாரங்கள் சான்றுப்படுத்தும்.

ஆக; சட்டம், ஒழுங்கு என்பன பலவீனம் அடையும்போது ஏற்படக்கூடிய சமூகப் பிறழ்வுகளை பொதுமக்கள் கண்டிக்கவும் தண்டிக்கவும் முற்படுவர்.

இந்தியாவின் டில்லி நகரில் மாணவி ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டபோது, பொதுமக்களும் மாணவர்களும் வெகுண்டெழுந்து பொது உடமைகளைத் தாக்கி தகர்க்க, மத்திய அரசு கவிழ்ந்துபோகுமோ என்று பயம் கொள்ளும் அளவிற்கு நிலைமை உச்சமடைந்தது. இஃது நாட்டிற்கு நாடு வேறுபட்டதல்ல.

எங்கள் வட பகுதியிலும் கைதடிச் சிறுவர் இல்லத்தில் நடந்த சம்பவம், யாழ்ப்பாணத்தில் இயங்கிய விடுதி ஒன்றில் நடந்த கேவலம் என்ற பட்டியல் பாராமுகப்பட்டு; நீளுமாயின் பொதுமக்கள், இளைஞர்கள் வெகுண்டெழுந்து அந்தந்த இடங்களைத் தாக்கி தகர்க்க முற்படக்கூடிய சூழமைவு உருவாகும் என்பது முன்னெச்சரிக்கைக்குரியது.

# ஐ.நாவின் முற்றத்தில் தமிழீழக் கொடி பறக்கும்

## பழ. நெடுமாறன் தெரிவிப்பு

191 நாடுகள் உருவான பிறகு தமிழீழம் சாத்தியம் இல்லை என்று சொல்பவர்கள் இன்னும் சிறிது காலத்திற்குள் ஐ.நாவின் முன்றலில் தமிழீழ கொடி பறப்பதைப் பார்ப்பார்கள் என பழ. நெடுமாறன் தெரிவித்தார்.

சென்னையில் நடைபெற்ற சுதந்திர தமிழீழம் பொதுவாக்கெடுப்பு என்ற தலைப்பில் வைகோ அவர்களின் புத்தகம் உரை ஒளிப்பட குறுந்தட்டு வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தும்போது பழ.நெடுமாறன் இதனை தெரிவித்துள்ளார்.

ஐ.நா.சபை அமைக்கப்பட்ட போது 1945-ம் ஆண்டு ஐ.நா பேரவையினை உருவாக்கும் முயற்சியில் 49 நாடுகள் தான் அதில் பங்கெடுத்தன.

ஆனால் இன்று 191 நாடுகளுக்கு மேல் ஐ.நா சபையில் அங்கம் வகிக்கின்றன.

இவை எல்லாம் ஆகாயத்தில் இருந்து விழுந்த நாடுகள் இல்லை. ஒன்றாக இருந்த நாடுகள் இரண்டாக பிரிந்து இத்தனை நாடுகள் உருவாகி ஐ.நா சபையில் அங்கம் வகிக்கின்றன.

இத்தனை நாடுகளின் கொடிகள் ஐ.நா முற்றத்தில் பறப்பதை பாக்கலாம்.

191 நாடுகள் உருவான பிறகு தமிழீழம் சாத்தியம் இல்லை என்று சொல்பவர்கள் இன்னும் சிறிது காலத்திற்குள் ஐ.நாவின் முற்றத்தில் தமிழீழக் கொடி பறக்கும்.

தலைவர் அவர்களை பயங்கரவாதி என்றெல்லாம் சித்தரித்தவர்கள் அதே தலைவர் அவர்களை ஐ.நாவிற்கு அழைத்து அங்கு பேச்சு நடத்துவார்கள்.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் ஒப்பற்ற தலைவரும் இவ்வாறு தான் சொன்னார். இவ்வாறு அவர் பேசினார்.

## கல்வியியற் கல்லூரி சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2009/2011 ஆம் கல்வி ஆண்டில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமாப் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கான டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கு வைபவம் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கென ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் 2500 ரூபா செலவாகவுள்ளமையால் ஏற்கெனவே அவர்களின் வைப்புப் பணம் 1500 ரூபாயை விட மிகுதி 1000 ரூபாயை உடனடியாக கல்லூரிக்கு செலுத்த வேண்டும் எனவும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிற்சியை முடித்துக் கொண்ட ஆசிரியர்கள ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதிக்கு முன் குறித்த தொகையை கல்லூரியில் செலுத்துமாறும் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார். (ஏ)

# உலகின் பிடியிலிருந்து இலங்கை தப்பிக்க முடியாது

## வைகோ உரை

(சென்னை)

உலக நாடுகளின் பிடியிலிருந்து இலங்கை இனியும் தப்பிக்க முடியாது இதன்மூலம் சுதந்திர தனிஈழம் விரைவில் நனவாகும் வாய்ப்புள்ளது என் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் நகரில் செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை தமிழர்களுக்கு அரசியல் நீதி கேட்டு மாணவர்கள் நடத்திய போராட்டம் தனி சிறப்பு வாய்ந்தது.

பொதுவாக்கெடுப்பு நடத்தி சுதந்திர ஈழம் அமைவதற்கு சட்ட பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என மார்ச் மாதம் 24 ஆம் திகதி கோரிக்கை விடுத்தேன். அந்த தீர்மானம் 27ஆம் திகதி சட்டப் பேரவையில் நிறைவேற்றப் பட்டுள்ளது.


இதேபோல பாராளுமன்றத்திலும் இத்தீர்மானம் நிறைவேறும் நாள் விரைவில் வரும். ஆனால் தற்போதைய அரசு அதை செய்யாது. இந்த அரசின் நாட்கள் எண்ணப்படுகின்றன. விரைவில் புதிய அரசு அமையும்.

அப் போது இந்த தீர்மானம் நிறைவேறியே தீரும் வைகோ தெரிவித்துள்ளார். (எ-11)

## சத்திய தரிசனம்



சம்சார சாகரத்தைக் கடக்க பக்தியென்ற ஓடமே சிறந்தது. சுமைகளை எல்லாம் தூர எறிந்துவிடு. நீ இலேசாகி, அலைகளின் மேலேயே நடந்துசென்று அந்த சாகரத்தைக் கடந்து விடுவாய். கடவுள் உன்னை அழைத்துச் செல்வார். நான் உன்னிடம் இது ஒன்றுதான் கேட்கிறேன். உன் மனம் துக்கத்திலும் குரோதத்திலும் தத்தளிக்கும்போது நீ என்னிடம் வா. உன் மனதின் ஆழங்களை அவை எவ்வளவுதான் அசிங்கமாக இருந்தாலும் அவை எவ்வளவுதான் ஏமாற்றங்களால் தாக்கப்பட்டிருந்தாலும் என்னிடம் இறக்கி வைத்துவிடு. நான் உன்னைக் குணப்படுத்தி விடுவேன். விலகிப்போகச் சொல்லமாட்டேன். நான் உன் அன்பு அன்னை.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

# பெற்றோர்களை தினமும் கால் தொட்டு வணங்க வேண்டுமா?

தாய், தந்தையரையும் குருவையும் தினசரிக்கடமையாகக் கால் தொட்டு வணங்கவேண்டும் என்பது நம் முன்னோர்கள் வகுத்திருந்த விதி.

தாய் தந்தையருக்கும் குருவுக்கும் ஓர் மலர்ந்த புன்னகைகூட வழங்காத இத்தலைமுறைக்கு இந்த விதி ஓர் பழைய ஏற்பாடு. குருபக்தி அழிந்துவரும் இந்த தலைமுறைகளை வார்த்தெடுக்க இயலும் என்று நம்பிக்கை தரும் சில ஆசாரியர்களின் மூதுரைகளும் உள்ளன.

மதிப்பைத் தெரிவிக்கும் நான்கு ஆசாரங்கள் நாம் கண்டு வருகின்றோம். அதில் முதலாவது வணக்கம் என்றுகூறுவது. இரண்டாவது பெரியோர்களைக் கண்டால் எழுந்து நிற்பது. மூன்றாவது கால் தொட்டு வணக்கம். இறுதியாக சாஷ்டாங்க வணக்கம்.

தினமும் காலையில் பெரியவர்களின் கால் தொட்டு வணங்குவதனால் அவர்களுடைய ஆசீர்வாதம் பெறலாம் என்று நம் விசுவாசப் பிரமாணங்கள் கூறுகின்றன. அவர்கள் நமக்கு செய்த சேவைகளை நினைத்துத்தான் நாம் கால் தொட்டு வணங்குகிறோம். பதிலாக அவர்கள் ஆசியையும் பெறுகின்றோம்.

யோகாப்பியாசத்தை சிறந்த ஓர் உடற்பயிற்சியாகக் கண்டறிந்து வரும் இந்த நவீன காலத்தில் கால் தொட்டு வணங்குதல், சாஷ்டாங்க வந்தனம் என்பவை மிக முக்கியமான யோகா முறைகள். அதனால் இதை சிறந்த ஓர் உடற்பயிற்சியாகவும் காணலாம்.

பெற்றோர்களை வணங்குதல் குடும்பத்தில் ஒற்றுமையை உண்டாக்கும். பாசமும் நெருங்கிய உறவும் உறுதிப்படுகின்றன. இத்துடன் வீட்டில் நிலவும் நிம்மதியின்மையும் போய்விடும் என்ற விசுவாசமுண்டு.

பாதங்களுக்குத் தனிச்சிறப்பான தன்மைகள் உள்ளதாக புராணங்களும் முனிவர்களும் கருதியிருந்தனர். இறைவனின் திருப்பாதங்களையே முனிவர்கள் வணங்கியிருந்தனர். இந்து தர்மங்களில் சேவைகள் செய்யும் அரிஜன மக்கள் இறைவன் பாதங்களினின்று உதித்ததாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

ப்ரணாமோ துக்க சமனம்
தம் நமாமி ஹரிம்வரம்

என்று பாகவதத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடன மாதுவை தாக்கியது பந்து

நேற்று முன்தினம்நடைபெற்ற டில்லி - பெங்களூர் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் மைதானத்திற்கு வெளியே நின்று நடனமாடிய மங்கை ஒருவர் பந்து தாக்கி காயமடைந்தார்.

போட்டியின் 19ஆவது ஓவரில் ராம்பால் வீசிய பந்தை சிக்சருக்கு பறக்க விட்டார் டில்லி அணியின் கேதார் ஜாதவ். இந்த பந்து எல்லைக் கோட்டுக்கு வெளியே அமர்ந்திருந்த நடனப் பெண் மீது பட்டதில் காயமடைந்தார். உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## தேர்தல் பிரசாரத்துக்கு அப்ரிடி!



பாகிஸ்தானில் அடுத்த மாதம் பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளது. அதற்கான பிரசாரமும் அங்கு சூடுபிடித்துள்ளது. இந்நிலையில் நாட்டு மக்களிடையே தேர்தலில் வாக்களிப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பாக அந்நாட்டின் நட்சத்திர கிரிக்கெட் வீரரான ஷாகித் அப்ரிடியை தேர்தல் கமிஷன் அணுகியுள்ளது.

'ஏற்கனவே குழந்தைகளுக்கான போலியோ சொட்டு மருந்து விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுப்பட்ட நான், இப்போது தேர்தலில் வாக்களிப்பது குறித்த பிரசாரத்தில் கலந்துகொள்வேன்' என ஷாகித் அப்ரிடி கூறியுள்ளார்.

## இறுதிக்குள் நுழைந்தது மான்செஸ்டர்




எப்.ஏ., காற்பந்து தொடரின் அரையிறுதியில், செல்சி அணியை வீழ்த்தி மான்செஸ்டர் சிட்டி அணி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

லண்டனில் நடந்த எப்.ஏ., காற்பந்து தொடரின் அரையிறுதியில், மான்செஸ்டர் சிட்டி, செல்சி அணிகள் மோதின. ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய மான்செஸ்டர் சிட்டி அணிக்கு, போட்டியின் முதல் பாதியில் சமிர் (35வது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு செல்சி அணி வீரர்களால் பதிலடி கொடுக்கமுடியவில்லை. இதனால் போட்டியின் முதல் பாதியில் மான்செஸ்டர் சிட்டி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் தொடர்ந்து அசத்திய மான்செஸ்டர் சிட்டி அணிக்கு செர்ஜியோ (47) ஒரு கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். செல்சி அணிக்கு டெம்பா (66) ஒரு கோல் அடித்து ஆறுதல் அளித்தார்.

முடிவில், மான்செஸ்டர் சிட்டி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தது. மே 11இல் லண்டனில் நடக்கும் இறுதி ஆட்டத்தில் மான்செஸ்டர் சிட்டி, விகான் அத்லெடிக் அணியை எதிர்கொள்கிறது.

## எங்கும் நண்பர்கள்...



இந்தியாவின் நுழைவாயில் அருகே இடம்பெற்ற படகோட்ட நிகழ்வில் சென்னை சுப்பர் கிங்ஸ் வீரர் சுரேஷ் ரெய்னா மற்றும் சன் ரைசர்ஸ் அணியின் வீரர் ஷிகார் தவான் ஆகியோர் கலந்துகொண்டபோது...

# கிரிக்கெட்டா..? சினிமாவா??

## தெரிவு மகன் கையில் என்கிறார் விஜய்!



சமீபகாலமாக சினிமாத்துறையைச் சேர்ந்தவர்கள் தங்களது வாரிசுகளையும் தங்களைப்போலவே சினிமா நட்சத்திரமாக்க வேண்டும் என்பதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

மாறாக நடிகர் விஜயின் மகன் ஓர் கிரிக்கெட் வீரராக வர விரும்புகிறாராம்.

இது குறித்து நடிகர் விஜய் கூறுகையில், வேட்டைக்காரன் படத்தில் ஒரு பாடல் காட்சியில் என் மகன் சஞ்சய் என்னுடன் நடனமாடினான்.

அவன் ஆட வேண்டும் என்று விரும்பியதால் ஒரு அப்பாவாக அவனது ஆசையை நிறைவேற்றினேன். ஆனால் என் மகனை சினிமாவில் நடிகனாக்க வேண்டும் என்று நான் ஆசைப்படவில்லை.

அவனுக்கு எதில் ஈடுபாடு இருக்கிறதோ அதில்தான் விடுவேன். தற்போதைக்கு அவனுக்கு கிரிக்கெட் வீரனாகும் ஆசைதான் உள்ளது. அதனால் ஒரு பயிற்சியாளரை நியமித்து கிரிக்கெட் பயிற்சி கொடுத்து வருகிறேன்.

மேலும், என் பெற்றோர் என்னை கல்லூரியில் படிக்க வைக்க ஆசைப்பட்டார்கள். ஆனால் நான் நடிப்பில் ஆர்வமாக இருந்தேன். அதனால் எனக்காக என் அப்பா சொந்த படமெடுத்தார்.

ஆனால், என் மகனை அப்படி விடமாட்டேன் என்றும் கண்டிப்பாக கல்லூரி படிப்பை முடித்த பின்னர்தான் அவன் விரும்பும் துறையில் ஈடுபடுத்துவேன் எனவும் கூறினார்.

# 'விஜேந்தர் சிங் நல்லபிள்ளை'

## சான்றிதழ் கொடுத்தது தேசிய ஊக்கமருந்து தடுப்பு அமைப்பு


பிரபல குத்துச்சண்டை வீரர் விஜேந்தர் சிங் போதைப் பொருள் உட்கொள்ளவில்லை என தேசிய ஊக்கமருந்து தடுப்பு அமைப்பு மேற்கொண்ட சோதனையில் தெளிவாகியுள்ளது.

ஹரியானா மாநிலம் ஜிராக்பூரில் கடந்த மார்ச் 3ஆம் திகதி ரூ.130 கோடி மதிப்பிலான போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக கனடா வாழ் இந்தியரான அனுப் சிங் என்பவர் கைது செய்யப்பட்டு அவரிடம் விசாரணை நடத்தியபோது, விஜேந்தர் சிங், அவருடைய நெருங்கிய நண்பரும், குத்துச்சண்டை வீரருமான ராம் சிங் ஆகியோர் தனது வாடிக்கையாளர்கள் என்று கூறினார்.

இதையடுத்து ராம் சிங்கிடம் விசாரணை நடத்திய பொலிஸார், சில நாட்களுக்கு முன்பு அவரை கைது செய்தனர். மேலும் விஜேந்தர சிங் 12 முறை போதைப் பொருள் உட்கொண்டதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர். இதையடுத்து அவருக்கு ஊக்கமருந்து சோதனை நடத்த வேண்டும் என பொலிஸ் தரப்பில் கூறப்பட்டபோது, அதற்கு விஜேந்தர் சிங் மறுத்துவிட்டார்.

எனினும் மத்திய விளையாட்டு அமைச்சகத்தின் தலையீட்டின்பேரில் கடந்த 3ஆம் திகதி இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரிகளை தேசிய ஊக்கமருந்து தடுப்பு அமைப்பிடம் வழங்கினார் விஜேந்தர் சிங். அவருடன் மேலும் 4 குத்துச்சண்டை வீரரகளின் மாதிரிகள் பெறப்பட்டன..

இந்த நிலையில், தற்போது



சோதனை முடிவு வெளியாகியுள்ளது. அதில் விஜேந்தர் சிங் உள்ளிட்ட 5 பேரும் எவ்வித தடை செய்யப்பட்ட பொருளையும் பயன்படுத்தவில்லை என்பது தெளிவாகியுள்ளது.

இன்றைய ஆட்டம்

CHENNAI SUPER KINGS

இரவு 8 மணி

Vs

DELHI DAREDEVILS

## முதன் முறையாக மரதன் அவுட்!


இரட்டை குண்டு வெடிப்பைத் தொடர்ந்து, பொஸ்டன் மரதன் போட்டி அதன் வரலாற்றில் இப்போதுதான் முதல் முறையாக தடைபட்டது. கடந்த 1896ஆம் ஆண்டில் நடைபெற்ற கோடைகால ஒலிம்பிக் போட்டியில்தான் முதல் முறையாக நவீன கால மரதன் ஓட்டப் பந்தயம் நடத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து, 1897இல் அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் மரதன் போட்டி நடத்தப்பட்டது. அப்போது முதல், கடந்த 116 ஆண்டுகளாக ஆண்டுதோறும் ஏப்ரல் மாத மூன்றாம் திங்கட்கிழமை இப்போட்டி நடந்து வருகிறது. இது உலகில் நடைபெறும் 6 மிகப்பெரிய மரதன் போட்டிகளில் ஒன்றாகும்.

இதில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு ஓடுவதும், அவர்களை இலட்சக்கணக்கான மக்கள் உற்சாகப்படுத்துவதும் வழக்கம். மாறுபட்ட இயற்கைச் சூழ்நிலைகளான பனிப்பொழிவு, மழை, கடும் வெயில், குளிர் ஆகியவை நிலவினாலும் இத்தனை ஆண்டுகளில் இப்போட்டி நிறுத்தப்பட்டதே இல்லை. ஆனால், கடந்த திங்கட்கிழமை நிகழ்ந்த குண்டு வெடிபபால் மரதன் போட்டி முதல் முறையாக நிறுத்தப்பட்டது. இம்முறை, 17, 500 பேர் மட்டுமே எல்லைக் கோட்டை எட்டினர். 5. 500 பேரால் இலக்கை எட்ட முடியாமல் போனது துரதிர்ஷ்டம்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்காவிடம் சரண்டரானார் மத்தியூஸ்



விறுவிறுப்பான போட்டியில் மத்தியூஸின் அணியை வீழ்த்தியது சங்கக்காரவின் அணி.

ஐ.பி.எல் கிரிக்கெட்டின் 22 வது லீக் போட்டி நேற்று மாலை 4 மணிக்கு தொடங்கியது. இதில் புனே வாரியர்ஸ்-ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணியும் விளையாடின.

முதலில் துடுப்பெடுத்தடிய ஹைதராபாத் அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

தொடக்க ஆட்டக்காரர்களான பட்டெல் 12 ரன்னிலும் டிகாக் 2 ரன்னிலும் வெறியேறினர்.

அந்த அணியில் அதிகபட்சமாக சமந்த 37 ரன்கள் எடுத்தார். புனே அணியின் சிறப்பாக பந்து வீசிய புவனேஸ் குமார் 3 விக்கெட்களை வீழ்த்தினார். இறுதியில் ஹைதராபாத் 20 ஓவர் முடிவில் 119 ரன்கள் மட்டுமே எடுத்தது.

இதனையடுத்து களமிறங்கிய புனே வாரியர்ஸ் ஆரம்பத்தில் நிதானமாக விக்கெட்டுகளை பறிகொடுத்தாலும் கடையில் மளமளவென விக்கெட்டுகளை இழந்தது. அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் உத்தப்பா 22 ரன்னிலும் பின்ஜ் 16 ரன்னிலும் வெறியேறினர்.

இறுதியில் புனே வாரியர்ஸ் அணி 108 ரன்கள் மட்டுமே எடுத்து ஹைதராபாத் அணியிடம் படுதோல்வி அடைந்தது. ஹைதராபாத் அணியில் அபாரமாக பந்து வீசிய மிஸ்ரா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். போட்டியின் ஆட்ட நாயகனாக சன்ரைசர்ஸ் அணியின் அமித் மிஸ்ரா தெரிவானார்.



# மும்பையை பந்தாடியது ராஜஸ்தான் றோயல்ஸ்




மும்பை அணிக்கு எதிரான போட்டியில் ராஜஸ்தான் அணி 87 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

ஐ.பி.எல் சீசன் கிரிக்கெட் திருவிழாவில் நடைபெற்ற 23 வது லீக் போட்டியில் ராஜஸ்தான் ரோயல்ஸ்-மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் அணித் தலைவர் ராவிட் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இதனையடுத்து களமிறங்கிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 179 ரன்களை எடுத்தது.





அதிகபட்சமாக ரஹானே 68 ஓட்டங்கள் குவித்தார்.

180 ஓட்டத்தினை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய மும்பை அணி ராஜஸ்தானின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 18.2 ஓவர்களில் 92 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

போட்டியின் ஆட்டநாயகனாக ராஜஸ்தான் அணியின் ரஹானே தெரிவானார்.

# பிரபாகரனை சந்தித்தாரா சிதம்...

தித்து இலங்கை பிரச்சினையில் தீர்வு ஏற்படுத்த முயன்றதாக அமைச்சர் ப.சிதம்பரம் பேசியுள்ளாரே?

ப: பாண்டிபஜார் துப்பாக்கிச் சூடு சம்பவத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன், ராகவன் பிளாட் தலைவர் முகுந்தன் ஆகியோர் 1983 இல் கைது செய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். பிரபாகரனுக்காக மூத்த வழக்கறிஞர் என்.டி.வானமாமலையும் நானும் ஆஜராகி பிணை வாங்கிக் கொடுத்தோம்.

முகுந்தன் சென்னையிலும் பிரபாகரன் மதுரையிலும் தங்கிஇருக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

அதன் பிறகு திருவான்மியூர் காமராஜர் நகரில் சிறிது காலம் பிரபாகரன் தங்கியிருந்தார். பின்னர் அடையாறு இந்திரா நகருக்குக் குடிபெயர்ந்தார்.

1983 இறுதியில் பாலசிங்கம் சென்னை வந்தார். நானும் பேபி சுப்பிரமணியன் என்ற இளங்குமரனும் அவரை இரண்டு வாரங்கள் நியூ உட்லண்ட்ஸ் விடுதியில் தங்கவைத்தோம். அதன் பிறகு பெசன்ட் நகர் வேளாங்கன்னி மாதா கோயில் அருகிலுள்ள வீட்டில் பாலசிங்கம் தங்கி இருந்தார். பின் அவர் அடையாறு இந்திரா நகரில் தங்கினார்.

ஆக 1983க்குப் பிறகு அவர்கள் கோடம்பாக்கத்தில் தங்கவே இல்லை. பிரபாகரன் பாலசிங்கம் ஆகியோர் கோடம்பாக்கத்தில் தங்கி இருந்தபோது 1984இல் சந்தித்து இலங்கை பிரச்சினை குறித்து பேசியதாக நிதி அமைச்சர் சிதம்பரம் கூறுவது வியப்பாகவும் வேடிக்கையாகவும் இருக்கிறது. 1980 தொடக்கத்தில் இருந்து பாண்டிபஜார் சம்பவம் வரை மயிலாப்பூர் சாலைத் தெருவில் நெடுமாறனின் பழைய வீட்டில் என்னுடன் பிரபாகரன் தங்கியிருந்தார்.

கே: இலங்கை பிரச்சினையில் இந்திய ஆட்சியாளர்கள் பொறுப்புடன் செயல்படவில்லை என்று இலங்கை பாதுகாப்புத் துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளாரே?

ப: இந்தியா இல்லை என்றால் இலங்கை இல்லை. சேதுக்கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற பிரதமர் நேரு அமைச்சரவை 1963 இல் ஒப்புதல் அளித்தது.

சேதுத்திட்டம் நிறைவேறினால் இலங்கையின் பொருளாதாரமே சீர்குலைந்துவிடும் என்று இலங்கை ஆட்சியாளர்கள் மன்றாடினர்.

அண்டை நாடு என்ற ரீதியில் அந்தத்திட்டத்தை நேரு கைவிட்டார். சாஸ்திரி-ஸ்ரீமாவோ ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்திய வம்சாவழி தோட்டத்தொழிலாளர்கள் திரும்ப அழைக்கப்பட்டனர். அந்த நடவடிக்கையே தவறு என்று கண்டித்தோம்.

ஆனாலும் இலங்கையின் பொருளாதார சிக்கலைத் தவிர்க்க அந்த முடிவை இந்தியா ஏற்றுக் கொண்டது.

இந்திரா காந்தி காலத்தில் இருந்து தொடர்ந்து இன்றளவும் உதவுகிறோம்.

இந்தியாவின் செயல்பாட்டை குறை சொல்ல சிங்கள ஆட்சியாளர்களுக்கு அருகதையே கிடையாது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்களும் சிறந்த முதலீட்டாளராகலாம்"

பங்குச்சந்தை முதலீட்டாளர்களுக்கான

பயிற்சிப்பட்டறை

யாழ்.நகரில் ஒவ்வொரு சனிக்கிழமைகள் தோறும்.

(9.00-12.00)

தொடர்பு: 0777822014 www.cse.lk

COMPUTER COURSES

Diploma in Computerized **Accounting** Tally, Quick Book, Accpac M.Y.O.B

Diploma in **Video Editing** Premiere Pro CS4, particleIllusion, Pinnacle Studio, Adobe After Effe. Nuendo,

Diploma in **AutoCAD** 2D & 3D Modeling

Adv. Dip. in **Hardware & Networking**

புதிய பிரிவுகள் ஆரம்பம்.
DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V.வீதி (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470
சாவகச்சேரி No.174, கண்டி வீதி, HNB அருகில் Tel. :021-227 0775
சுன்னாகம் KKS வீதி, ஜெட் மோட்டோஸ், NSB அருகில். Tel. :021-224 1970

காணி விற்பனைக்குண்டு

மணியந்தோட்டம்–சந்தியில் 4¾ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

முகவர் தேவையில்லை

தொடர்புகளுக்கு:
075 0404083 (2398)

மலேசியா நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

Welders 20பேர் உடனடியாக தேவை. ஒட்டுநர் துறையில் அனுபவம் வாய்ந்தவர்களா? நீங்கள் அப்படி என்றால் ஒட்டுநர் துறையில் அதி உயர் சம்பளத்துடன் மிக குறைந்த கட்டணத்தில் பயணமாக தயாராகுங்கள். 3 வருட ஒப்பந்தம், தங்குமிடம், மருத்துவம் இலவசம். உங்கள் விண்ணப்பங்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ்ப்பாணம் LANKA VOICE நிறுவனத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். (சி-3014)

மேலதிக விபரங்களுக்கு: 077 6439204

உடனடி வேலைவாய்ப்பு

மத்திய கிழக்கு மற்றும் செல்வந்த நாடு களில் பெண்களுக்கான/ Couples திருமணமான தம்பதியினர்களுக்கும் உடனடி வேலைவாய்ப்பு. செல்வந்த நாடுகளில் பாதுகாப்பான செல்வந்த வீடுகளில் தொழிலொன்றை பெற்றுக் கொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் விண்ணப்பங்கள் கீழ்காணும் முகவரியில் எதிர்வரும் 21.04.2013 காலை 9.00மணி முதல் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு: LANKA VOICE
(சி-3015) 0777 950 952

## அமைச்சர்...

வரும் 21ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் அமைச்சர் மகிந்த சமரசிங்க இலங்கையில் பொருளாதார நிலைமைகள் தொடர்பில் இன்று விசேட உரை ஒன்றை நிகழ்த்தவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## கைதடி சிறுவர் இல்...

சிறுமியர்கள்தான் தங்கியிருந்தனர் அதில் 12 சிறுமியர்கள் இல்லத்தை விட்டு வெளியேறியிருந்தனர் இருப்பினும் ஒருவர் ஒரு சில மணித்தியாலயங்களில் இல்லத்திற்கு திரும்பி வந்துவிட்டார்.

மருத்துவ பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறுமியர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை மற்றும் பரிசோதனை மூலம் அவர்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தலுக்கு ஆளாகவில்லை என்பது தெரியவந்துள்ளது.

குறித்த இல்லத்தில் தங்கியிருந்த சிறுமியர்கள் சிலருக்கும் நிர்வாகத்தினருக்கும் ஏற்பட்ட அடிப்படை முரண்பாடு காரணமாகத்தான் அவர்கள் இல்லத்தை விட்டு வெளியேறியிருந்தனர்.

யாழ்.சிறுவர் நீதிமன்ற நீதவானின் உத்தரவிற்கு அமைவாக மீண்டும் 21 சிறுமிகள் இல்லத்திற்கு அவர்களின் விருப்பத்தின் பேரில் கொண்டு வரப்பட்டுள்ளனர் ஏனைய மூன்று சிறுமியர்களும் கொழும்புத்துறை நம்பிக்கையில்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு கைது செய்யப்பட்ட இல்லத்தின் பொறுப்பதிகாரியாக பணிபுரிந்த நபர் எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் குறித்த இல்லத்தில் நன்னடத்தை உத்தியோகத்தர் பார்வையிட்டதற்கான கையேடுகள் எதுவும் பாவனையிலிருந்திருக்கவில்லை இதனால்தான் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றது என நீதிமன்றில் அறிக்கை சமர்பிககப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் 21 சிறுமிகள் மீளவும் இல்லத்திற்கு கொண்டுவரப்பட்டதோடு பெண்களை மட்டும் உள்ளடக்கியதாக நிர்வாகம் ஒன்று புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ளது எனவும் பெண் காவலாளி ஒருவர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## மரண அறிவித்தல்



### கமலேஸ்வரி திருஞானசம்பந்தர்

தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கமலேஸ்வரி திருஞானசம்பந்தர் நேற்று (17.04.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திருஞானசம்பந்தரின் அன்பு மனைவியும் றஞ்சனா, காலஞ்சென்ற ஈஸ்வரி, மற்றும் கமலவதனி ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேந்திரம், காலஞ்சென்ற அம்பிகைபாலன், மற்றும் சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவபாக்கியம் (ஜேர்மனி), நடராசா (இத்தாலி), பாலசுப்பிரமணியம், தேவராசா (ஜேர்மனி), சத்தியபாமா (லண்டன்), கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கோபிநிக்சன் (கனடா), கோபிதன் (உக்ரேன்), ஸ்ரீராம், மிதுஷா, சுலக்சன், ஜதுர்சன், சிவன்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2013) வியாழக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி வடக்கு,
கொக்குவில். (2400)

தகவல்:
குடும்பத்தினர்

## பெங்களூரில் நேற்...

வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்த பின்னர் மதியம் 12.30 மணியளவில் இராண்டாவது குண்டு வெடித்துள்ளது.

பெங்களூர் பாரதீய ஜனதாகக் கட்சியின் அலுவகம் அருகே மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் எட்டுப் பொலிஸார் உட்பட 13 பேர் காயமடைந்துள்ளனர்.

இக்குண்டு வெடிப்பில் ஒரு பொலிஸ் வாகனம் உட்பட நான்கு வாகனங்கள் எரிந்து சாம்பலாகி உள்ளதாக இந்தியச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

கர்நாடக மாநிலத்தின் சட்ட சபைக்கான் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் அதற்கான வேட்பு மனுவைத் தாக்கல் செய்யும் இறுதி நாள் நேற்று என்பதால் பெங்களூர் பாரதீய ஜனதாகக்கட்சியின் அலுவலகத்தில் நூற்றுக்காணக்கான தொண்டர்கள் குவிந்திருந்தனர்.

இந்த குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்த இந்திய தேசிய புலானாய்வு அமைப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து புதுடில்லியில் இருந்து கறுப்புப் பூனைப் படை எனப்படும் தேசிய பாதுகாப்புப் படைப்பினர் பெங்களூர் விரைந்துள்ளதுடன் இந்தியா முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (எ-11)

## இலங்கையில் செயற்...

டுள்ளது.

இந்தத்தாக்குதலை நடத்தியவர்கள் இலங்கையில் இருந்தே அமெரிக்கா சென்றிருப்பதாகவும் ஈரானின் புலனாய்வுத்துறை அமைப்பு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் அமெரிக்காவின் அரசாங்கமோ அல்லது அமெரிக்க புலனாய்வுத் தரப்புக்களோ இந்த தகவல் தொடர்பில் இன்னும் எந்த பதிலையும் வழங்கவில்லை. (எ-11)

வடமாகாணத்தில் ஆங்கிலம் மற்றும் பிறமொழிக் கற்கைநெறிகளைக் கற்பிப்பதில் அசைக்கமுடியாத நிறுவனம்

எமது பாடநெறிகள் | International Certificates

DIPLOMA IN ENGLISH
சனி / ஞாயிறு தினங்களில் காலை 7.30 – 10.00 வரை

IELTS
உங்கள் Band score 6.5 இற்கு மேல் பெற உத்திரவாதம்
Sat-Sun 11.00 - 2.00 P.M

A1, A2, B1, B2
U.K விசா மூலம் செல்பவர்களுக்கானது
Sat - Sun 3.00 - 6.00 P.M

French / Dutch Courses
பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மனி நாடுகளுக்கு செல்பவர்களுக்கு

SPOKEN SINHALA
Sat - Sun 8.30 - 10.30 P.M

அனைத்துப் பிரிவுகளும் ஆரம்பம்
20.04.2012 காலை 9.00 மணி

E-CITY
College of English & IT Skills Development
FEEL BRILLIANT FUTURE

இல 372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் (வீரகாளி அம்மன் கோவில் அருகில்)
0774924166 / 0770610271

**MCS** தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பயின்று சித்திரை 5, 2013 அன்று கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் **Bachelor of IT, Diploma in IT, Higher Diploma in IT** பட்டம் பெற்ற மாணவர்களிற்கு வாழ்த்துக்கள்

–விரிவுரையாளர்களும் மாணவர்களும்



M.Kokulan, BIT, MCSE, OCJP P.Senthuja, BIT S.Logini, BIT S.Priyanka, BIT N.Sarathadevy, BIT, A.Thirumakal, BIT Balananthini, BIT



S.Theivamainthan, S.Sanjivkumar, T.Bakeerathan, R.Chithamparanathan, S.Kavitha, A.Puvanesan, M.Kayathiri, T.Kuganithy, S.piriyatharsini, V.Saseekaran, R.Raguraam, J.Thayalini, S.Kavitha, R.Niroshini, N.Senthuran, P.Kaitheki, P.Uthayanthy, S.Sangeetha, S.Kavitha, P.Kaitheki, S.Priyatharsini,

HND EDEXCEL, BCS மாணவர்களிற்காக Software Project (java, VB.net, C,C++, C#.net, PHP, ASP.net, Ajax, Jquery, Javascript ,CSS, HTML, SQL Server, Android) பிரத்தியேக வகுப்புகளும் நடைபெறுகின்றன.

புதிய மாணவர்களிற்கான பதிவுகளும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. உயர்தரப்பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் நேரடியாகவும், சித்தியடையத் தவறியோர் **FIT** கற்கை நெறியில் சித்தியடைவதன் மூலமும் இக்கற்கை நெறியை பயில முடியும். பல்கலைக்கழக மாணவர்களும் இக் கற்கை நெறியை மேலதிகமாக தொழில் வாய்ப்புக்கருதி பயில்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கி உள்ளது. **MCS** நிறுவனத்தில் **BIT** கற்கைநெறியில் இணைந்து கொழும்பு பல்கலைக் கழகத்தின் பட்டதாரி ஆவதுடன் **MCSE, CCNA, OCJP, MBCS, MIEEE** பட்டங்களையும் பெற்று உயர்ந்த தொழில் வாய்ப்பை பெற முடியும். இக்கற்கை நெறிகள் தொடர்பாக பெற்றோருக்கான கலந்துரையாடல் 20ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறும். மேலதிக விபரங்களை 324, பலாலி வீதி பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள **MCS IT CAMPUS** நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

.தொலைபேசி இலக்கம் 772395895

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.